358

திருப்புல்லாணி யமக வந்தாதி

ரா. இராகவையங்கார்

பதிப்பாசிரியர்
பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை

திருப்புல்லாணியமக வந்தாதி

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்
சேது சமத்தான மகாவித்துவான்
பாஷா கவிசேகரர்

ரா. இராகவையங்கார்

பதிப்பாசிரியர்

பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை
(ஓய்வு-தமிழ்ப் பல்கலைக் கழகம்)

கவிமணி வெளியீடு
61, பாலகிருஷ்ண நாயக்கர் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-600 033.

முதற் பதிப்பு : மே - 1996

உரிமை : பேராசிரியர் டாக்டர் ரா. விஜயராகவன்

விலை : ரூ. 20-00

விற்பனை உரிமை :

பாரதி புத்தகாலயம்
ஜி-7, அமுதம் குடியிருப்பு
தெற்குப் போக்குச் சாலை
தியாகராய நகர்
சென்னை-600 017

ஸ்ரீ வெங்கடேஸ்வரா அச்சகம், பரங்கிமலை, சென்னை-16.

திருப்புல்லாணித் தென்னர் தமிழ்

சேது என்பது சீராமமூர்த்தி கடலில் இட்ட திருவணை. இது கன்னியாகுமரி தொடக்கமாக உள்ளது! என்பது மணிமேகலை நூலுள் மணிமேகலா தெய்வம் தோன்றிய காதையில் 'குரங்குசெய் கடற் குமரியும் பெருந் துறை' என வருவதனால் அறியப்படும். சேதுவை அடுத்த நாடு சேதுநாடு என வழங்கப்படுகிறது.

சேது நாட்டுக்கு ஓர் திலகம் போன்று விளங்குவது திருப்புல்லாணி என்னும் திவ்யதலம். இது இராமநாத புரத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்தில், ஆதிசேதுக் கரையில் இலங்குகிறது. இத்தலத்துப் பெருமாள் திருநாமம் தெய்வச்சிலையான் என்பது. கோயில் பிராகா ரத்தில் சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமபிரான் தர்ப்பாசயனத்தில் சயனத்திருக்கோலமாய் காட்சி தருகிறார். இத் திருப்பதியைத் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார் (பெரிய திருமொழி— 9 ஆம் பத்து 3, 4 திருமொழி). பெரிய திருமடல் பிரபந்தத்தில் திருமங்கையாழ்வார் இத்தலத்து மூர்த்தியை 'புல்லாணித் தென்னர் தமிழை வடமொழியை' என்று சிறப்பிக்கிறார். தெய்வமே தென்மொழி வடமொழித் திருவுருக் கொண்டு திகழ்வது இத்தலத்தின் சிறப்பு.

புல்லாணி அம்மான்

கா ஆர் மடல் பெண்ணை அன்றில் அரிகுரலும்
ஏ வாயினூடு இயங்கும் எஃகின் — கொடிதாலோ!
பூ ஆர் மணம் கமழும் புல்லாணி கைதொழுதேன்
பாவாய்! இது நமக்கு ஓர் பான்மையே ஆகாதே' (1)

முன்னம் குறள் உருஆய், மூவடி மண் கொண்டு அளந்த
மன்னன் சரிதைக்கே மால்ஆகி பொன் பயந்தேன்;
பொன்னம் கழிக்கானல் புள் இனங்காள்! புல்லாணி,
அன்னம் ஆய் நூல் பயந்தாற்கு ஆங்கு இதனைச்
[செப்புமினே (2)

வ்வி துழாய் அதன்மேல், சென்ற தனிநெஞ்சம்
சவ்வி அறியாது நிற்கும்கொல்? நித்திலங்கள்
வ்வத் திரை உலவ புல்லாணி கைதொழுதேன்;
தய்வச் சிலையாற்குஎன் சிந்தை நோய் செப்புமினே! (3)

ரிய இரணியனது ஆகம் அணி உகிரான்
அரிஉரு ஆய்க்கீண்டான் அருள் தந்தவா எமக்கு!
பொரு திரைகள் போந்து உலவு புல்லாணி
[கைதொழுதேன்
அரிமலர்க்கண் நீர்ததும்பஅம் துகிலும் நில்லாவே! (4)

வில்லால் இலங்கை மலங்கச் சரம் துரந்த
வல்லாளன் பின்போன நெஞ்சம் வரும்அளவும்;
எல்லாரும் என் - தன்னை ஏசிலும் பேசிடினும்,
புல்லாணி எம்பெருமான் பொய்கேட்டு இருந்தேனே! (5)

சுழன்று இலங்கு வெங்கதிரோன் தேரோடும் போய்
[மறந்தான்;
அழன்று கொடிதுஆகி, அம்சுடரோன் தான் அடுமால்;
செழுந்தடம் பூஞ்சோலை சூழ் புல்லாணி—
[கைதொழுதேன்
இழந்திருந்தேன் என் தன் எழில் நிறமும் சங்குமே! (6)

கனை ஆர் இடி - குரலின் கார்மணியின் நா ஆடல்
தினையேனும் நில்லாது; தீயில் கொடிதாலோ!
புனைஆர் மணிமாடப் புல்லாணி கைதொழுதேன்;
வினையேன் மேல் வேலையும் வெந்தழலே வீசுமே! (7)

தூம்பு உடைக்கை வேழம் வெருவ. மருப்பு ஒசித்த
பாம்பின் அணையான் அருள்தந்தவா நமக்கு!
பூஞ்செருந்தி பொன் சொரியும் புல்லாணி கைதொழுதேன்;
தேம்பல் இளம்பிறையும் என் - தனக்கு ஓர் வெந்தழலே.
(8)

வேதமும், வேள்வியும், விண்ணும், இருசுடரும்
ஆதியும் ஆனான் அருள்தந்தவா நமக்கு!
போது அலரும் புன்னைசூழ் புல்லாணி கைதொழுதேன்
ஓதமும் நானும் உறங்காது இருந்தேனே! (9)

பொன் அலரும் புன்னை சூழ் புல்லாணி அம்மானை
மின் - இடையார் வேட்கை நோய்கூர இருந்ததனை,
கல் நவிலும் திண்தோள் கலியன் ஒலி வல்லார்
மன்னவர் ஆய்மண் ஆண்டுவான் நாடும் முன்னுவரே (10)

முகவுரை

இலக்கியப் பாடல்களை வரன்முறையாய் நினைவில் வைத்து ஓதி இன்புற ஏற்பட்டது அந்தாதி அமைப்பு. முதற்பாடலின் முடிவும் வரும் பாடலின் தொடக்கமும் ஒன்றாய் வரும் நிலையில் பிணைக்கப்பட்டு வரும் முறை பண்டுதொட்டே காணப்படுகிறது. பாடல் தொடைகளுள் ஒன்றாயிருந்த அந்தாதி பாக்களுக்கும் கொள்ளப் பட்டிருக்கிறது.

சங்கப் பாடல்களில் சிறுபாணாற்றுப்படையிலே வரும் விறலியரின் வருணனையில் அந்தாதித் தொடையமைப்பு உள்ளமை காணலாம். பதிற்றுப்பத்தின் நான்காம் பத்து அந்தாதியாய் அமைந்துள்ளது. ஐங்குறு நூற்றில் தொண்டிப் பத்து அந்தாதியமைப்புடையது. எனவே பதிகத்திற்கு வழிகாட்டிய சங்க இலக்கியம் அந்தாதிக்கும் கால்கோள் இட்டுள்ளமை காணலாம். பெருங்கதைக் காவியத்தின் ஒவ்வொரு காதைப்பாடலும் வருங்காதையோடு அந்தாதியாய்ப் பொருந்தியுள்ளது.

பக்தி இலக்கிய காலத்தில் அந்தாதி பெரிதும் போற்றப் பட்டது. காரைக் காலம்மையாரின் அற்புத் திருவந்தாதியும், முதலாழ்வார் மூவரும் பாடிய அந்தாதிகளும் இந்த வகையில் முற்பட எழுந்தவையாகக் கருதலாம். வெண்பா கலித்துறை என்னும் இருபாவகைகளிலும் அந்தாதிப் பிரபந்தங்கள் தோன்றியுள்ளன. இவற்றுள் வெண்பா அந்தாதிகளே முற்பட்டவை. அந்தாதி நூல்களில் முடிவும் முதலும் மண்டலித்து மீண்டும் நூலின் முதலை நினைவு படுத்தும் நிலை ஏற்பட்டிருக்கிறது. பக்தி நோக்கில் முறையாகப் பாராயணம் செய்வதற்கோர் அமைப்பாக இது உள்ளது. சடகோபர் அருளிய திருவாய்மொழி 1102

பாடல்களும் அந்தாதியாய்ப் பத்துப் பத்துக்களாக உள்ளன. 'உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன்' என்று தொடங்கும் திருவாய்மொழி, 'பிறந்தார் உயர்ந்தே' என நிறைவுற்று, மண்டலித்துள்ளது. எனவே அந்தாதிகளில் பெரிய அந்தாதிப் பிரபந்தம் திருவாய்மொழியேயாம்.

ஒலியலந்தாதி என்னும் ஓர் அமைப்பும் உண்டு. உதடுகள் ஒட்டாத எழுத்துக்களாலாகிய செய்யுள் நிரோட்டகம் எனப்படும். இவ்வகை நிரோட்டகச் செய்யுள்களாலும் நூல்கள் பிறந்துள்ளன. சிவப்பிரகாச சுவாமிகள் பாடிய 'திருச்செந்தில் நிரோட்டக யமக வந்தாதி' இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இவ்வகையினைப் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் 'இதழக லந்தாதி' எனப் பெயரிட்டு பிரபந்தம் யாத்துள்ளார்.

இவ்வாறாக அந்தாதி முறையில் இயற்றப்படும் பிரபந்தங்கள் பத்தாகவோ, நூறாகவோ, பத்துப்பத்தான நூறாகவோ, பல பத்துக்கள் கொண்டதாகவோ, அவரவர் எடுத்துக்கொண்ட பொருளுக்கு ஏற்ப உருப் பெற்றுள்ளன. இவற்றுள் பெரும்பாலனவும் பக்திப் பாடல்களே.

இன்னும் பிரபந்த வகையில் பல பொருள் வேற்றுமை, பாவகை, பாடல் தொகை இவற்றால் வெவவேறு பெயர்களில் அந்தாதி முறையமைப்பு இடம் பெற்றுள்ளது. அட்டமங்கலம், நவமணிமாலை, ஒரு பாவொருபஃது என்பனமுறையே 8,9,10பாடல்கள்கொண்ட அந்தாதிகள். இரட்டைமணிமாலை, இருபாவிருபது இணைமணிமாலை என்பன இருபது பாடல் கொண்ட அந்தாதிகள். மும்மணிக்கோவை, மும்மணி மாலை ஆகியவை முப்பது பாடல் கொண்ட அந்தாதி. நான்மணிமாலை நாற்பது பாடல்கள் கொண்ட அந்தாதி. கலம்பகம், பன்மணி மாலை, பல்சந்தமாலை என்பன நூறுபாடல்கள் அடங்கிய அந்தாதிகள்.

பாடல் பத்துக்கொண்ட பிரபந்தம் பதிகம் எனப் பட்டது போல் நூறு பாடல் கொண்ட பிரபந்தங்கள் 'சதகம்' எனவும் பெயர் பெற்றுள்ளன. திருவாசகத்தில் வரும் திருச்சதகம் நூறு பாடல் கொண்ட அந்தாதி யாகும். இதில் பத்து வேறுபட்ட பொருளமைதி கொண்ட சந்த வேற்றுமையள்ள பத்துக்கள் உள்ளன.

எனவே இது பின்னாளில் வளர்ந்த பதிற்றுப் பத்தந்தாதிகளுக்கு வழிகாட்டியாயுள்ளமை காணலாம். மற்றும் நீத்தல் விண்ணப்பமும் கோயில் மூத்த திருப்பதிகம் முதலிய பதிகங்களும் திருவாசகத்தில் அந்தாதி அமைப்புள்ளமை கருதற்பாலதாம்.

யமகம் என்பது முன்னடியில் வந்த எழுத்துக்களே பொருள் மாறுபடச் செய்யுளின் சீர் அடிகளில் பின்னும் வருவதாகிய மடக்கு என்னும் அணி என்பது தண்டியலங்கார உரை விளக்கம். இத்தகைய அமைப்புடன் வரும் அந்தாதியை யகம அந்தாதி எனபர்.

திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் திருமுறையில் சீர்காழி என்னும் பிரமபுரத்திற்கு 'ஏகபாதம்' என்னும் பதிகம் பாடியுள்ளார். இப்பதிகத்தின் முதற்பாடல், 'பிரம புரத்துறை பெம்மான் எம்மான்' என்றே நான்கடி யும், காணப்படும். ஆனால் இவை சொற்பிரிப்பால் வேறு வேறு பொருள் பயந்து நிற்பன. இவர் பாடிய ஏகபாதமே யமக வந்தாதிகளுக்கு முன்னோடி எனலாம்.

'யமகவந் தாதியை வாசிமினே' என அழகிய மணவாள தாசர் என்று போற்றும் பிள்ளைப் பெருமாளையங்கார் வழங்கிய திருவரங்கத்தந்தாதியின் தனியன் பாடல் சுட்டுகிறது. திருவரங்கத்தந்தாதி ஒரு யமகவந்தாதி. இவருக்குப்பின் பிறந்த யமகவந்தாதி நூல்கள் பல உள. இந்த வரிசையில் வந்துள்ளது சேதுசமத்தான மகாவித்துவான் ரா. இராகவையங்கார் பாடிய திருப்

புல்லாணி யமக வந்தாதி. இது கலித்துறைப் பாடல்களால் ஆகியது. இதனைப் 'புல்லையந்தாதி' எனவும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். "பா யமகம் பரவற்கு எனை ஆண்டவன்" எனப் புல்லையந்தாதி 73ஆம் பாடலில் ஆசிரியர் சுட்டுகின்றார். இதனால் யமகம் என்பது செய்யுள் வகையுள் ஒன்றாகும் என்பது போதரும்.

யமகப் பாடல்களில் அடி முதலில் வந்த சொல்லே மடங்கிப் பின்னடிகளிலும் வருவதால் அவற்றைப் பிரித்துப் பொருள் காண்பது சற்றுக் கடினமே. மடக்குச் சொல் முன்பின் உள்ள அசைகளுடன் கூடிப் பிரியும் சொல்லாக அமையும். கூர்ந்து பார்த்துப் பொருள் தொடர்பிற்கேற்பச் சொற்களைப் பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும்.

புல்லையந்தாதிக்கு நூலாசிரியரே உரையும் வரைந்துள்ளார். உரை பதவுரையாக உள்ளது. ஆசிரியர் உரையில் பதங்களைத் பிரித்துத் தருவதைக் கண்டபின் பாடல்கள் நன்கு விளங்கிவிடும். பாடலின் அருமை பெருமைகளும் தெரியவரும். பதவுரையை அடுத்து அவர் தரும் அரும்பத விளக்கமும் பிற நுட்பமான குறிப்புகளும் படித்து மகிழத் தக்கவை. சங்கப் பாடல்கள் முதலாக பல்வேறு நூல்களிலிருந்தும் உரைப்பகுதியில் மேற்கோள் காட்டிச் செல்வது வியப்புத்தருவது. வடநூல் மேற்கோள்களும் சிலவிடங்களில் உள்ளன. மகாவித்துவான் தரும் குறிப்புக்களும் உரையும் மிகமிக அருமைப்பாடு உடையனவாதல் கற்பார்க்குக் களிபேருவகை தருவன.

'அந்தாதிகள்' என்னும் தலைப்பில் மகாவித்துவான் செந்தமிழில் எழுதிய கட்டுரையிலே அந்தாதி இலக்கணமும் தமிழில் வந்துள்ள அந்தாதிகளின் அமைப்பும் வகைமையும் விளக்கமாகத் தெரிவித்துள்ளார். எனவே இவர் பாடிய இந்தப் புல்லை யமக வந்தாதிக்கு முகவுரையாக அமைவது பொருத்தமாம். அதனால் அக்கட்டுரையும் நூல் முதலில் தரப்பட்டுள்ளது.

புல்லையந்தாதியின் மூலப்படியில் ஆசிரியர் பக்கத்திற்கு ஒரு பாடலும் உரையும் அடங்கும்படி எழுதியுள்ளார். இவர்தம் எழுத்தில் அடித்தல் திருத்தல் மிகமிகக் குறைவு. நூலின் இறுதியில் தாம் நூலைப் பாடி உரையுடன் நிறைவு செய்த காலக்குறிப்பும் தந்துள்ளார்.

''புல்லையந்தாதி யமகக் கலித்துறை நூறும் நிறைவேறியது.''

தெய்வச் சிலையார் திருவடிகளே சரணம்
கருணாகரன் திருவடிகளே சரணம்
ஆங்கிரீஸ ௵ தை மீ ௨௫

(ஆங்கிரீஸ வருஷம் தை மாதம் 5ஆம் தேதி)

இக்குறிப்பினால் மூலப்படி நிறைவேறியது 1933-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் என்பது தெரிய வருகிறது.

பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை

அந்தாதிகள்

மகாவித்துவான் ரா. இராகவையங்கார்

அந்தாதி லட்சணம்

அந்தாதி என்பது இறுதிமுதலாகத் தொடுப்பதாகும். அஃதாவது, பலவடிகளால் ஆயதோர் செய்யுளாயின், முன்னடியின் ஈற்றிலுள்ள எழுத்து, அசை, சீர் இவற்றிலொன்று வருமடியின் முதற்கண் வருதலும், முன்னடியேனும் முன்னடியிற்பெரும் பான்மையேனும் வருமடி முதற்கண் வருதலும்; பல செய்யுளான் ஆயதோர் நூலாயின், முற்செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்து, அசை, சீர், அடி, இவற்றிலொன்று வருஞ்செய்யுளின் முதற்கண் வருதலுமாம். ஒரு செய்யுளகத்து அடிகள் இவ்வாறு தொடுக்கப்படின், அஃது அந்தாதித் தொடையெனப் படும். ஒரு நூலகத்துச் செய்யுட்கள் இவ்வந்தாதியாற் றொடர்ந்துவரப்பெறின், அஃது அந்தாதித் தொடர் நிலையெனப்படும் இதனை அந்தாதித் தொகை என்றலும் உண்டு.

இவ்வந்தாதி நூலெல்லாம் முற்செய்யுளினிறுதியும் வருஞ் செய்யுளின் முதலும் ஒன்றாய் வருதலேயன்றி பெரும் பாலும் நூலிறுதிச் செய்யுளினிறுதியும் நூன்முதற் செய்யுளின் முதலும் ஒன்றாகியும் வரும். அந்தாதித்

தொடைச் செய்யுளும் அடிகளின் ஈறும் முதலும் ஒன்றாய் வருதலேயன்றிச் சிறுபான்மையும் செய்யுளின் ஈறும் முதலும்ஒன்றாகியும் வரும். திருநூற்றந்தாதி முதலியன நூற் செய்யுளும் அந்தாதியாகத் தொடர்ந்து வந்தமையே யன்றி, இறுதிச் செய்யுளின் இறுதியும் முதற் செய்யுளின் முதலும் முறையே 'பூக்கொண்டதே' பூக்கொண்டு' என ஒன்றாய் வந்ததனையும் நோக்கிக் கொள்க.

உலகுடன் விளக்கு மொளிகிளர் ரவிர்மதி
மதிநல னழிக்கும் வளங் கெழுமுக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசன
மாசனத் திருந்த திருந்தொளி யறிவனை
யறிவுசே ருள்ளமொ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தரஃ தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே''

இவ்வந்தாதித் தொடைச்செய்யுளிற் பலவடிகளும் ஈறும் முதலும் ஒன்றாய் வந்தனவேயன்றிச் செய்யுளின் ஈறும் முதலும்ஒன்றாய் வந்ததனையும் நோக்கிக்கொள்க.

நால்வகை அந்தாதி

இவ்வந்தாதி, எழுத்து அசை சீர் அடி இவைபற்றி ஈறுமுதலாத் தொடுக்கப்பட்டவாறே, எழுத்தந்தாதி, அசையந்தாதி, சீரந்தாதி, அடியந்தாதி என நான்காக வகுக்கப்படும். ''உலகுடன் விளக்கும்'' என்னும் ஆசிரியத்துள் எழுத்தந்தாதி, அசையந்தாதி, சீரந்தாதி மூன்றும் வந்தன காண்க.

''ஆதியங் கடவுளை யருமறை பயந்தனை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கினை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கிய
சேதியஞ் செல்வநின் றிருவடி பரவுதும்.''

இதன்கண் அடியந்தாதி வந்தது. இவ்வாறே அந்தாதி நூலுள்ளும் எழுத்தசை சீரடிகள் அந்தாதியாகவருதல் ஆங்காங்குக் கண்டுகொள்க. திருவாய்மொழியில் ''கண்ணன் கண்ணல்ல தில்லையோர் கண்ணே'' என்னுஞ் செய்யுளீற்றடிப்பின் ''ஏபாவம் பரமே யேழுலகும்'' என வேறு செய்யுண் முதலடிவந்தது எழுத்தந்தாதியாம். ''தலையில் வணங்கவு மாங்கொலோ தையலார் முன்பே'' என்பதன் பின் 'பேய்முலை யுண்டு சகடம்பாய்ந்து மருதிடை' என வந்ததும் அது. அசையுஞ்சீரும் அந்தாதியாக வருவனவே, அந்நூலுள்ளும் பிறநூலுள்ளும் மிகப்பலவாம். **பதிற்றுப் பத்து நான்காம்பத்தின் கணுள்ள** 1, 2, 3, ஆம் பாட்டுக்கள் அடியந்தாதியாற் றொடர்ந்து வநதன.

பிறவகை விகற்பங்கள்

இனி ஒரு செய்யுட்கண் இறுதியடியினிறுதியும் முதலடியின் முதலும் ஒன்றாய் வருவனவற்றை மண்டல வந்தாதியென்றும், அவ்வாறு வராதவற்றைச் செந்நடை யந்தாதியென்றும், பல விரவிவருவனவற்றை மயக்கந்தாதி யென்றும், எழுத்தசைசீர்களால் இடையிட்டு வருனவற்றை இடையீட்டந்தாதி யென்றும், எழுத்தசை சீர்களால் இடையிட்ட அடியந்தாதியை இடையீட்டடியந்தாதி யென்றுங்கூறி, அவை மண்டலவெழுந்தந்தாதி, செந்நடை யெழுத்தந்தாதி, மண்டலவசையந்தாதி, செந்நடை யசையந்தாதி, மண்டலச்சீரந்தாதி, செந்நடைச்சீரந்தாதி மண்டலவடியந்தாதி, செந்நடையடியந்தாதி, மண்டல மயக்கந்தாதி, செந்நடைமயக்கந்தாதி, மண்டலவிடை யீட்டந்தாதி, செந்நடையிடையீட்டந்தாதி என விரிப் பாருமுளர். இவை யன்றி மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடையந்தாதிகளும் கூறுவர். இவ்வந் தாதித் தொடைவிகற்பமும் இவற்றிற் குதாரணமும் பிறவும் ''ஈறு முதலாத் தொடுப்பதந் தாதியென், றோதினர் மாதோ வுணர்ந்திசி னோரே'' என்னும்

யாப்பருங்கலச் சூத்திரத்துக்குக் கூறிய விருத்தியுரையுட் கண்டுகொள்க.

மேலெடுத்தோதியவாறன்றி, இறுதிநின்ற சொற்பொருணோக்கத்தால் ஆகுபெயரால் அந்தாதியாக வருதலும் உண்டு. இதனை மாறனலங்கார வுரைகாரர், ''இறுதிநின்ற சொற்பொருணோக்கத்தான் ஆகுபெயராற் சொற்றொடர் வருவனவுமுள. அதற்குச் செய்யுள்,

''பரிவதி லீசனைப் பாடி
விரிவது மேவ லுறுவீர்
பிரிவகை யின்றிநன் னீர்தூஉய்ப்
புரிவது வும்புகை பூவே''

''மதுவார் தண்ணந் துழாயான்
முதுவே தமுத லவனுக்
கெதுவே தென்பணி யென்னா
ததுவே யாட்செயு மீடே.''

இவை முதற்பத்தின் ஆறாந்திருவாய் மொழியின் முதற் பாட்டும். இரண்டாம் பாட்டும். இவற்றுட் பூ என்ற சொல்லின் பொருணோக்கத்தாற் சினையைக்கூற முதலை அறிவிக்கும் ஆகுபெயரால் அந்தாதி வந்தவாறு காண்க'' எனக் கூறியவாற்றான் அறிந்து கொள்க. அந்தாதியை இயலிசையந்தாதி யெனவும், பொருளிசை யந்தாதி யெனவும் இரண்டாகப் பகுத்து, இத்திருவாய் மொழிகளைப் பொருளிசை யந்தாதி எனப் பணிப்பர் திருவாய்மொழி யீட்டி னரும்பத வுரையாளர்.

தொன்மை வழக்கினது

இவ்வாறு வரும் அந்தாதி விகற்பமெல்லாம் தொல்காப்பியனார் கூறிய இயைபு. (செய்-241) என்பதன் வகையாய் அடங்கும். ஆண்டுப் பேராசிரியர் ''பொருட்

டொடராகவும், சொற்றொடராகவுஞ் செய்வது இயைபு எனப்படும்'' எனவும், 'சொற்றொடர் என்பது அந்தாதி எனப்படுவது' எனவும் கூறியவாற்றான் உணர்ந்து கொள்க இக்கருத்தானே **மாறனலங்கார முடையாரும்,**

சொல்லாற் பொருளாற் றொடருந் தொடர்நிலைக
ளெல்லா மவற்று ளெழுத்தசைசீர்—மல்கு
மடிசொற் றொடர்நிலைக ளந்த முதலாப்
படிவைத் தனர்முன் பகுத்து. (பொதுவியல்-6)

என்பதனால் அந்தாதியினைச் சொற்றொடர்நிலை யென்று கூறினார். இங்ஙனம் அந்தாதியாக ஒரு செய்யுட் பலவடிகளையுட் ஒரு நூலுட் பலசெய்யுட்களையும் தொடுப்பது தமிழிற் றொன்று தொட்டேயுள்ள பெருவழக் கமாம். இதனை **யாப்பருங்கல விருத்திகாரர்**(53) ''பன் மணி மாலையும், மும்மணிக்கோவையும், உதயண குமாரன் கதையும், தேசிகமாலையும் முதலாகவுடைய செய்யுட் களுள் அந்தாதி வந்தவாறு காண்க'' எனவும், (53)'' இறுதியெழுத்துஞ் சொல்லும் இடையிட்டுத் தொடுத்த செய்யுளந்தாதி விகற்பம், உதயணன் கதையும் கலியாண கதையும் பன்மணிமாலையும் மும்மணிக் கோவையும் என்னுமவற்றுட் கண்டு கொள்க'' எனவும் கூறிய தனாலும். **பேராசிரியர்** ''விருந்தே தானும், புதுவது கிளத்த யாப்பின் மேற்றே'' என்னுஞ் செய்யுளியற் சூத்திரவுரையில் ''புதுவது கிளந்த யாப்பின் மேற்றென்ற தென்னையெனின், புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்துவரச் செய்வது; அது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினார் செய்த அந்தாதிச் செய்யுளும் எனவுணர்க'' என வுரைத் ததனாலும், பதிற்றுப்பத்திற்கட் **கரப்பியாற்றுக் காப்பிய னார்** பாடிய நான்காம் பத்து அந்தாதியாகத் தொடர்ந்து வந்ததனானும் அறிந்து கொள்க. **பாட்டியலுடையார்** கலம்பகம், பல்சந்தபாலை, இணைமணிமாலை, இரட்டை

மணிமாலை, மும்மணிமாலை, நான்மணிமாலை, மும்மணிக்கோவை, வசந்தமாலை, நவமணிமாலை, கலியந்தாதி, ஒலியந்தாதி, பதிற்றந்தாதி, நூற்றந்தாதி முதலிய பல பிரபத்தங்களிற் செய்யுட்கள் அந்தாதியாய்த் தொடர்ந்து வரப்பெறு மென்ப.

வருமாறு

இவ்வந்தாதிச் செய்யுட்கள் ஏழுமுதல் ஆயிரம் இறுதியாகத் தொடர்ந்து வருவன எனவுணர்க. சடகோபர், **திருவாசிரியம்** ஏழு பாட்டு அந்தாதியாக வந்தது; திருவாசகத்துக் **கோயிற்றிருப்பதிகம், கோயின் மூத்ததிருப்பதிகம்** முதலாயின பத்துப் பத்துச்செய்யுட்கள் அந்தாதியாகத் தொடர்ந்தன. **நீத்தல் விண்ணப்பம்** ஐம்பது செய்யுட்களும் **திருச்சதகம்** நூறு செய்யுட்களும் அந்தாதியாகத் தொடர்ந்தன. **திருவாய்மொழி** ஆயிரஞ் செய்யுள் அந்தாதியாக வந்தது. எல்லாப்பாக்களும் பாவினங்களும் இவ்வாறந்தாதியாற் றொடர்ந்து வரவும் பெறும். பாவும் பாவினமுங் கலந்து அந்தாதியாகத் தொடர்ந்தது கலம்பகத்துட் காண்க: பாக்களுள் வெண்பாவும் பாவினங்களுட் கலித்துறையும் அந்தாதியாற் றொடர்ந்து வந்தனவே மிகப்பலவாம்.

> ''வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருளிற்
> பண்பா யுரைப்பதந் தாதித் தொகையே''

என்று **பன்னிருபாட்டியலாருங்** கூறுதல் காண்க. இதனைக் கபிலதேவர், பரணதேவர், நக்கீரதேவர், காரைக்காலம்மையார், பொய்கையார், பூதத்தார், பேயார், திருமழிசைப் பிரானார், சடகோபர் வெண்பாவந்தாதிகளானும்; திருவாதவூரர் நீத்தல் விண்ணப்பம், சடகோபர்திரு விருத்தம், சேரமான் பெருமாணாயனார் பொன் வண்ணத்தந்நாதி, நம்பியாண்டார் நம்பி திருத்

தொண்டர் திருவந்தாதி, திருவரங்கத்தமுதனார் இராமாநுச நூற்றந்தாதி' கம்பர் சடகோபரந்தாதி முதலிய கலித்துறை யந்தாதிகளானும் உணர்ந்து கொள்க.*

*செந்தமிழ்ப்'பத்திரிகையில் மகாவித்துவான் எழுதியது இக்கட்டுரை. இது இப்பொழுது அவர்தம் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எனினும் நூலில் (நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ்) 10 ஆம் கட்டுரையாக (பக். 48-52) அமைந்துள்ளது. அந்தாதி பற்றிய வரலாற்றுக் களஞ்சியமாக இது விளங்குவதால் இங்குத் தரப்பட்டுள்ளது.

திருப்புல்லாணி யமக வந்தாதி

காப்பு

நம்மாழ்வார்

1. புளிப்புற் றிராவுல கைக்கைத் தறுபகை பொன்றவழனீ
றுளப்பற் றுவர்த்துத் துவரப் புறப்பற் றொழித்
[தொண்டமிழ்
அளித்துப் பெயருந் தித்திக்கக் குருகை யினாரமுதைக்
களித்துப் பருகிற் றுலகுண் டுமிழருட் கார்ப்புயலே.

இ-ள் : புளிப்புற்றிரா - புளிக்கீழ்ப்புற்றிவிருந்து என ஆழ்வார்க்கும் புளிப்பு உற்றிராது என அமுதிற்குங் கொள்க. உலகைக் கைக்குமல்லது தான் கைத்தலில்லை என்க அறுபகை - ஹரிஷட் வர்க்கங்கள். உவர்த்தல் - வெறுத்தல். துவர - முற்ற. துவர்அப் புறப்பற்று - துவர்க்கின்ற அப் புறப்பற்று. ஒண்தமிழளித்து-ஒள்ளிய தமிழைத் உதவி என ஆழ்வார்க்கும், ஒப்பமுடைய இனிமையைத் தந்து என அமுதிற்குங் கொள்க. பெயருந் தித்தித்தல் - ''குருகூர் நம்பி என்றக்கால் அண்ணிக்கு மமிழ்தூறு மென் னாவுக்கே'' என்பதைத் தழீஇயது. குரு கையின் ஆரமுது - குருவின் கையின் ஆர்ந்த அமுது என்பது சாடு. உலகை உண்டு சுவை காணாது உமிழ்ந்த அருட்கார்ப்புயல் இவ்வாழ்வாராகிய அமுதைக் களித்துப் பருகிற்று என்க. வெளிறும் புயலின் வேறு கார்ப்புயல்; நீர்ப்புயலின் வேறு அருட்புயல். உவர்க்கடலுண் புயலின் வேறு இவ்வமுது பருகு புயல் என்று கொள்க.

ஆழ்வாரைப் பருகிய செய்தி ''வாரிக்கொண்டுன்னை விழுங்குவன் காணி''லென்றார். ''அற்றவெனை...முற்றப் பருகினான்'' என்னுந் திருக்காட்கரைப் பாசுரத்தானறிக.

இப் பாசுரத்தில், ''என்னை முற்றப்பருகினான் காரொக்குங் காட்கரையப்பன்'' என்றதே கொண்டு கார்ப்புயல் எனக் கூறப்பட்டது. குருகையின் ஆர் அமுதை - குருகூரின் நிறைந்த அமுதாய ஆழ்வாரை உண்ணாமலே கண்ட அளவே களித்துப் பருகிற்று என்க. ''கள்ளினைக் காணாக் களிக்கும் களி'' என்பது போலக் கொள்க. உளப்பற்று - அகங்காரம், புறப்பற்று - மமகாரம். துவர் அப்புறப்பற்று எனவும், துவர ஒழித்து எனவும் கூறிக்கொள்க.

திருமங்கை மன்னன்

2. ஒண்புல்ல னிட்ட தர்ப்பா தனமீதிவ் வுலகுதொழத்
தண்புல்லை வீற்றிருந் தான்மேல் யகவந் தாதிசொலற்
கெண்புல்ல னேனெஞ்சிருந்தெப் பொழுது மினிதளிக்கும்
விண்புல்ல நீடு புகழான் கலிகன்றி மெய்ப்பதமே.

அவன் ஒண்புல்லன் யான் வெறும்புல்லன் எ-று.

3. மதியிற் குறையலனா மங்கைமன் திருவாலி யன்பன்
பதியிற் றலைகொள்புல் லாணிக் கமிழ்திற் பதிகமிட்டான்
விதியற்ற யானுமிவ் வந்தாதி சாத்தினன் மென்முளரி
துதியிற் பெய்வான்முன் னெருஞ்சிக் கொடிப்பூச்
[சொரிந்ததொத்தே.

இ-ள் : குறையலன் - திருக்குறையலூரையுடையன். ஆம் - ஆகிய. மங்கைமன்-திருமங்கை மன்னன். திருவாலியன் - திரு ஆலி நாட்டினன். பல்பதியிற்றலை கொள் புல்லாணிக்கு - பல திருப்பதிகளிலும் தலைமை கொண்ட திருப்புல்லாணிக்கு. மதியின் அமிழ்திற் பதிகம் இட்டான் - திவ்ய ஞானத்தால் அமுதத்தினை ஒப்பாகத் திருப்பதிகம் சாத்தினான். விதி அற்ற யானும் - விதிக்கட்டுக்கு அடங்காத இழிந்தேனும். இவ்வந்தாதி சாத்தினன் - இந்த யமக அந்தாதியைச் சாத்தினேன்- மென் முளரி - மெல்லிய தாமரை மலரை. துதியிற் பெய்வான் முன் - துதித்தமேலாடு

சமர்ப்பிக்கின்றவன் முன்னே. நெருஞ்சிக் கொடிப்பூ சொரிந்தது ஒத்தே - நெருஞ்சிக் கொடியிலுண்டாகிய பூவைச் சொரிந்ததனை ஒத்து எ-று.

மதியின் இட்டான் என்க. மதியிற் குறையலன் - அறிவிற் குறைவில்லாதவன் என்பதும் நாமங்கைமன் என்பதும் திருவாலியன் - திருவுடைய தூயோன்என்பதும் சாடு. இச் சாடுகளால் யான் மதி குறைந்தேன் என்பதும் நாமங்கையருளில்லேன் என்பதும் தூய்மையில்லேன் என்பதும் தொனிப்பதும் காண்க. பல்பதியிற்றலை கொள்ளல் - சரணாகதி விளை நிலனாதலானும் திரு கணடார் பாவம் கழுவும் திருவணையுடைமையானும் பிறவாற்றானும் கண்டு கொள்க. தாமரையும் நெருஞ்சியும் கொடியுடையவையாதலும் கதிரவனே நோக்கும் பூவுடையனவாதலும் முள்ளுடையனவாதலும் காண்க. 'ஒண்பூயருங் கதிரவனே நோக்கும்' என்பது முதற்றிருவந்தாதி. 'நீள்சுடர் நெறியை நோக்கு நிரையிதழ் நெருஞ்சிப்பூப்போல்' என்பது சிந்தாமணி, கோவிந்தையாரிலம்பகம். வைணவர் அணியும் மணிபயப்பது தாமரைப் பூ. பலர்க்குமிடர் செயுமுட்கள் பயப்பது நெருஞ்சி. இது வேற்றுமை என்க. 'புன்புலத்த மன்ற சிறியிலை நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்கு' எனக் குறுந்தொகை (202) வருதலானறிக.

'புரிவதுவும் புகைபூவே' என்னும் திருவாய்மொழி யீட்டில், ''செதுகையிட்டும் புகைக்கலாம், நெருஞ்சியிட்டும் அர்ச்சிக்கலாம்'' என்றருளிச் செய்த பட்டர் ஸ்ரீஸூக்தியை நோக்குக ஆராதிப்பார் மூக்கு நாறாமைக்கும் உடம்பின் முட்குத்தாமைக்கும் தீ நாற்றப் புகையும் முட்பூக்களும் விலக்கப்பட்டனவன்றி வேறில்லை என்பது அவர் திருவுள்ளம்.

4. எற்கணையா விளக்காய்நின் றெனைக்கவியென் றிழைத்த
விற்கணையா லேழ்மர மெய்தபுல்லை விமலனுக்குப்
புற்கணை யாக்கியதுங்கரி வேந்தாய்ப் புரிந்ததுவும்
கற்கணையாம்விழி மானாக் கியதுமோர் காரியமே

இ-ள் : எற்கு அணையா விளக்காய் நின்று - எனக்கு அணையாத திருவிளக்காய் நிலைநின்று. எனைக் கவி என்று இழைத்த - என்னைக் கவிதை செய்பவனென்னச் செய்து திருத்திய. விற்கணையால் ஏழ்மரம் எய்த புல்லை விமலனுக்கு - வில்லில் வைத்த கணையினால் மரமேழை யும் எய்த தூயவனுக்கு. புல்கணையாக்கியதும் - புல்லைக் கணையாகச் செய்ததும். கரிவேந்தாய்ப் புரிந்ததுவும் - கரிந்ததொன்றை அரசனாகச் செய்ததும். கல் கணையாம் விழிமான் ஆக்கியதும் - கல்லைக் கணைபோல ஆகிய விழி களையுடைய மான் போன்ற பெண்ணாகச் செய்ததும். ஓர் காரியமே - ஒப்பற்ற காரியம் என்று சிறப்பிக்கப் படுமே என்று வினாவி, இவை காரியமல்ல. என்னைக் கவி என்றிழைத்ததுவே அவற்றினும் அரிய காரியம் என்பது கருத்தாகக் கொள்க.

புல் திருக்கை தீண்டுதலானும் கரியும் கல்லும் திருவடி தீண்டுதலானும் அங்ஙனம் ஆக்கம் பெறுதற்குரிய. அவ்வாறு திருமேனியை மெய்யாய் தீண்டாமை மட்டுமே யன்றி நினைந்து உள்ளத்தானுந் தீண்டாத என்னைத் தான் நினைத்த மாத்திரத்திற் கவியென்றிழைத்தது அவனது அதிசயச் செயல் எ-று கவிதை செய்தற்கு நெறி காட்டி அணையா விளக்காய் நின்றான் என்க.

அணைத்தல் - அவித்தல். ''வெள்ளம் அணைத்தவன் வில்லை யெடுத்து'' என்ப. ஆயிர முகமாகப் பாய்ந்த கங்கையின் வேகத்தை அவித்தவன் என்று கொள்க.

ஆக்கியோன் பெயர்

5. காரார் கடற்புல்லை யிற்கருணாகரன் கான்மலர்மேல்
ஆராத வன்பின் யமகவந் நாதி யணிந்தனன்வண்
சீரார் நயித்துருவ காசிபகவி சேகரன்றன்
ஏரார் தருமாதுல சேட தாசனி ராகவனே.

தன்மாதுல சேடதாசன் - தன்மாமனாகிய சேஷாவ தாஸிக்கு அடியன் எ-று. கருணாகரன்-திருப்புல்லாணியில் அரவணைப் பெருமான் திருநாமம்

நூல்

1. புல்லையம் பாக்கத்தன் பார்ந்தோர்க்
கிரங்கிப் பொறிமகளைப்
புல்லையம் பாக் கத்தன் றங்காந்
தெழுமைப் புவிதெரித்தோன்
புல்லையம் பாக்கத்தன் பூங்கழல்
போற்றப் புகலிலர்க்குப்
புல்லையம் பாக்கத்தன் னந்தவஞ்
செய்யப் புரிதி நெஞ்சே

இ-ள் : புல்லை அம் பாக்கத்து - புல்லாணியாகிய அழகிய கடற்கரை யூரின் கண்; அன்பு ஆர்ந்தோர்க்கு இரங்கி - அன்பு நிறைந்தோர்க்கு இரக்கமுற்று; பொறி மகளைப் புல்லு ஐ - இலக்குமி தேவியைத் தழுவிய கடவுள்; அம்பாக்கத்து - தாயின் விழியில்; அன்று அங்காந்து - அந்நாளில் வாய் திறந்து; எழுமைப்புவி தெரித்தோன் - ஏழுலகினையும் தெரிவித்தவன் புல்லை அம்பு ஆக்கு அத்தன் - புல்லினை அம்பாகச் செய்த தந்தை; பூங்கழல் போற்ற - அவன் பூப்போலும் கழலைப் போற்றவும்; புகலிலர்க்குப் புல் ஐயம் பாக்க - வேறு புகலிலர்க்குப் புல்லிய அறச்சோறு பகுக்கவும்; தன்னந் தவம் செய்ய - சிறிது தவம் பண்ணவும்; புரிதி நெஞ்சே - மனமே விரும்புக எ-று.

அம்பா அக்ஷம் என்பது அம்பாக்கம் என்றாயது. பாக்கம் - கடற்கரை யூர்க்குப் பெயர், அன்பார்ந்தோர்க் கிரங்கி என்றதனால் அர்ச்சாவதாரத்திற்கு அருள் காரணம் எ-று. அம்பா-ஈண்டு யசோதைப் பிராட்டியார். புவி தெரித்தலாற் பயன் - தான்அவதாரமென் றுணர வைத்தல். இவ்வாறே முன்னப்புல்லை அம்பாக்கிய அத்தன் என்று காட்டியது ஏற்பவந்தது. போற்றல்- ஆராதித்தல். பாத்தல் - பகுத்தல். நித்திய கன்மம் - எக்ஞும், தானம், தவம், என்றான்றாதலான் அம்மூன்றை யும்புரிய விரும்புக எ-று. எக்ஞும்-பரதெய்வந்தை வழிபடு வது. தானம் - எழையர்க்கு இரக்கத்தாலுதவுவது. தவம்- தன்னை ஒறுத்துத் தூய்மையுண்டாக்குவது. எக்ஞும் - கடவுட்கும், தானம் - பிறவுயிர்க்கும், தவம் தனக்கும் ஆம் என்று கொள்க. தானமுந் தாமும் இல்லான் செய்யும் தெய்வவழிபாடு பொய்யாதல் துணிக. புல் ஐயம்என்பதும் தன்னந்தவம் என்பதும் அற்பமாக வேனுஞ் செய்யா திராமைப் பொருட்டுக் கூறப்பட்டன. தன்னம் - சிறுமை. நெஞ்சை விரும்பச் செய்தலான், அதிக தானத்தை அதிக தவத்தை முதற்கண்ணே கூறின், அஃது அஞ்சி அகலுமோ என்னும் ஐயத்தால் சிறிது சிறிது செய்க என்று வேண்டிய தாகக் கருதுக.

2. **புரியா வையினுஞ் சிறந்தும்ப**
ரார்பொற் புரிசையைப்பாம்
புரியா வையினுந் தலையாற்
பொரும்புல்லைப் புண்ணியன்சீர்
புரியாவையினுங் கதிதரு
வர்ன்சரண் பூண்கவலம்
புரியா வையினுதிவேல்
விழியார்களம் போன்மென்பிரே.

இ-ள்: புரியாவையினுஞ் சிறந்து - எல்லா நகரினும் மேம்பட்டு; உம்பர் ஆர் பொற்புரிசையை - வானைத் தொட்ட பொற்கோட்டையை; பாம்புரி - அகழி,

ஆவயின் உந்து அலையாற் பொரும்புல்லை - அவ்விடத்து மோதும் அலைகளாற் போர்புரியும் புல்லாணியின் கணுள்ள; புண்ணியன் - அறவடிவன். சீர்புரியா வையினும் கதிதருவான் - இவன் சீர்மைகளைச் சொல் லாது வைதாலுங் கதியளிப்பான்; சரண் பூண்க - திருவடி களை அணியாகக்கொள்வீராகுக. ஆயினுதிவேல் விழியார் களம் - கூரிய நுதியையுடைய வேல்விழியார் கழுத்திற்கு, வலம்புரியாபோன்ம் என்பிர் - வலம்புரிச் சங்கா ஒக்கு மென்று புகழ்வீர்கள் எ-று.

என்பிர் சரண்பூண்க என்க. புரிசைக்கு அகழியா னலை பொருதலன்றிப் பிறபோரில்லை எ-று. வயின் வையின் என்பதும், அயில் ஐயில் என்பதும் போலி. சரணாகதி விளைநிலமாதலாற் புரியாவையினுஞ் சிறந்து எனப்பட்டது. புண்ணியன், ''அறநிறங் கரிதோ என்றான்'' என்பர் கம்பநாடர். சீர்புரிதல் - புகழ்புரிதல். போலும் போன்ம் என மரீஇயிற்று. வலம்புரி வடி வானும், தூய்மையானும் ஒப்பினும் ஒலியிசையானொவ் வாதென்று புகழ்வீர். வைதாலுங் கதிதருவான் சரண் பூண்க என்க. வைதாற்குக் கதிதந்தது - சிசுபால சரிதம்

3\. **என்பா பரணங் கபிலம் பொருவுமென் பேற்குய்யுமா**
றென்பா பரணங் கடிந்தாற்று நன்மருந் தேயெண்குண
னென்பாபரணங் கனைமார் குழூஉம்புனமேய் புல்லையா
யென்பா பரணங் களனார் பவன்பர வீச்சுரனே.

இ-ள் : என்பா - என்னுடைய செய்யுள்; பரணம் கபிலம்-பரணர் செய்ததும் கபிலர் செய்ததும்; பொருவும்- ஒக்கும்; என்பேற்கு - என்றுவைப்பேனுக்கு; உய்யும் ஆறு என் - பிழைக்கும் வழி யாது, பாபரணம் - பாவமாகிய புண்ணை; கடிந்து ஆற்றும் நன்மருந்தே - அறுத்து ஆறச் செய்யும் நல்ல மருந்தாயவனே; எண்குணன் என்பா- எண்குணங்களை யுளனென்று மறை சொல்லுதலை யுடையவனே. பரண் அங்கனைமார் குழூஉம் புனம் ஏய் புல்லையாய் - பரண்களில் மகளிர் குழுமிய விளை

புனங்கள் பொருந்திய புல்லாணியூராய்; என்பு ஆபரணம்- எலும்பு அணியை; களனார் - கழுத்திற் கட்டிய; பவன்- சிவன்; பரவு ஈச்சுரனே - துதிக்கும் ஆண்டவனே எ று.

ஈச்சுரனே உய்யுமாறு என் என்க. பரணம், கபிலம் என்பன தொல்காப்பியம்போல வந்தன. பொருவும் என்று நினைத்தலே குற்றம் எ-று. 'சிறுமை பெருமிதம் ஊர்ந்து விடல்' என்ப. இது கல்வி பற்றிய பெருமிதம். 'கல்வி தறுகண் ணிசைமை கொடையெனச் சொல்லப்பட்ட பெருமித நான்கே' என்பது தொல்காப் பியம். பாப ரணம் - உடற்புண்ணின் வேறு ஆதலின் ஆற்ற நன்மருந்து வேண்டப்பட்டது. மருந்தினும் நல்லனென்று கருதினும் பொருந்தும். என்குணன் - வேதங் கூறிய பாவமிழுகாமை முதலிய எட்டும் என்பு - என்று சொல்லுதல்; அஃது என்பன் எனப் பெயராய் என்பா என விளியாயிற்று 'சென்றோ ரென்பிலர்தோழி' என அகப்பாட்டில் வந்தது. ஆண்டு என்பு இலர் என்று சொல்லுதலிலர் என்னும் பொருட்டு.

4. **சுரமிக் காய மொழியார்**
வயிற்புரி தூர்த்தன்பிசா
சுரதமிக் காய வின்பென்னா
னெனவெற்றொ லைப்பைகொல்பே
சுரதமிக் காய வரும்பாப்
பதின்மர் தொடுத்தணியீச்
சுரதமிக் காயருணீத் தென்பராற்
புல்லைத் தொல்பரனே.

இ-ள் : சுரதம் இக்கு ஆய மொழியார் வயின் புரி தூர்த்தன் - கலவியைக் கரும்பான சொல்லியர்பால் புரிகின்ற இடங்கழியாளன். பிசாசுரதம் இக்காய இன்பு என்னான் - இவ்வுடலின்பம் பேய்ததேர் என்று சொல்லுதலுஞ் செய்யான். என என் தொலைப்பை கொல் - என்று என்னை அழிப்பாய் கொல்லோ. பேசு ரதம்

மிக்கு - சொல்லப்பட்ட சுவையெல்லாம் மிகுத்து; ஆய அரும் - ஆராய்தற்கு அரிய; பாப்பதின்மர் தொடுத்தணி ஈச்சுர் - பர்க்களைப் பத்தாழ்வர்களும் தொடுத்தணிந்த ஆண்டவனே. தமிக்காய் அருள் நீத்து என்பர் - அருளை விடுத்துத் தனியேயிராய் என்று பெரியோர் சொல்வர். புல்லைத் தொல்பரனே - புல்லாணியின் கணுள்ள பழைய பரமனே.

ஈச்சுரனே பரனே அருள் நீத்துத் தமிக்காய் என்பர். அங்ஙனம் கூறுதற்கு மாறாகத் தூர்த்தன் என்றும் என்னான் என்றும் கருதி என்னைத் தொலைப்பை கொல்லோ எ-று. ஆல்-அசை. ஐயத்திற்குக் காரணம் எனக்கும் பதின்மர்க்கு முள்ள வேற்றுமை என்க.

5. பரசமயங்கரு விற்கேது வென்று பரமனையின்
பரசமயங்கருந் தோற்குந் தரும்புல் லைப் பண்ணவனைப்
பரசமயங்கருஞ் சித்தந் தெளியலர் பாழ்மறலி
பரசமயங்கரு தாதெய்து காலம் பரிபவரே,

இ-ள் : பரசமயம் கருவிற்கு ஏது என்று-வேற்று மதங்கள் பிறப்புக்குக் காரணமாவன எனக் கருதி. பர மனை-பரத்துவனை. இன்பரசமயம்-ஆனந்தரசமயத்தை. கருந்தோற்கும் - கரிய யானைக்கும்; தரும் - தருகின்ற புல்லைப் பண்ணவனை - புல்லாணிக்கணுள்ள கடவுளை. பரச - துதிக்க; மயங்கு அரும் சித்தம் தெளியலர் - மயங்கு கின்ற அரிய சிந்தை தெளிந்திலர், பாழ் மறலி - பாழ்த்த யமனுடைய, பரசு - கணிச்சி, அமயங் கருதாது எய்து காலம்-அற்றம் நோக்காமல் எய்துகின்றபோது;பரிபவரே-இரங்குவராவர் எ-று.

"கணிச்சிக் கூர்ம் படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ" (புறம் - 195)

என்ப.

6. பரிசைய மன்ற விழிந்தாரைச் செய்யெனைப் பாலிப்பதெப்
பரிசைய மன்றமர்ந் தாடும் பிநாகி பதைத்திரியப்
பரிசைய மன்ற படைவாணன் பல்கரம் பாழ்செய்தவும்
பரிசைய மன்றற் பொழிலோங்கு புல்லைப் பதிக்கரசே.

இ-ள் மன்ற - தேற்றமாக, இழிந்தாரைப் பரிசயம் செய் எனை - இழிந்தாரைப் பரிசயம் செய்யும் என்னை; பாலிப்பது எப்பரிசு - புரப்பது எப்படி; ஐய - ஐயனே, மன்று அமர்ந்து ஆடும் பிநாகி - மன்றத்தின்கண் விரும்பி ஆடும் பிநாக வில்லினன், பதைத்திரிய - உயிர்பதைத் தோட, பரிசை அமன்ற படை - கேடகம் நெருங்கிய படைகளையுடைய, வாணன் பல்கரம் பாழ்செய்த - வாணன் பல கரங்களைப் பாழாக்கின, உம்பர் இசைய மன்றல் பொழில் ஓங்கு புல்லைப் பதிக்கு அரசே - வான் பொருந்த மணச்சோலை ஓங்கிய புல்லாணிப்பதிக்கு அரசே எ-று.

ஐய, பல்கரம் பாழ் செய்த அரசே. பரிசயம் இழிந்தாரைச் செய்யும் என்னைப் பாலிப்பது எப்பரிசு என்க. பரிசயம் பரிசையம் போலி, வாணன் துணைவலியும் படைவலியும்பெற்றும் கரம் பாழ்பட்டான் எ-று. சிவபிரானைத் துணைக் கொண்டவனே பாழ் செய்யப்பட்டான். நான் இழிந்தாரைப் பரிசயம் செய்வேன் எனைப் பாலிப்பது எங்ஙனம் எ-று. அமலல்-நெருங்கல் "வேயமலகலறை" என்பது கலித்தொகை

7. பதியா தியங்க நெறியாதென்
றேற்கொன்று பன்னினள் பார்ப்
பதியா தியங்கனை யாரின்
மிக்கீர் செவிபாடுறு நீ
பதியா தியங்கழற் காளாவம்
யாமென் பரகத்தன்றிப்
பதியா தியங்கழும் புல்லை
மேய பரன்வெற்பிலே,

இ-ள் : பதியாது இயங்கநெறியாது என்றேற்கு-ஊர் யாது, அதற்குச் செல்ல வழியாது என்று வினாயினே னுக்கு; ஒன்று பன்னின் - செப்புவழுவாக வேறொன்றே னுங் கூறின். நன்பார்ப்பதி ஆதி அங்கனையாரின் மிக்கீர் - நல்ல பார்வதி முதலாய பெண்பாலாரின் அழகு, மிக்கீர். செவிபாடுறும் - என்செவி பெருமையடையும், நீபதி ஆதி - நீ இறைவன் ஆகின்றாய். அம் கழற்கு ஆளாவம் யாம் என்பர் அகத்து அன்றிப் பதியாது - அழகிய திருவடிகட்கு; அடியம் ஆவம் யாம் என்றுரைப் பார் மனத்தன்றிப் பதியாமல், இயம் கழும் புல்லை மேய பரன் வெற்பிலே - வாச்சியங்கள் கலந்தொலிகளும் புல்லாணிக் கண்ணே விரும்பியுறைந்த பரமன் மலையிலே. எ-று.

''வெற்பிலே மிக்கீர் ஒன்று பன்னின் செவி பாடுறும்'' என்க

8. **பரமதி யாக வுவமையி லாதி பகவ பொன்னம்**
பரமதி யாக முரிஞ்சும் பொழிற் புல்லைப் பண்பகளே
பரமதி யாக வெடுத்துழல் கின்றவிப் பாவியென்பம்
பரமதி யாக பதியா நின்றாளிற் பதித்தருளே.

இ-ள் : பரம தியாக - மேலான வள்ளலே. உவமை யில் ஆதிபகவ - ஒப்பில்லாத ஆதிபகவனே. பொன்னம்பர - பீதாம்பரனே. மதி ஆகம் உரிஞ்சும் பொழிற்புல்லைப் பண்ப - திங்களுடல் உரிஞ்சும் சோலை யையுடைய புல்லாணிக்கண் உள்ள ஸகுணமூர்த்தியே. களேபரம் அதியாக எடுத்துழல்கின்ற இப்பாவியென் - உடலை மிகுதியாக எடுத்துழல்கின்ற இந்தப் பாவச் செயலுடையேன், பம்பர மதி - பம்பரம் போலச் சுழலும் புத்தியை, யாகபதியாம் நின் தாளில் பதித்தருளே - வேள்விக்கெல்லாம் பதியாகிய நினது திருவடிகளிற் பதிய வைத்தருள் என்க.

'அதிஸர்வத்ரவர்ஜயேத் என்புழி அதி பெயராக உபயோகிக்கப்பட்டது காண்க.

9. அருவருக் கத்தகும் புன்மத நூல ரளந்தறியா
அருவருக் கத்தழ கார்பொன் னறுவைநன் றார்த்தவுரு
அருவருக் கத்தரளக் காங்கடற் புல்லை யாரடியார்
அருவருக் கத்தணுகப் பெறுவாரெமை யான்பவரே.

இ-ள் : அருவருக்கத்தகும் - வெறுக்கத்தக்க; புன்மதநூலர் - சிறு சமய நூலர்; அளந்தறியா அருவர் - பிரமாணித்தறியாத அருவமாயுள்ளவர்; உக்கத்து அழகு ஆர் பொன் அறுவை நன்று ஆர்த்த உருவர் - இடையில் அழகு நிறைந்த பொன்னாடையினை நன்று அசைத்த உருவினையுமுடையவர்; உவருக்கு அத்தரளக்கு ஆம் கடற் புல்லையார் - உப்புக்கும் அந்தப் பிரசித்தி பெற்ற முத்துக்கும் இடம் ஆகிய கடற்புறத்துப் புல்லாணிப் பதியாருடைய; அடியார் அருவருக்கத்து - அடியாருடைய அரிய வகுப்பில்; அணுகப் பெறுவர் - நெருங்கப் பெறும் பேறுடையார்; எம்மை ஆள்பவரே - எம்மை அடிமை யாள்வாரே ஆவர். எ-று.

அத்தரளம் என்புழிச் சுட்டு 'தென்கடன் முத்துங் குணகடற்றுகிரும்' என்றாற்போலப் பண்டே சிறப்பித் துரைத்தலை அறிவிக்கின்றது.

10. ஆளானஞ் சாயகன் மாதிர நேர்களி றட்டவன்செய்
ஆளானஞ் சாயக னென்றெனைத் தேற்றிய ரண்ணனிற்கே
ஆளானஞ் சாயகம் புல்லாக்கி யோயெனு மன்பரைவந்து
ஆளானஞ் சாயகண் ணன்புல்லை மேயவருண்முதலே.

இ-ள் : ஆளானம் சாய் அகல் மாதிரம் நேர்களிறு அட்டவன் - கட்டுத்தறியைச் சாய்க்கின்ற அகன்ற மலை போலுங் களிற்றைக் கொன்றவன். செய்யாளான் - இலக்குமியையுடையவன்; அகன் அஞ்சாய் என்று எனைத் தேற்றிய அண்ணல் - மனம் அஞ்சாய் என்று என்னைத் தெளிவித்த தலைவன்; நிற்கே ஆள் ஆனம் சாயகம் புல்லாக்கியோய் எனும் அன்பரை - புல்லைச் சாயகம் ஆக்கியோய் நினக்கே அடிமையாயினம் என்னும் அன்பரை; வந்து, ஆள் ஆன் அஞ்சு ஆய

கண்ணன் - வலிந்து வந்து ஆளுகின்ற பசுவின்கண் உள்ள ஐந்தும், அவற்றின் தூய்மையுமாகிய கண்ணபிரான், புல்லை மேய் அருள் முதலே - புல்லாணிக்கண் விரும்பி யுறைந்த - அருண் முதல்வன் ஆம் என்க. எ-று,

அட்டவனும் செய்யாளானும் அண்ணலும் கண்ணனும் அருண்முதலே என்க. ஆக்கியோர்ய் நிற்கே ஆளானம் எனும் அன்பரை ஆள் கண்ணன். என்க. ஆன் அஞ்சாய கண்ணன்-பஞ்சகவ்வியமு மாகிய கண்ணன் 'ஆனின்மேய ஐந்து நீ, யவற்றுணின்ற் தூய்மைநீ' எனப் பெரியார் பணித்தருளினார்.

11. **முதலைக் கடலைப் புரிபுல்லை யாற்கு முகுந்தனுக்கு**
முதலைக் கடலை யணிவாற் கரியற்கு முந்தையின்ன
முதலைக் கடலைக் கடைந்தளித் தாற்கன்பு மூள்வர்திரு
முதலைக் கடலைக் குளப்புழுக் கீவல் முரல்கொடியே.

இ-ள்: முதலைக்கு அடலைப் புரி புல்லையாற்கு முதலைக்கு அடுதலைப் புரிந்த புல்லாணியை யுடையானுக்கு, முகுந்தனுக்கு-மோகந்தருவானுக்கு, முதல் ஐக்கு - முதற்கடவுளுக்கு அடலை அணிவாற்கு அரியற்கு - நீறு அணிவானாகிய உருத்திரனுக்கு அரியானுக்கு; முந்தை இன் அமுது அலைக்கடலைக் கடைந்து அளித்தாற்கு - முற்காலத்து இனிய அமுதத்தை அலையினையுடைய கடலைக் கடைந்து உதவினானுக்கு; அன்பு மூள்வர் - பத்திமை மிகுவாராகிய தலைவனுந் தலைவியும், திரு முதலை முரல் கொடியே - காக்கைபே திரும்பி வருதலைக் கரையாய், கடலைக் குளப்புழுக்கு ஈவல் - கடலையுடன் வெல்லத்தைக் கூட்டிப் புழுக்கிய தின்பண்டத்தைத் தருவேன் எ-று.

குளம் - வெல்லம், கடலைக் குளப்புழுக்கு - இதனைக் கட்டிப் புழுக்கென்பர். 'கட்டிப்புழுக்கிற் கொங்கர் கோவே' என்பது பதிற்றுப்பத்து. இது நற்றாய் சொற்புட்

பராஅய்து. முரலுதல் - கரைதல், ஒலித்தல்; கொடி - காக்கை. ''நலசேட்டைக் குலக்கொடியே' என்னுந் திருக்கோவைக்குப் பேராசிரியருரை பார்த்தறிக.

12. ஏனைய வரனைத்தந் தாள்கிலாய்
புல்லை யெந்தைநிற்றீர்ந்
தேனைய வரனையன் முதலோர்ப்
பணியே னிவ்வெளி
யேனைய வரனை வோருந்
தொழுங்கழ லீந்தருள்வை
யேனைய வரனையப் போதலின்
றின்ப மெய்துவெனே.

இ-ள்: ஏன் ஐய வரனைத் தந்து ஆள்கிலாய்-ஐயனே ஏன் வரத்தை அளித்து ஆள்கின்றாயில்லை புல்லை எந்தை-புல்லாணிக்கண் உள்ள எந்தாய்; நிற் றீர்ந்து ஏனைய அரன் ஐயன் முதலோர்ப் பணியேன்-நின்னை நீங்கி மற்றைச் சிவன் அயன் முதலாயோரை வணங்கேன். இவ்வெளியேனை-இவ்வேழையேனை; அவர் அனைவருந் தொழுங்கழல் ஈந்து அருள்வையேல் - அச்சிவன் முதலிய எல்லோருந் தொழுந் திருவடிகளை ஈந்து அருள்வையாயின், நையவரல் நையப் போதலின்று-வருந்தப் பிறத்தலும் வருந்த இறத்தலும் இல்லாமல்; இன்பம் எய்துவன் - இன்பம் எய்துவேன் எ-று.

ஐயன் - அயன் போலி.

13, எய்யாத் தடித்தின்னல் செய்யெனக்
கள்வ ரிடிகுரன்மிக்கு
எய்யாத் தடித்தியங் காவெதும்
புஞ்சுர னேயகவலை
எய்யாத் தடித்தி னிலையாப்
பொருட்பிணிக் கேகுமெண்ணம்
எய்யாத் தடித்தி நெஞ்சே புல்லை
மாதையி டர்க்கு வைத்தே.

இ-ள்: எய் யாத்து அடித்து இன்னல் செய் எனக் கள்வர் - அம்பால் எய் எனவும், கட்டி அடித்துத் துன்பஞ் செய் எனவும், ஆறலை கள்வர்; இடிகுரல் மிக்கு-ஆறலை கள்வர் இடித்துரப்பும் குரலே மிகுந்து, எய் யாது அடி தியங்கா வெதும்பும் - முள்ளம் பன்றியானது யாமரத் தினடியில் நிழல் காணாமல் தயங்கி வெதும்புறுதற்குக் காரணமான; சுரன் ஏய் கவலை - பாலையிற் பொருந்திய கவர்த்த வழிகளில்; எய்யா - இளைத்து; தடித்தின் - மின்னலைப்போல; நிலையாப் பொருட் பிணிக்கு-நிலை யாத பொருளாகிய பிணிப்பினையப் பெறுதற்கு; ஏகும் எண்ணம் - செல்லும் எண்ணமே; எய்யாத் தடித்தி நெஞ்செ - நெஞ்சே அறியாமல் பருக்கின்றாய்; புல்லை மாதை இடர்க்கு வைத்தே - புல்லாணியின்கண் தலைவி யைத் துன்பத்துக்குத் துணையாக வைத்து விட்டு எ-று.

நெஞ்சே புல்லை மாதை இடர்க்கு வைத்துச் சுரனேய் கவலையில் பொரும் பிணிக்கு இளைத்தேகு மெண்ணம் அறியாமையால் தடித்தி என்று தலைவன் பொரு வலித்த நெஞ்சினைக் கழறினாகக் கொள்க எய் என்பதும், யாத்து அடித்து இன்னல் செய் என்பதும் ஆறலை கள்வர் இடிக்கும் குரல்களாம். எய்யும், யாவும் - அப் பாலை நிலப்பொருள்கள். 'எய்யாமையே, அறியாமையே' என்பது தொல்காப்பியம்.

14. வையம் பனைய மடவார் விழியின் மயலுழந்து
வையம் பனைய மடலாக்கி வீதிவரு வர்மற்றூர்
வையம் பனைய மடங்கார் சிவன்றலை வைக்கத்தன்றாள்
வையம் பனைய மடம்பயில் புல்லையில் வாழ்த்தலரே.

இ-ள்: வை அம்பு அனைய மடலார் விழியின் - கூரிய கணை ஒத்த பெண்டிருடைய கண்களினால்; மயல் உழந்து - காமத்தில் வருந்தி; வையம் பனைய மடல் ஆக்கி - பனையின் மடலைத் தேர் ஆக்கி; வீதிவருவர் - தெருவில் வருவர். மற்று - வேறு; ஊர் அம்பல்

நைய மடங்கார் - ஊரார் வைகின்ற இரகசியப் பழிச் சொல் நைந்து தேய மனம் ஒடுங்கார். சிவன் தலை வைக்க-சிவபிரான் தலையில் வைத்துக்கொள்ளும்படி தன் தாள் வை அம்பனை - தன்தாளில் வைத்த கங்கை நீரினை யுடையானை, யம டம்பம் இல் புல்லிலயில் - கூற்றுவ னுடைய வீண்பெருமிதம் இல்லாத புல்லாணியில்; வாழ்த் தலர் - துதிக்கலர் எ-று.

வாழ்த்தலர் வீதி வருவர் மடங்கார் என்க. அம்பல் - முகிழ் முகிழ்த்த சொல்; யமன் சாதுவனாய்ப் போதுவ னாதலின் யம டம்பம் இல் புல்லை எனப்பட்டது.

15. **தலங்காத் தலைமுத லாகக் கொண்**
முத் தொழிறன் கணிருத்
தலங்காத் தலைச்செய் தசோதைக்குக்
காட்டினன் றாணிழலெய்
தலங்காத் தலைஇய வானுறை
புல்லையைச் சார்ந்துபகைத்
தலங்காத் தலைநகர் சுட்டவற்
களாந் தரமிலமே.

இ-ள்: தலம் காத்தலை முதலாகக் கொள் முத் தொழில் - உலகம் அளித்தலைத் தலையாகக் கொண்ட மூன்று தொழிலும்; தன்கண் இருத்தல் - தன்னிடமே நிலைபெறுதலை; அங்காத்தலைச் செய்து - வாய்திறப்பது செய்து, அசோதைக்குக் காட்டினன்-யசோதைப் பிராட்டி யார்க்குக் காண்பித்தான். தாள் நிழல் எய்தலம்-அவன் திருவடி நிழலைச் சேர்ந்திலம். காத் தலைஇய வானுறை புல்லையைச் சார்ந்து - சோலைகள் தழைக்க மேகம் உறை கின்ற புல்லாணியைப் பொருந்தி; பகைத்த லங்காத் தலைநகர் - பகைசெய்த இலங்கையாகிய தலைமையூர்; சுட்டவற்கு - தீத்தவற்கு, ஆள் ஆம் தரம் இலம் - அடிமை யாகும் மேம்பாடு இல்லம் எ-று.

தாணிழல் எய்தற்குரிய அதிகாரி விசேடணம் ஆள் ஆம் தரம் என்று காட்டியவாறு.

16. தரமோ தகமிக்க சான்றோர் பெருநெறி சார்ந்திலனா
தரமோ தகமுலை யார்க்குளனின் மலர்த் தாளைநிரந்
தரமோ தகமில னேனுநின் னெய்தினன் றண்டரளந்
தரமோ தகன்கடற் புல்லைத் தலத்தமர் தற்பரனே.

இ-ள்: தரமோ தகமிக்க சான்றோர் பெருநெறி சார்ந்திலன்-தமக்குத்தகத் தரமோ மிகுந்த சால்புடையார் பெருவழியைப் பொருந்திலேன். ஆதரம் மோதக முலையார்க்குளன்- அன்பு மோதகம் போன்ற முலையினையுடையார் பொருட்டு உள்ளவனாவேன்; நின் மலர்த்தாளை நிரந்தரம் ஓது அகம் இலன் ஏனும் - நின்மலர் போலும் அடிகளை எப்போதும் துதிகும் மனமும் இல்லேன் ஆயினும்; நின் எய்தினன் - நின்னை அடைந்தேன்; தண் தரளம் தர மோது அகன் கடல புல்லைத் தற்பரனே - குளிர்ந்த முத்துக்களைத் தரும்படி பொருகின்ற அகன்ற கடலையுடைய புல்லாணியிலுள்ள 'தத்' என்னும் பதத்திற்குப் பொருளாகிய பரமனே எ-று.

தரம் - மேம்பாடு. பெருநெறி சார்ந்திலன் என்பது - மெய் வேறுபாடு. ஆதர முலையார்க்குளன் என்பது - மனவேறுபாடு. தாளை ஓது அகம் இலன்-என்பது- சொல் வேறுபாடு. இவ்வாறு திரிகரணமும் வேறுபட்டனன் எ-று.

மோதகம் - இனிதமைத்த உண்டை; வடமொழி.

17 பரவையி னாகலவா வின்ப மால்வினை பண்ணலின்றிப்
பரவையி னாகணை மீத்துயில் வோனைவர் பன்னிநிரு
பரவையி னாகம் பெறவளித் தோன்புல்லைப் பாற்கனகாம்
பரவையி னாகமிளிர்வோன் சரண்மன் பதையினுக்கே.

இ-ள்: பர ஐ - பரதெய்வம். இனா கலவா இன்ப மால் - இன்னாமை கலவாத ஆனந்த வடிவாய திருமால்; வினை பண்ணலின்றி - வினை செய்தலில்லாமையால்; பரவையில் நாக அணை மீத்துயில்வோன் - கடலிற் பாம்பணை மீது உறங்குவோன். ஐவர் பன்னி - பஞ்சவர் பத்தினி; நிருபர் அவையில் நாகம் பெற-அரசர் அவையில் துகிலைப் பெறும்படி, அளித்தோன் - இரக்ஷித்தவன். புல்லைப்பாற் கனகாம்பரவயின் ஆகம் மிளிர்வோன் - புல்லாணியின்கண் பொன்மயமான துகிலிடத்தே திருமேனி விளங்குவோன். சரண் மன்பதையினுக்கு - உயிர்கட்கு இரக்ஷகம் எ-று.

பரதெய்மென்றலால், மன்பதைகள் அடிமை என்பதும், இன்னா கலவா இன்ப மால் என்றலால், இவைகள் இன்னா கலந்த துன்புடைய என்பதும், வினை பண்ணலின்றித் துயில்வோன் என்றலால் இவைகள் வினைபண்ண எப்போதும் முயல்வன என்பதும், பன்னி நாகம் பெற அளித்தோன் என்றலால், இவை ஆபத்திற் றம்மைக்காக்கவலியில என்பதும் காட்டி, இவற்றிற்குப் புகுதற் கெளியனாய்ப் புல்லையில் மிளிர்வான் என் றுணர்த்தியவாறு நாகம்பெறவளித்தோன், கனகாம்பர வயின் மிளிர்வோன், என்றியைபு காண்க. துகில் பெற அளிப்பவன் திகம்பரனாகான் என்பது நோக்கு. இனா - இன்னா விகாரம். வினையி னீங்கிய நிலையே உறக்கம் என்பது "ஒருவினையு மில்லாய் போல் உறங்குதியா லுறங்காதாய்" எனக் கம்ப நாடர் வாக்கா னுணர்க.

18. **பதையா வருந்து நிரைக்கா**
மலைக்குடை பண்ணின்மன்
பதையா வருந்தொழும் புல்லைய
னல்லரைப் பார்க்கவென்று
பதையா வருஞ்செய னான்கும்
புகனிரு பன்னருளென்
பதையா வருந்துவை யோநெஞ்ச
மேமெய்ப் பவப்பிணிக்கே.

இ-ள்: பதையா வருந்து நிரைக்கா - பதைத்து வருந்திய ஆனிரைக்காக; மலைக்குடை பண்ணினன் - மலையினாலாகிய குடையைச் செய்தனன்; மன்பதை யாவரும் தொழுபுல்லையன் - உயிரா யுள்ளாரெல்லாரும் ஆராதிக்கும் திருப்புல்லாணியையுடையான். நல்லரைப் பார்க்க என்று - மந்திரியைக் காண்க என; உபதையா அருஞ்சோதனைச் செயல்கள் நான்கும் புகல் நிருபன் - உபதையாக அரியசோதனைச் செயல்கள் நான்கினையும் புகன்ற சக்கரவர்த்தி. அருள் என்பது ஐயா அருந்து வையோ - இவன் அருளென்று சிறப்பித்துச் சொல்லப் படும் மருந்தினை ஐயனே உண்பையோ; நெஞ்சமே மெய்ப் பவபிணிக்கே - மனமே உடம்பொடு கூடிய பிறவி நோய்க்கே எ-று.

நோய்க்கே அருந்துவையோ என்றலால் அருள் என்பது மருந்தாயிற்று. நெஞ்சமே ஐயா அருந்துவையோ என்க. நெஞ்சத்தை ஐயா என்றது அதுவே பிறவிக்கும் வீட்டிற் கும் காரணமாதலைப்பற்றி இனிது போற்றி அழைத்த வாறாம். உபதை என்பன அமைச்சரில் நல்லரைத் தேறற் குரிய சோதனைச் செயல்கள். இவை அறம் பற்றியும், பொருள் பற்றியும், இன்பம் பற்றியும், உயிர்களைப் பற்றி யும் வரும் நான்குவகைச் செயல்கள். உபதா என்பது வடமொழி, மன்னவரெல்லாந் திருமாலமிச மாதலான் அமைச்சர் சோதனை கூறியவனும் சக்கரவர்த்தியாய் உலகாண்டு காட்டிய இவனே என்று கூறியவாறு. சக்கர வர்த்தி ஸ்வரூபமாகி அறங்களை அநுட்டித்துக் காட்டி னன் என்பது விண்டுபுராணத்திற் கண்டது.

19\. பிணிக்கா வலைக்குங் கொடுங்கூற்றை
வென்று பெரும்பவமெய்ப்
பிணிக்கா வலைக்கடப் பானருள்
புல்லைப் பிரான் முனங்கர்ப்

பிணிக்கா வலைவிட் டடவிதந்
தாய்வசை பேரவுருப்
பிணிக்கா வலைபோல் வருமன்னர்
போர்வெல் பெருந்தகையே.

இ-ள் : பிணிக்கா அலைக்கும் கொடுங் கூற்றை வென்று - கட்டி அடிக்கும் கொடிய யமனை வென்று. பெரும் பவமெய்-பெரிய பிறவியையுடைய உடம்பாகிய; பிணிக்காவலை - நோய்ச்சிறையை, கடப்பான் அருள் - கடத்திற்கு அருள்க. புல்லைப் பிரான் - புல்லாணிப் பெருமானே. முனம் கர்ப்பிணிக்கு ஆவலைவிட்டு அடவி தந்தாய் வசைபேர-பழி போகவேண்டி முன்னாளிற் கருக் கொண்ட சீதைக்கு ஆசையை ஒழித்துக் காட்டை உதவினாய். வசைபேர உருப்பிணிக்கா - பழிபோக உருககுமிணியின் பொருட்டு; அலைபோல் வருமன்னர் போர் - கடலைப் போல மேல் வந்த அரசர் போரினை; வெல் பெருந்தகையே-வென்ற பெரிய பெருமை யுள்ளாய் எ-று.

வசைபேர என்பது இடைநிலைத் தீபகம். உருப்பிணி-உருக்குமிணியின் சிதைவு, போர் வெல்பெருந்தகை புல்லைப் பிரான் வென்று கடப்பான் அருள் என்க. ஈருயிர்ப் பெண்டிற்குக் காடு தந்து, ஓருயிர்ப் பெண்டிற் குப் போர் வென்றாய் என்பது குறிப்பு.

20. தகையாம லகன் செலவிட் டனம்புல்லை சாரலம்வைத்
தகையா மலக மெனவுண்மை தேறலந் தையலர்கூற்
றகையா மலக நுதலார்க் கழிவங்கட் டண்ணருண்ம
தகையா மலகற் றுணத்திறப் பாய்கொல் கதாதரனே.

இ-ள் : தகையாமல் அகன் செலவிட்டனம் - தடுக்கா மல் மனத்தைப் போக விட்டோம்; புல்லை சாரலம் - திருப்புல்லாணியைச் சார மாட்டோம். வைத்த கை ஆமலகம் என - கையில் வைத்த நெல்லிக்கனிபோல,

உண்மை தேறலம் - வாய்மையைத் தெளியேம். தையலர் நல்தகையாம் அலக நுதலார்க்கு அழிவம் - பெண்டிரில் நல்ல தகைமையுடையாராகிய உச்சிமயிர் செறிந்த மகளிர்க்கு உடல் பொருள் மனம் மூன்றும் அழிகுவேம். (இங்ஙனமுள்ள எமக்கு) கண் தண் அருள் மதகை - கண்ணாகிய குளிர்ந்த அருண்மடையை; யாம் அலகு அற்று உண்ண - யாம் கணக்கிறந்து அருந்த; திறப்பாய்கொல் - திறப்பையோ; கதாதரனே - திருக்கதையைத் தரித்தவனே எ-று.

அலகம் - அளகம். மதகு-கலிங்குமாம். கொல் - ஐயம். திறத்தற்கேற்ற ஒழுக்கமின்மையால் ஐயம் பிறந்தது. கதாதரன் என்று கூறியது, தண்டான் அடிப்பை என்பது குறித்தது. 'அருளென்னுந் தண்டா னடித்து' எனப் பெரியாரும் பணித்தார்.

21. தாதனிச் சம்பவ நோய்தீர நின்னைச் சரண்புகுந்தேன்
தாதனிச் சம்பொறுக் காச்சீ றடியர்க்குத் தாழ்ந்துள்கரு
தாதனிச் சம்புவி வாழ்வா மெனத்தெளி தற்குனருள்
தாதனிச் சம்பத் ததுவே தண்புல்லைத் தயாகரனே.

இ-ள்: தாதன் இச் சம்பவ நோய் தீர நின்னைச் சரண் புகுந்தேன் - அடியவனாகிய யான் இப்பிறயி நோய் நீங்க உன்னை இரக்ஷகமாக அடைந்தேன். தாது அனிச்சம் பொறுக்காச் சிறடியார்க்கு - மகரந்தங்களையுடைய அனிச்சப்பூவும் பொறுக்கமாட்டாத சிறிய அடியினை யுடைய மகளிர்க்கு, தாழ்ந்து உள் கருதாது - இழிந்து உள்ளம் நினையாமல். அனிச்சம் புவி வாழ்வாமெனத் தெளிதற்கு - அநித்தியம் உலக வாழ்க்கையென்று தெளிவடைதற்கு உன் அருள் தா - உனது அருளைத் தருவாயாக. தனிச்சம்பத்து அதுவே - ஒப்பற்ற செல்வம் அதுவே. தண்புல்லைத் தயாகரனே - குளிர்ந்த புல்லாணியி லுள்ள கருணை வடிவாயவனே எ-று.

சரண்புகா நிலையினும் யான் என்றுந் தாசன் தான் என்று குறிக்கப்பட்டது. அநித்யம் - அநித்தமாகி அது அநிச்சமாய்ச் சிதைந்தது. நித்யம் - நித்தம், நிச்சம் என வருதல் காண். 'அருட்செல்வம் செல்வத்துட்செல்வம்' (குறள்) என்பதனாற் றாந்தாம் உடைய அருளே செல் வத்துட் செல்வமென்று கூறுதலான் அதனினும் சிறந்த தனிச்சம்பத்து இறைவன் அருட்பேறு என்றுணர்க. ஏ - தேற்றம்; பிரிநிலையுமாம். தயாகரன் என்றது, அருளைத் தரற்கேற்ற அருள்வடிவன் என்று விண்ணப்பித் தவறாம்.

22. கரவந்த நன்கனி போல் வண்ண
மாயவ காண்மறைச்சே
கரவந் தனன்புல்லை யம்மானின்
சேவையென் கண்ணுணச்சா
கரவந் தனநினக் கேதகு மென்று
கணித்தனன் யான்
கரவந் தனன் மையிலனேனு
நின்பொற் கழல்படிந்தே.

இ-ள் : கரவந்த நன்கனிபோல் வண்ண மாயவ- களாவின் நல்ல பழம் போலும் நிறமுடைய மாயோயே. காண் மறைச் சேகர - எல்லாப் பொருளையுங் காண்டற் குக் கருவியாயுள்ள வேதத்தின் தலையிலுள்ளவனே. வந்தனன் புல்லை - புல்லாணித் தலத்திற்கு வந்தேன். நின் சேவை என்கண் உண - நினது சேவையினை என் விழிகள் பருகும் வண்ணம். சாகர வந்தனம் நினக்கே தருமென்று கணித்தனன் - கடல் வணக்கம் உனக்கே தக்க தென்று கணித்துக் கொண்டேன். யான் கரவு அந்தன் நன்மை இலனேனும் - நான் கரத்தலைடைய குருடன் நலம் இல்லேனாயினும். நின் பொற்கழல் படிந்தே - நின் பொன்போலுங் கழல்களை வணங்கி எ-று.

நின் பொற்கழல் படிந்தே தகுமென்று கணித்தனன் என்க. சாகர வந்தனம் - கடல்போலும் வணக்கம் எல்லாம் எனவும், கடல் வந்து வணங்குதலும் கொள்க. கடல் வந்து வணங்கியது இத்தலத்தே என்பது அறிக. கரவந்தம் - களா.

23. படிக்கா மனைத்தும் படைத்துச்
சுரர்க்கூண் பகுத்தனைக
படிக்காம னைப்பெரும் போராட்டங்
கண்டனை பல்லுயிரிப்
படிக்கா மனைச்சுகத் தாழ்த்திவிட்
டாய்நற்பரம நின்பேர்
படிக்கா மனையுமென் றெண்ணாயென்
புல்லைத்தர்ப் பாதனனே,

இ-ள். படிக்கு ஆம் அனைத்தும் படைத்து - மண்ணுலகிற்கு ஆகிய எல்லாவற்றையும் சிருட்டித்து, சுரர்க்கு ஊண் பகுத்தனை - தேவர்க்கும் உணவினைப் பகுத்தீத்தனை. கபடிக்காமனை - கபடமுடையனாகிய மன்மதனை, பெரும் போராட்டங் கண்டனை - மஹா யுத்தம் செய்து விளையாடுதலைச் செய்தனை, பல்லுயிர் இப்படிக்கா மனைச்சுகத்து ஆழ்த்தி விட்டாய் - பல சீவரையும் இவ்விதமாக இல்வாழ்க்கையின்பத்திலே அமிழ்த்திக் கைவிட்டாய், நற்பரம - நற்றலைவ. நின்பேர் படிக்காமல் நையும் என்று எண்ணாய் என்-இவை நின் திருப்பெயரை வாசிக்காமல் தேயும் என்று திருவுளம் பற்றாய், என்ன காரணமோ. புல்லைத் தர்ப்பாதனனே - புல்லையிற் றருப்பை ஆகிய ஆசனத்தில் வீற்றிருப்பவனே. எ-று.

தர்ப்பாசன மழகியார் என்பது இத் தல மூர்த்தி திருப்பெயர். ஊண் பகுத்துக் காமனை ஆட்டங் கண்டனை என்றது 'ஏதுண வுண்ணினு மெவர்க்

கும் வேள்கணை தீர்திறமின்று' என்பது குறித்தது. அநித்திய சுகத்தாழ்த்தியதால் நித்திய சுகத்திற்கு நின்பேர் படிக்காமல் நையும் என்று எண்ணாய் என்னோ எ-று.

24. தருப்பாத நனைந்திடு நீர்கிளை யெங்குஞ் சாருமென்று
தருப்பா தநனை வழிபடு மூதிலர் தண்புல்லைமா
தருப்பா தநனைத் தனவிலைக் கித்தரை சாலுங்கொல்பந்
தருப்பாத நனைக்கொள் கர்ப்பூர மொக்குந் தாரதிபரே.

இ-ள் : தருப்பாதம் நனைந்திடு நீர் கிளை எங்கும் சாருமென்று - மரத்தடியிலே நனையச் செய்து இடும் நீர் அம்மரத்தின் கிளையுள்ள எவ்விடத்தும் பொருந்தும் எனச் சொல்லி, தருப்பா தநனை வழிபடும் மூதிலர் - தருப் பையை ஆசனமாகவுடையவனைப் பூசிக்கும் மறக்குடி யினருடைய, புல்லைமாதர் உப்பாத நனைத் தன விலைக்கு - புல்லாணியிலுள்ள அழகிய கன்னியர் தம் பருக்காத மொட்டுப் போன்ற முலைவிலக்கு. இத்தரை சாலுங்கொல்-இவ்வுலகம் போதிய தாமோ. பந்தர் உப்பா தநனைக்கொள் கர்ப்பூரம் ஒக்கும் தராதிபரே - அரசரே பண்ட சாலையிலுள்ள உப்பா பொருளைக் கொள்ளு தற்குக் காரணமான கருப்பூரத்தை ஒப்பது உலகாளும் அரசரே எ-று.

மாதருடைய இன்னும் அதிகமாகப் பருக்காத மொட்டுப் போன்ற முலைக்கு இவ்வுலகு சாலாது என்ற தனால், இன்னும் பருத்தால் மூவுலகுஞ் சாலாது என்று குறித்ததாம். அங்ஙனமாகவும் இச் சிறு பொருளை முலைவிலையாகக் கொணர்ந்தீர் என்று இழித்து உப்பா கர்ப்பூரம் ஒக்கும் என்றார் என்க. தநன் - தநம் போலி. மூதிலர் - மறக்குடியினர். மரத்தினடியிட்ட நீர் கிளைக் காகல் போல, இவனைப் பூசித்தால் எல்லா வுயிரையும் பூசித்தபடியாம் என்று வழிபடுவார் என்க. பந்தர் - கடற் கரையிற் பண்டசாலை. 'பந்தர்' பதிற்றுப்பத்து; அரசர் பரிசங்கொணர்ந்தாரை நோக்கிக் கூறியது.

25. தராவிரும் பாத லிரும்புபொன்
னாதறகச் செயுஞ்சித்
தராவிரும் பாதரச மாரணஞ்
செய்த கையிரும்பத்
தராவிரும் பாததென்னோ புல்லைமாயன்
பொற்றாள் பெறின்விண்
தராவிரும் பாதகந் தீர்வீர் பொன்
னாடுந் தலைக்கொள்விரே.

இ-ள். தரா இரும்பு ஆதல் இரும்பு பொன்னாதல் தகச் செயும் சித்தராவிரும் - தராவை இரும்பாதல் தகவும் இரும்பினைப் பொன்னாதல் தகவும் செய்யும் சித்து வல்லுநராவீரும். பாதரசம் மாரணம்செய்த கையிரும் - பாதரசத்தைத் திரும்பவராதபடி மாரணஞ் செய்யவல்ல பெருமையையுடையீரும்; பத்தரா விரும்பாத் தென்னோ-அன்புடை அடியாராக விழையாதது யாது காரணமோ; புல்லை மாயன் பொன்தாள் பெறின் - புல்லாணி மாயன் பொன்னடி கிடைக்கபெற்றால், விண் தரா இரும்பாதகம் தீர்விர் - துறக்கம் தராத பெரிய பாதக வினையைத் தீர்ந்து கொள்வீர். பொன் நாடுந் தலைக்கொள்விரே - பொன்மயமான திருநாட்டை யும் சென்றடைவீர் எ-று.

உலோக மாறுதலையும் ரசமாரணத்தையும் செய்வீர் பத்தராக விரும்பாத தென்னோ, பொன்னடி பெறின் பாதகந் தீர்வீர், பொன்னாடும் கிடைக்குமே என்று அறிவுறுத்தியவாறு.

26. தலையாலங் கானஞ் செருவென்ற
பாண்டியன் றாள்வணங்கித்
தலையாலங் கான பணிசெய்த
புல்லைமன் தன்கதைம

தலையா லங்கானஞ் செயக்கேட்
டுகந்த வன்தான் கண்படு
தலையாலங் கானல்ல ரராமீக்கொள்
தெய்வஞ் சரணமஃகே.

இ-ள். தலையானங்கானம் - தலையாலங்காடு என்ற இடத்தில்; செருவென்ற பாண்டியன் - போர் வெற்றி கொண்ட செழியன்; தாள் வணங்கி - திருவடிகளைத் தொழுது; தலையால் அங்கு ஆனபணி செய்த புல்லை மன் - சிரசால் அவ்வுழிக்கு இயன்ற திருப்பணி யெல்லாம் செய்த புல்லாணி மன்னன்; தன் கதை - தன் சரிதையினை; மதலையால் அம்கானஞ் செயக் கேட்டு - தன் மகவால் அழகிய பாட்டாகப் பாடச் செவியுற்று, உகந்தவன் - மகிழ்ந்தவன்; தான் கண்படுதலை - தான் துயிலுதலை; ஆலங்கால் நல் அரா மீக்கொள்தெய்வம்-விடத்தைக் கக்கு கின்ற நல்ல பாம்பின் மேற் கொண்ட கடவுள். சரண் நமக்கே - நமக்கே இரக்ஷகம் எ-று.

இது முன்னே பாண்டியர் கோயிலாதலாற் பாண்டியன் வணங்குதல் கூறப்பட்டது. இக் கோயில் பழைய பாண்டியர் திருப்பணியுடையது, இறைவன் அமிசத்தால் மன்னனாகிய பாண்டியன் வணங்கு மன் என்க. கதை கேட்டுகந்தவன் இத்தலத்துப் பட்டாபிராம மூர்த்தி. புல்லைமன் - தெய்வச் சிலையார். அராமீக் கொள் தெய்வம் - பள்ளிகொண்ட பெருமாள். இம்மூன்று வடிவமும் இங்கு உண்மை காண்க. 'புல்லாணித் தென்னர் தமிழ்' என்பதனாலும், பாண்டியன் வணங்குதற்குரிமை காணப்படும். 'கவுரியர் கோடி'' (அகம்) ஆகலான் அத் திருவணைக்கரைக் கோயில்கள் அவர் வணங்குவன என அறிக.

27. நமற்கார வுய்த்த வுணவா முயிர்மெய்கொள் நாளிலெல்லா
நமற்கார மும்புகுந் தெய்வத மென்றுள நம்பித் தொழீர்
நமற்கா ரருந்துணை யாயொளிர் வார்புல்லை நாரணன்
னமற்கார மோட்டுவா னந்தகோன் றனயனன்றியே [முன்

இ-ள்: நமற்கு ஆர உய்த்த உணவு ஆம் உயிர்-எமனுக்கு உண்டற்கு என்று உய்க்கப்பட்ட உண்டிபோல உள்ள உயிர்; மெய்கொள் நாளில் - உடம்பைக் கொண்டுள்ள வாழ்நாளிலே; எல்லா நமற்காரமும் புகும் தெய்வதமென்று - ஸகல வணக்கங்களும் முடிவாய்ப் புகுதற்குரிய கடவுளென்று. உளம் நம்பி - உள்ளத்தால் உறுதி செய்து; தொழீர் - தொழுவீராக. நம் அற்கு ஆர் அருந்துணையாய் ஒளிர்வார் - நம்முடைய இருட்டிற்கு யார்தாம் அரிய வழித்துணையாய்ச் சுடரவல்லார். புல்லை நாரணன்-புல்லாணியில் யக்ஞ நாராயண மூர்த்தியாயும், முன்னம் மல்காரமோடு அடுவான் - பண்டு மல்லரைக் கோபமொடு கொல்லுபவனும், நந்த கோபன் தனயன்- நந்தகோபனுடைய மகனும் ஆகியவனை. அன்றியே - அல்லாமலே.

நாரணன் அடுவான் தனயனன்றி யார் துணையாயொளிர்வார். உயிர் மெய்கொள் நாளிலே தொழீர் என்க. உயிருண்ணுங் கூற்றென்ப. "எல்லாத் தேவ நமஸ்காரமும் கேசவனையே சென்றடையும்" என்ற வடமொழியுண்மை காண்க. அல்லுக்குத் துணையாதலும் வேண்டும், ஒளிர்தலும் வேண்டும், இங்ஙனமாகலான் "விளக்கொளியெம்பெருமான்" என்பர். "வேதமும் வேள்வியும் ஆனான்" என்பதனால் யக்ஞநாரணன் ஆதலுணர்க.

28. தனையனு மானத் தளக்கரி யானற் றயரதற்கு
தனையனு மானத்தள் சீதை மணாளனும் தானென்றுள்ள
தனையனு மானத் தகவோர வோதினன் றண்புல்லைநித்
தனையனு மாநத்தர னையந்தீர்த்த தயாகரனே.

இ-ள். தனை அனுமானத்து அளக்க அரியான் - தன்னை வழியளவையால் அளந்து சொல்ல அரியவன். நல்தயரதற்குத் தனையனும் மானத்தள் சீதை மணாளனும் - நல்ல தசரதனுக்கு மகனும், மானமுடையாளாகிய

சீதாப்பிராட்டியார்க்கு நாயகனும், தான் என்று உள்ள தனை - தானே என்று உள்ள தன்மையை, அனுமான் அத்தகவு ஓர ஓதினன் - திருவடி அம் மேம்பாடு தெரிந்து கொள்ளும் வண்ணம் ஓதினன். தண்புல்லை நித்தன் - குளிர்ந்த புல்லாணியிலுள்ள நித்திய மூர்த்தி. ஐயன் - ஆரியன், உமா நத்து அரன் ஐயம் தீர்த்த தயாகரன் - உமாதேவியார் விரும்பும் அரனுடைய இரத்தலைத் தீர்த்த அருள் வடிவன். எ-று.

அரியானும், ஓதினனும், நித்தனும், ஐயனும், ஐயந் தீர்த்த தயாகரன் என்க. ஆரியன் என்பது ஐயன் என மரீயிற்று பூச்சியன எ-று மானத்தளாதலாதற் சீதை மணாளன் என்று ஓதினன் என்றபடி.

29. **கருணா கரவான் பெயராற்**
சிறந்த கவிப்பெரும்பா
கருணா கரவர்க் கருள்பது
மாசனி காதலர்நா
கருணா கரவா வறுவார் தொழும்
பெருங் காமர் தண்பொங்
கருணா கரவா சகங்கிளி தேர்
புல்லைக் கண்ணவரே.

இ-ள்: கருணகர வான் பெயராற் சிறந்த கவிப்பெரும் பாகர் - கருணாகரர் என்று உயர்ந்த திருநாமத்தால் சிறப்புடைய, குரங்கிற்குப் பெரிய பாகனாயினவர். உணாகர வார்க்கு அருள் பதுமாசனி காதலர் - உணவினைப் பசித் தார்க்கு ஒளியாது நல்குவார்க்கு அருள்கின்ற தாமரையை இடங்கொண்ட திருமகட்குக் காதலைச் செய்பவர். நாகருள் நாகர் - தேவருள்ளே தேவர். அவா அறுவார் தொழும் பெருங்காமர் - ஆசை ஒழிவார் தொழுகின்ற மன்மத மன்மதர். தண்பொங்கருள் நாகர வாசகம் கிளி தேர் புல்லைக் கண்ணவரே - குளிர்ந்த சோலையில் நாகர

எழுத்தாலெழுதப்படும் வடமொழி வாசகங்களைக் கிளிகள் தேர்தற்குக் காரணமான புல்லாணியினிடந் துள்ள அவரே என்க.

இத் தலத்து இராமனுக்குக் கருணாகரன் என்பது திருப்பெயர். க்வி-அநுமான். பாகர் - ஊர்பவர். பதுமாசனி-இத்தலத்துப் பிராட்டி திருநாமம் மனிதர்க்குத் தேவர் போலத் தேவருள் தேவர் எ-று.

'மனிதர்க்குத் தேவர்போலத் தேவருள் தேவர் எ-று. மனிதர்க்குத் தேவர் போலத் தேவர்க்குந் தேவாவோ' என்ப. எல்லாக் காமமும் அறுவார் விழைகின்ற பெருங்சாமர், காமரிற் பெரியர். நாகரவாசகம் - வடமொழி நாகரலிபியில் எழுதப்பட்ட மொழித்தொடர். சோலைகளிலே நூல் பயிறல் உண்டாதலாற் கிளிகள் தேர்தற்கு அமயம் உண்டு என்றறிக. 'கந்தனையனையவர் கலைதெரி கழகம், நந்தன வனமல நறைவிரி புறவம் (கம்ப்) என்ப. கருண ஆகரம் - அருள்வடிவு.

3U. கண்ணனை யாதவனைத் தொழுவார்க்
கலர்கிற் பர்கஞ்சக்
கண்ணனை யாதவனைக் கண்டெனப்
புல்லங் காடனருட்
கண்ணனை யாதவனைக்
காலதூதர் கறுத்திவன்வன்
கண்ணனை யாதவனைத் துக்கொல்வா
யென்பர் காலனுக்கே.

இ-ள்: கண்ணனை யாதவனைத் தொழுவார்க்கு-கண்ணபிரானை யதுகுலத்து அவதரித்தவனை வணங்குவார்க்கு, அலர்கிற்பர் - முகம் மலர்தலைச் செய்வர். கஞ்சக்கள் நனை ஆதவனைக் கண்டு என - தாமரையின் கள்ளுடைய மொட்டு சூரியனைக் கண்டாலென்ன, (அலர்கிற்பர் என்க) புல்லங்காடன் அருட்கண் நனையாதவனை-புல்லாரணியனது திருவருளிலே துளியேனும் நனையாதவனை, காலதூதர் - எமதூதர்கள், கறுத்து - சினந்து,

இவன் வண்கண்ணன் ஐயா தவநைத்துக் கொலாய் என்பர் காலனுக்கே - இவன் வன்கண்மையுடையவன் மிகவும் நையச் செய்து கொல்வாயாக ஐயனே என்று காலனுக்கே விண்ணப்பிப்பர் எ-று.

மிகக் கொடியனாதல் பற்றி ஐயா நீயே நைத்துக் கொல்வாய் என்று விடுவர் எ-று. தாம் செய்யும் தண்டம் போதாதென்று கருதி இங்ஙனம் சொல்வர் எ-று. இத்தகைய தூதர் தொழுவார்க்கு நனை ஆதவனைக் கண்டென அலர்கிற்பர் என்க. 'சாதுவராய்ப்போதுமின்' என்று எமதூதுவர்க்கு ஓதியதுண்மையால் இவர்பால் இங்ஙனம் மகிழ்வர் என்க. புல்லங்காடு - புல்லாரணியம். இப்பெயர் மிகப்பழைய தென்பது "மாறோகத்துக் காவிதியார் மகனார் புல்லங்காடனார் செய்தது" கைந் நிலை என்றதனா லறியப்படும்.

31. கேத நத்தஞ் செய்தலில்லா வறிவொளி கேடில சா
கேதனத் தம்புக லில்லாச் செழுமதி சிந்தித்தவர்
கேதநத் தந்துடைத் தாக்கந் தருமுது கேசவனீள்
கேதனத் தம்புள் ளுயர்த்தா னிடஞ்சீர் கிளர்புல் லையே.

இ-ள்: கேது அநத்தம் செய்தல் இல்லா அறிவொளி- கேதுக் கிரகத்தால் கேடு செய்யப்படுதலில்லாத ஞானச் சுடர். கேடு இல சாகேதன் - போரிற் கெடுதலில்லாத அயோத்தியையுடையவன், அத்தம் புகல் இல்லாச் செழுமதி - அஸ்தனமடைதலில்லாத செழுமையையுடைய சந்திரன், சிந்தித்தவர் - விடாது நினைத்தவருடைய, கேதம் நத்தம் துடைத்து - துன்பத்தையும் கேட்டையும் துடைத்து, ஆக்கந்தரும் - அபிவிருத்தியைத் தருகின்ற, முதுகேசவன் - பழைமையான கேசவ நாமமுடையோன். நீள்கேதனத்து அம்புள் உயர்த்தான் - நீண்ட கொடியில் அழகிய பறவையை உயர்த்தினவன். இடம் சீர்கிளர் புல்லையே - எல்லாச் சிறப்பும் விளங்கும் புல்லாணியே எ-று.

கேது கேடு செய்யும் சூரியன் ஒளியின் வேறு என்றற்குச் செய்தலில்லா எனப்பட்டது. புறவிருள் நீக்கும் அவ்வொளியின் வேறாய் அகவிருள் நீக்குவ தென்றற்கு அறிவொளி எனப்பட்டது. "ஞானச் சுடரே" என்பர் பெரியாழ்வார். மதி - கலாதரன். அத்தமியாத கலாதரன். கேதம் - துன்பம். ஆக்கத்தரும் என்றலால் நத்தம் ஆக்கம் ஆகாமை யுணர்க. கேசவன் - பிரமனையும் ஈசனையும் தன்கண் உடையவன் இதனால் இவன் பழைமை யுணரப்படும். அறிவொள்ளி, செழுமதி என்று கேடிலாமை கூறிக் கேடின்றி ஆக்கந் தருநல் கூறியவாறு. இருவரையுந் தண்கண் உடைமையால் தரும் ஆக்கம் தன்னததாலும் அழியாமையும் குறித்ததாம், புள்ளுயர்த் தான் என்றது அங்ஙனம் ஆக்கந்தந்தது காட்டியதாம். ஸாகேதம் - அயோத்தியின் பெயர்.

32. புல்லா ரணியன் மிலைந்தவன்
மாறன் பொறையன்றொழும்
புல்லா ரணியன் புநிதாதி
சேதுப் புனற்றுறைவன்
புல்லா ரணியன்றிய வூரழித்
தவற் போற்றினவன்
புல்லா ரணியன் புடனீவ
ளெல்லாப் பொருளையுமே,

இ-ள்: புல் ஆர் அணியல் மிலைந்தவன் - புல்லிய ஆத்திமாலையைச் சூடியவனாகிய சோழனும், மாறன் - பாண்டியனும், பொறையன் - சேரனும், தொழும் புல்லா ரணியன்-தொழுகின்ற புல்லங்காடன். புநித ஆதிசேதுப் புனல் துறைவன் - தூய ஆதிசேது தீர்த்த துறையையுடையவன், புல்லார் அணி அன்றிய ஊர் அழித்தவன்-பகைஞர் அலங்கரித்த பகைத்த நகரத்தை அழித்தவன் ஆகிய, இவனைப் போற்றின்-வழிபட்டால். அவன் புல்லு ஆரணி-அவன தழுவிய வேதருபிணியாகிய இலக்குமி, அன்புடன்

ஈவள்-விருப்பத்துடன் நல்குவள். எல்லாப் பொருளையும்-ஸகல செல்வத்தையும் எ-று.

போற்றின் ஆரணி ஈவள் என்க. இறைவன் விபீடண ஆழ்வானுக்கு இராச்சியந் தந்து அவனைச் சிரம் ஜீவியாக்கிய திருப்பதியாதலான் தமிழ் மூவேந்தர் தாமும் தம் செல்வமும் நிலைத்தற்குத் தொழுவர் என்க. ஆதிசேது தீர்த்தம் உடைமையும் அவர் தொழற்குக் காரணமாகும். இது மூர்த்தி ஸ்தலம் தீர்த்தம் மூன்றாலு முள்ள சிறப்புக் கூறிற்று. அழித்தவன்—''இலங்கை மலங்கச் சரந்துரந்த வில்லாளன்'' என்பர் ஆழ்வார். அவன் புல்லு ஆரணி - ஆத்ம வித்யா ரூபிணியாக ஸ்ரீஸ்துதியிற் பரசரபகவான் கூறினன். புல்லார் அணி ஊர் - புல்லார் அன்றிய ஊர் என்க. புல்லாருடைய ஊரா யினும் அன்றிய ஊராரை யல்லது அன்றாத விபீடணன் முதலிய ஊராரை அழித்திலன் ஆதலால் அன்றிய ஊர் அழித்தல் கூறப்பட்டது. அன்றுதல் - பகைத்தல். புநித ஆதி - புநிதாதி, வடநூல் முடிபு.

தலைவன் பணிசெய்வார்க்குத் தலைவி அன்புடன் சோறிடுவது போல்வது. ''வேரி மாறாத பூமே விருப்பாள் வினை தீர்க்குமே''என்றார் நம்மாழ்வாரும். இத்தலத்துக்கு நாந்தி கூறிய ஆழ்வார் ''மன்னவராய் மண்ணாண்டு வானாள முன்னுவரே'' எனக் கூறுதலாள் இத் தலம் அரசுக்கு வழிபடத்தக்கதாதல் உணர்க.

33. ஐயாலங் கானகத் தேகண்
டமர்ந்த வருண் முதலாம்
ஐயாலங் கானகல்செய் மணிப்பாப்
பணையாய் புல்லையாய்
ஐயாலங் காநகர் தீத்தநல்
வென்றிவில் லாயருளாப்
ஐயாலா! கான கதலைதடு
மாறிய வந்திமத்தே.

இ-ள்: ஐ ஆல் அம்கானகத்தே கண்டு அமர்ந்த அருள் முதலாம் ஐ - பஞ்சவடவிருக்ஷத்தை அழகிய காட்டிலே கண்டு அங்குத் தங்கிய கருணைக்கு முதல்வனாகிய கடவுளே; ஆலம் கால் நகல் செய் மணிப்பாம்பு அணையாய் - விடத்தைக் கக்குகின்ற விளக்கஞ்செய் மணியினையுடைய அரவணையாய். புல்லையாய் - புல்லாணியையுடையாய் ஐயா - ஆரியனே, லங்கா நகர் தீத்த-இலங்கை ஊரைச் சுட்ட; வென்றி வில்லாய் - நல்ல வெற்றிச் சிலையாய் அருளாய் - அருள்வாயாக. ஐயால்-கோழையினால் அங்கு ஆன கலை தடுமாறிய அந்திமத்தே - அவ்வுழியாகிய மூச்சுத் தடுமாறுதலுற்ற இறுதிப் பொழுதத்தே எ-று.

அந்திமத்தே அருள்வாய் என்க. ஐயால் - பஞ்ச வடம். இதனால இறைவன் அமர்ந்த இடம் பஞ்சவடி எனப்பட்டது. கலை - சூரியகலை சந்திரகலை எனப் பெயரிய இருதுளை மூச்சும். இத் தலத்து இராமபிரானை அழைத்து அந்திமத்து அருளாய் என்றது தன் தாரக மந்திரத்தால் இறப்பார்க்கு முத்தியளிப்பவனாதற் சிறப்பால் என்க

34. மத்தாக மந்தரம் வைத்தாய் புல்லாணி நிவாசநிக
மத்தா கமந்தரல் செய்தா யடியேன் மருண்டபுன்கா
மத்தாக மந்தரங்கத் தேவருத்தவளர் தருகன்
மத்தாக மந்தரமாம் போதுநீ யென்முன் வாதரற்கே.

இ-ள்: மத்தாக மந்தரம் வைத்தாய்-மந்தரமலையை மத்தாக வைத்தாய். புல்லாணி நிவாச - திருப்புல்லாணியில் வசிப்பவ, நிகமத்து ஆகமந்தரல் செய்தாய் - வேதத்தை ஒப்ப பாஞ்சராத்திராகமத்தை உதிசெய்தாய் அடியேன் மருண்ட புன்காமத் தாகம் - அடியேனது மருட்சியைத் தந்த புல்லிய காமவேட்கை, அந்தரங்கத்தே வருத்த - இரகசியத்தே துன்புறுத்தாநிற்க வளர் தரு கன்மத்து ஆகம் - அதனால் வளர்கின்ற வினைகளையுடைய உடம்பு, அந்தரம் ஆம்போது - வேறாகும் தருணம் நீ என்முன் வா தரற்கே - நீ உதவுவதற்கு என் முன்னே வருவாயாக.

மத்தாக மந்தரம் வைத்து உடல் காத்தவாறும்' ஆகமந்தரல் செய்து உயிர்காத்தவாறும் கூறிற்று. காமத்தாகம் வருத்த வளர்தரு வினை உடம்பு என்க.

35. வாத மருந்திய பாப்பணை யாய்புல்லை மாதவமூ
வாத மருந்திய வுட்கண முண்ண வகுத்தவமே
வாத மருந்திய வாசுர வீணரை மாய்வித்தவ
வாத மருந்தியக் கங்கொள் மெய்வீழ் மரணத்தெற்கே.

இ-ள் : வாதம் அருந்திய பாம்பு அணையாய் காற்றினை உண்ட அரவணையாய்; புல்லை மாதவ-புல்லாணியிலுள்ள இலக்குமி நாயக. மூவாதமருந்து இயவுஉட்கணம் உண்ண வகுத்தவ - கிழத்தன்மை யெய்தாமைக்குக் காரணமாகிய அமிழ்தினைத் தேவகணம் அருந்தப் பகுத்தீத்தவனே, மேவாது அமர் உந்திய - நினனை விரும்பாது போரை முற்செலுத்திய ஆசுர வீணரை மாய்விந்தவ - ஆசுரராகிய வீண் செயல் உற்றவரை மாயச் செய்தவ. வா-வருவாயாக. தமரும் தியக்கங்கொள - சுற்றத்தவரும் மயக்கங் கொள்ள, மெய் வீழ் மரணத்து- உடல் கீழ்விழும் மரணத்தசையில், எற்கு - எனக்கு எ-று.

மெய் வீழ் மரணத்து எற்கு வா என்க. தமரும் - மெய் வீழாத தமரும் என்க. தேவாசுரயுத்நம் அமுதங் கொடுத்த போது உண்டாயது பற்றிச் சேர்த்துக் கூறப்பட்டது.

36. மரஞ்சத்த மாமலை போல்பவைக்
கோர்கணை வைத்தவர்கா
மரஞ்சத்த மாக வளிசெய்
துழாயினர் மன்மதகா
மரஞ்சத்த மாமுக வற்குயர்
மாதுலர் வாணன்செய்ச
மரஞ்சத்த மாற்ற றெரித்தார்
தண்புல்லையின் மாயவரே.

இ-ள்: மரம் சத்த மாமலை போல்பவைக்கு - மரங்கள் ஏழு பெருமலைபோல்வனவற்றிற்கு, ஓர் கணை வைத்தவர் - ஒரு கணையே வில்லின்கன் வைத்தவர். காமரம் சத்தமாக அளிசெய் துழாயினர் - வண்டுகள் காமர இசையே ஒலியாகச் செய்கின்ற திருத்துழாய் மாலையையுடையவர், மன்மதகாமர் - மன்மதனுக்கு மன்மதனாயுள்ளவர், அஞ்சு அத்த மாமுகவற்கு உயர் மாதுலர் - ஐங்கர யானை முகவனுக்கு உயர்ந்த தாய் மாமனார், வாணன் செய் சமர் அஞ்சத் தம் ஆற்றல் தெரித்தார் - வாணாசுரன் செய்த போரில் அவன் அஞ்சும் படி தம் வலி புலப்படுத்தினவர் இவர். புல்லையின் மாயவரே - புல்லாணியில் உள்ள மாயவர் எ-று.

வைத்தவர் துழாயினர் காமர் மாதுலர் தெரித்தவர் புல்லையின் மாயவர் என்க. மாயவர் - மாயையைத் தம் வயமாகவுடையவர். மாயை - ஞானம் என்று கூறி அதனை உடையார் எனினுமமையும். 'ஆத்ம மாயயா' என்னும் கீதையில் 'என்னறிவால்' என்றார் ஸ்ரீபாஷ்ய காரர்.

37. மாய மநந்தம் புரிகிற்பர் புல்லையை வாழ்த்தலர்கும்
மாய மனந்தம ருண்ணாம லுண்டு மருந்தருந்தி
மாய மனந்தமி லெண்ணாது வாழ்வர் வவ்வித்திரு
மாய மனந்த வமயம் வரினென் வலமுளரே.

இ-ள்: மாயம் அநந்தம் புரிகிற்பர் - வஞ்சனை அளவில்லாதன செய்வர், புல்லையை வாழ்த்தலர் - புல்லாணியைத் துதிக்கலர். கும்மாயம் அனம் தமர் உண்ணாமல் உண்டு - குழைந்தபருப்பும் சோறும் சுற்றத்தாருண்ணாமல் தாமே உண்டு. மருந்தருந்தி - நோய்க்கு மருந்தும் உண்டு. மாய மனம் தமில் எண்ணாது - சாதற்குத் தம்முழி மனம் எண்ணாமல், வாழ்வர் - வாழா நிற்பர் வவ்வித்திருமா யமன் அந்த அமயம் வரின் - உயிரைக் கவர்ந்து திரும்பாத

கூற்றுவன் அந்தத் தருணத்தில் வந்தால், என்வலம் உளர் - என்னவலியுள்ளார் எ-று.

கும்மாயம் - பருப்புக் குழைவு. அனம் - அன்னம், இடைக்குறை. அந்த அமயம் என்று அங்ஙனம் வாழ்கின்ற தருணம் எ-று.

38. வலத்த வராக வடிவாய்ப் படிகொண்ட மன்னதிரு
வலத்தவ ராகவ வண்புல்லை மாயவ வாழ்த்திலர
வலத்தவ ராக வடுவாய் மலையன் வழிபடுகோ
வலத்தவ ராக வலர்த்தா ளிணையென்னுள் வைத்தருளே.

இ-ள் : வலத்த வராக வடிவாய்ப் படிகொண்ட மன்ன - வலியுடைய பூவராக மூர்த்தியாய்ப் பூமியை எடுத்துக் கொண்ட கோவே, திருவலத்தவ - திருமகளை வலப்பக்கத்து வைத்தவனே, ராகவ - இராகவனே, வண்புல்லை மாயவ - வண்மையை யுடைய புல்லாணி மாயவனே, வாழ்த்திலர் அவலத்தவராக - துதியாதவர் வருத்தமுடையவராகும் வண்ணம், அடுவாய் - சங்கரிப்பவனே, மலையன் - மலையமான் திருமுடிக்காரி, வழிபடு கோவல் அத்த -வழிபாடு செய்யும் திருக்கோவலூரிலுள்ள தந்தையே, ராக அலர்த்தாளிணை - சிவப்புடைய மலர் போலும் இருதிருவடிகளையும், என் உள் வைத்து அருள் - என் உள்ளத்தே வைத்தலால் அருள்க, எ-று.

படி தாங்கிக் கொண்டதினால் மன்ன என்றழைத்ததாம். திருவலத்தவ 'வலமார்பினில் வாழ்கின்ற மங்கை' என்ப. இக்கோயிலிற் பதுமாசனித்தாயார் தெய்வச்சிலைப் பெருமாளுக்கு வலப்பக்கத்தே கோயில் கொண்டிருப்பது ஈண்டைக்கு நினைக்க. வண்மாயவ எனஇயையும். 'வள்ளல் மாயவன்' என்று இத்தலத்தே பாடியருளுதல் காண்க. அவலத்தவ ராதனல இரணியன் இராவணன் துரியோதனாதியர் பாற்காண்க. மலையன் கோவலூரை வழிபடுதல், 'பொற்புடைய மலையரையன் போற்ற நின்ற

பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே' என்பதனா லறிக. இப் புல்லைக்கும் திருக்கோவலூர்க்கும் ஒத்தல் அவ்வப் பதிகங்களிற் கண்டு கொள்க. மலையன் பாண்டியர் துணைவனும் ஆவன். 'கன்னிக்கோள் பின்செல்லக் காரிக்கோன் முன்னெய்தப் பொன்னிக்கோன் போன புகார்,' இதற்கு மேற்கோள்.

39. வையா கரணர் தொழுதென் வடமொழி வாணநன்சி
வையா கரணங் கிரவொழித் தாய்புல்லை மன்னவருள்
வையா கரணம டங்கவு மென்றீ மலவினைகள்
வையா கரண மெரிப்பட் டெனக்கெட்டு மாயவுமே.

இ-ள் : வையாகரணர் தொழு - வியர்கரணம் வல்லவர் தொழுகின்ற; தென்வடமொழிவாண - தென்மொழி வடமொழி வடிவாய் வாழ்பவனே; நன்சிவை ஆகர் அணங்கு இரவு ஒழித்தாய் - நல்ல மங்களை ஆகிய பார்வதியை உடம்பி லுடையரை வருத்திய இரத்தலைத் தீர்த்தாய்; புல்லை மன்ன - புல்லாணியில் மன்னனாகியுள்ளவனே. அருள்வையா - அருளுதலைச் செய்வையா? கரணம் அடங்கவும் - அந்தக் கரணம் ஒடுங்கும்படிக்கும், என் தீ மலவினைகள் - என்னுடைய தீய பாபகன்மங்கள் வை ஆகு அரணம் எரிப்பட்டெனக் கெட்டு மாயவும்-வைக்கோலால் ஆகிய கோட்டை தீப்பட்டாற்போல அழிந்து தொலையும் படிக்கும் எ-று.

அடங்கவும் மாயவும் அருள்வையா என்க.

தென் வடமொழி வாண என்றது திருமடலில், ஆழ்வார், ''புல்லாணித் தென்னர் தமிழை வடமொழியை'' என இத் திருப்பதி மூர்த்தியை இரு மொழி வடிவாகக் கொண்டது பற்றி என அறிக. இதனானன்றே வையாகரணர் தொழுவது என்றறிக. அன்றியும் பிரமனும் கலைமகளும் வேதசுரத்தில் விவாதப்பட்டு இத்தலத்தே திருவரசின் முன்னர்ப் போந்து உண்மை தெரிந்தார் என்ற

புராணமும் உண்டு. ஸ்வரம் வியாகரணத்தின் ஒருபகுதி யாதல் தெள்ளிது. வினைகட்குக் கரணமடங்காமை காரண மாதலான் அதனை முற்கூறியதாம். மன்ன என்றது இத்தலத்துப் பெருமான் ஜகந்நாதன் ஆதல் பற்றி. ஆழ்வாரும் 'மன்னன் சரிதைக்கே மாலாகி' என்பர். மன்னனாதற்கேற்ப இரவொழித்தான் என்பது குறிப்பு. அருள்வையா என்று வினாவி யொழிந்தது, இத்தலை அருளுதற்கேற்ற அதிகாரி விசேஷணம் ஒன்று மில்லாமை பற்றி என்று உணர்க. சிவபிரான் நின்பால் இரந்தனன்; யானது செய்திலேன்; அருள்வையா என்க.

40. மாக்ந்த மாதனமா விருப்பார் புல்லை வாணரதாம்
மாகந்த மாதன மாதிரப் பாவைக்கு மார்பினசும்
மாகந்த மாதன மாமலையா மதிக்கிலமம்
மாகந்த மாதன மால்கிளைத் தற்குண்மை மாநண்பனே.

இ-ள்: மாகம் தம் ஆதனமா இருப்பார் - பரவிசும்பு தம்முடைய ஆசனமாக வீற்றிருப்பார். புல்லை வாணர தாம் - புல்லாணியில் வாழ்பவருடையதாகிய; மாகந்த மாதன மாதிரப் பாவைக்கு - பெரிய கந்தமா தன மலையிலுள்ள பாவை போல்வாட்கு; மார்பின - மார்பின் கண்ணுள்ள; சும்மா கந்தமாதனமா மலையா மதிக்கிலம் - வெறுஞ் சந்தனப்பிண்டமா முலையா பெரிய மலையா என உள்ளே வினாவியும் விடைமதித்தறிகிலேம்; அம்மா - ஆச்சரியம். கந்தம் ஆதல் நம்மால் கிளைத்தற்கு உண்மை - நம் ஆசை மேன்மேல் கொழுந்து விட்டு வளர்தற்கு உரிய கிழங்காதல் சத்தியம்; மாநண்பனே - பெருநட்புடையோனே எ-று.

கந்தம் முன்னது சந்தனம் பின்னது கிழங்கு. இத்தலைவன் தலைவியியல்பினைப் பாங்கற் கெடுத்துரைத்தல் என்க.

41. பனவ னுமாயதி சேர்வலப் பாகன் பரம்பரன்விற்
பனவனு மானுக் கருள்செய்த புல்லைப் பதியினனொப்
பனவனு மானத் துரைக்கரி யான்றன் படிததிகோ
பனவனு மாட்செய் துணர்ந்தெய் னான்றிரும் பாப்பதமே.

இ-ள். பனவன் - பார்ப்பனன். உமாபதி சேர் வலப்பாகன்-உமையாள் நாயகன் சேர்ந்த வலப்பாகத்தை யுடையவன், பரம்பரன் - உயர்ந்ததின் உயர்ந்தோன். விற்பன அநுமானுக்கு அருள்செய்த புல்லைப் பதியினன்- வித்தை நிறைந்தவனான அநுமானுக்குத் தன்னை அருளிய புல்லாணித் திருப்பதியையுடையவன். ஒப்பன அனு மானத்து உரைக்க அரியான் - ஒப்பாக எவற்றையும் வழியளவையான் அளந்து சொல்லற்கு அரியவன். தன்படி- இத்தகையவனுடைய திருவடிவை, ததிகோபனவனும் - தயிரிடையனாகிய அத்ததிபாண்டனும், ஆட்செய்து உணர்ந்து எய்தினான் திரும்பாப்பதமே - அடிமை செய்து உள்ளபடி அறிந்து மீளாப் பரமபதத்தினை அடைந்தான் எ-று.

ததிகோபன் அவனும் ஆட்செய்து அரியின் தன்படி யுணர்ந்து பதமெய்தினான் என்க. திருவடிவைத் தழுவு தலால் தன்னை அருள் செய்தது உணரப்படும். 'வலத் தனன்றிரிபுர மெரித்தவன்' என்பதனால் உமாபதி வலப்பாகத்திலறிக. விற்பன அனுமான் என்றது, ''மறைநாலும் ஓதியுணர்ந்தீர்'' எனபதனாலுணர்க. அநுமானம் - வழியளவை. தேவருட் சிவபிரான் வலம் எய்தினான், விலங்கினுள் திருவடி அருள்பெற்றான், மக்களுள் ததிகோபன் பதம் பெற்றான் என்று காட்டிய வாறு. பனவன்-காசிபனுக்கு மகனான பார்ப்பனன் என்க. படி - திருமெனி, 'படிச்சோதி' என்பது திருவாய்மொழி.

**42. பதக்கா வலரைப் பெருவீ டிரந்து பயன்கொள்கிலீர்
பதக்கா வலரைக் குணிக்கு ளார்நிரப் பார்பிறர்ச
பதக்கா வலரைப் பெருவாணன் போரிடைப் பார்மினறு
பதக்கா வலரைப் பொழிபுல்லை மாலருள் பாடுமினே.**

இ-ள் : *பதம் காவலரை - துறக்கம் முதலிய போக பதவிகளுக் கதிகாரி களாய்க் காவல் செய்பவரை; பெருவீடு இரந்து பயன்கொள்கிலீர் - செயற்கரிய வீட்டை யாசித்து ஒரு பயனுங் கொள்ளமாட்டீர். பதக்கு ஆவலரைக் குறுணிக்கு உளார் நிரப்பார் - பதக்கு அளவுத் தானியத்தை விரும்புதல் செய்வாரை குறுணி அளவுக்கு உள்ள தானியமே உடையார் பூரித்தல் செய்யமாட்டார். பிறர் சபதக்கு ஆ அலரைப்பெருவாணன் போரிடைப் பார்மின்- பிறர்சபதத்திற்கு ஆகிய பழியைப் பெரியவாணாசுரயுத்தத் திற் காண்மின், அறுபதம் கா அலரைப் பொழி புல்லை மால் அருள் பாடுமினே - அறுகாலுடைய வண்டு களை யுடைய சோலைமலர்களைப் பெய்கின்ற புல்லாணித் திரு மால் அருளைப் பாடுவீராகுக எ-று.*

குறுணி ஆறுபடி கொண்டது. பதக்கு இரண்டு குறுணி கொண்டது இரப்பவர் இரக்கப் படுவாரை இரந்தது தரற்கு அஃதுடையரா என முன்னே தெளிவது இன்றியமையாதது. வாணன் ஸர்வரக்ஷகனைச் சரண் புகாது சங்கார மூர்த்தியைப் புகல்புக்க போது அம் மூர்த்தி செய்த சபதம் பழியாக முடிந்தது ஸ்ரீ பாகவதத் திற் காண்க.

**43. பாடிய மானவை தேர்மறை யோர்புல்லைப் பண்பனிறை
பாடிய மானவன் கைதொடு வார்களிப் பானுருகிப்
பாடிய மானசயோகர்க் கல்லாமற் பசையறுகூப்
பாடிய மானகங் கொட்டிற் றெனவிளைப் பார்க்கிலனே.**

இ-ள்: *பாடியம் ஆனவை தேர் மறையோர் புல்லைப் பண்பன் - பாஷியமாயின பேருரைகளைத் தேர்ந்த*

வேதியர் நிறைந்த புல்லாணியிற் சகுண மூர்த்தி. இறைபாடி - தன் இராசதானியை; அமானவன் கை தொவொர்க்கு அளிப்பான் - அமானவன் என்னு நித்திய சூரியின் திருக்கரத்தால் ஸ்பர்சனம் பெறுவார்க்குத் தருவான். உருகிப் பாடிய மானசயோகர்க்கு அல்லால் - மனம் உருகாநிற்க வாயாற் பாடிய மனம் அவனுடன் புணர்ந்த யோகியர்க்கு அல்லாமல், பசையறு கூப்பாடு - அன்பற்ற கூக்குரலை; இயம் ஆனகம் கொட்டிற்று என - இசையை ஆனக துந்துமி என்னும் வாச்சியம் முழக்கியது போல, விளைப்பார்க்கு இலனே - உரை பண்ணுபவர்க்கு இல்லாதவனான் எ-று.

யோகர்க்கல்லால் ஆனகம் இயம் கொட்டிற்றென பசையறு கூப்பாடு விளைப்பார்க்கு இல்லன் என்க. ஆனகம் - ஓர் வாச்சியப்பறை. அஃது இயம் முழக்கப் பட்டால் அதற்கு உணர்ச்சி இல்லையாயினாற்போல உணர்ச்சியின்றி வெறுங் கூப்பாடு விளைப்பார்க்கு இல்லன் எ-று. 'பெயரினையே புந்தியாற் சிந்தியாது ஓதி யுரு வெண்ணும் தந்தியானாம் பயனாங்கென்' என்று பெரியாரும் பணித்தது கொண்டு உணர்க. இறைபாடி - ராஜதானி ''இறைபாடியாய விவை'' என்ப. வேதகப் பொன் பட்டதெல்லாம் பொன்னாவது போல அமானவன் கரஸ்பர்சத்தால் முத்தாத்மா பொன்னுரு வெய்தும் என்ப.

44. கிலமா வருந்திக் கெடுகாய வாழ்விதென் கேசவகோ
கிலமா வருந்திக் களிக்கும் புல்லாணி கெழீஇயமர்ந்த
கிலமா வருந்திக் கெலாநிறைந் தாய்க்குக் கிளர்ந்தவன்பா
கிலமா வருந்திக் கெனவசைக் காளாய்க் கெழுமெமக்கே.

இ-ள்: கிலமா வருந்திக் கெடுகாய வாழ்வு இது என் - சிதைவதாகத் துன்புற்று அழியும் உடல் வாழ்க்கையாய இஃது யாது பயனுடைத்து; கேசவ - அயனையும் ஈசனை யும் உடையானே, கோகிலம்மா அருந்திக் களிக்கும்

புல்லாணி - குயில்கள் மாந்தளிரை உண்டு மகிழும் புல்லாணியை, கெழீஇ அமர்ந்து - நட்டு வீற்றிருந்து, அகிலமா அருந்திக்கு எல்லாம் நிறைந்தாய்க்கு - விச்வரூபியாக அரிய திசைகளெல்லாமும் நிறைந்துள்ள நினக்கு. கிளர்ந்த அன்பு ஆகிலம் - மேலெழுகின்ற பத்தி உண்டாகிலம். ஆவரும் திக் என-யாவரும் சுடுக என்று சொல்லும் வண்ணம், வசைக்கு ஆளாய்க் கெழுமும் எமக்கே - பழிக்கும் அடிமையாகிப் பொருந்தும் எங்கட்கே எ-று.

யாவரும் திக் என வசைக்கு ஆளாய்க் கெழுமும் எமக்கே காய வாழ்வு இது என் என்க. மா-மாந்தளிர்; ஆகுபெயர். அகிலமா - அகிலமாக; அருந்திக்கு - சக்கரவாள கிரிக்கு அப்புறத்திசை. இதனை மாயிரம் என்பர் கம்பர். ஆவரும் - யாவரும். யார் ஆர் என்பதும் யாதும் என்பது ஆதும் ('ஆது மோர் பற்றிலாத பாவனை) என வருவதும் இவ்வாறே மரீஇயின. சிலப்பதிகாரத்தும் வருதல் காண்க. திக் வடமொழி. சுடுக என்னும் பொருட்டு. இதனைச் சொல்லித்தள்ளுதல் திக்கரித்தல் எனத் தமிழினும் வழங்குவது காண்க. வசையின் வளர்தலால் வாழ்வு இது என் பயனுடைத்து என்று வெறுத்ததாம்.

**45. மக்களருந் தாதிய ரில்லஞ் செல்வம்பல் வாழ்வுற்றுக்கா
மக்க ளருத்தாக் களிக்குந் தருணத்து வஞ்சனைய
மக்க ளருந்தா வதைத்தற் கிரங்குவிர் மாலன்பிற்சென்
மக்க ளருந்தா வரும்பய னாம்புல்லை வாழ்த்துமினே.**

இ-ள்: மக்கள் அருந்தாதியர் இல்லம் செல்வம் பல் வாழ்வு உற்று - மகாரும் அரிய ஏவற் சிலதியரும் வீடும் பொருட் பெருக்கும் இன்னும் பல வாழ்வும் பொருந்தி; காமக்கள் அருந்தா - காமமாகிய கள்ளைக் குடித்து, களிக்கும் தருணத்து - மயங்கி மகிழும் சமயத்தில்; வஞ்சனை யமக் கள்ளர்-வஞ்சித் தலையுடைய காலனால் உய்க்கப்பட்ட திருடர்; உந்தா வதைத்தற்கு இரங்குவிர்-

காலால் உதைத்துத் தள்ளிக் கொல்லுதற்கு வருந்தா நிற்பீர்; மால் அன்பின் - திருமால் பத்தி உளதாயின், சென்மக்களரும் தா அரும் பயனாம் - பிறவியாகிய களர் நிலமும் கேடில்லாத பயன் விளைவதாகும். ஆதலால், புல்லை வாழ்த்துமினே - அவனுள்ள புல்லாணியை வாழ்த்தல் செய்யுங்கோள் எ-று.

46. வாதா சனகி மணாளா கண்ணா
வென்றவர்க் களித்தொவ்
வாதா சனம்பொய் யிட்டான்
குலமாய்வித்து வண்புல் லையில்
வாதா சனமிசைக் கண்டுயில்
வோய்நினை வாழ்த்து மென்கண்
வாதா சனனந் துடைத்தாட்
கொண் டுன்றாள் வழங்குதியே.

இ-ள்: வா, தா, சனகிமணாளா கண்ணா என்றவர்க்கு அளித்து - சனகன் மகள் கணவனே கண்ணனே வருக தருக என்று பிராத்திப்பார்க்கு வேண்டுவன தந்து; ஒவ்வாது ஆசனம் பொய்யிட்டான் குலம் மாய்வித்து - கடவுட் டகைமைக்குப் பொருந்தாது பொய் யாசனம் இட்ட துரியோதனன் குலத்தோடு மாய்ப்பித்து; வண் புல்லையில் - வண்மையுடைய புல்லாணியிலே; வாதாசன மிசைக்- கண் துயில்வோய் - காற்றை யுண்ணும் பாம்பின் மேல் கண்ணுறங்குவோய்; நினை வாழ்த்தும் என் கண் வாதா - உன்னை வாழ்த்தலைச் செய்யும் என்னிடம் வழக்குண்டோ; சனனந்துடைத்து - பிறவியை அழித்து; ஆட்கொண்டு உன் தாள் வழங்குதி - அடிமை கொண்டு உன் திருவடியை நல்குவாயாக எ-று.

உன் தாள் வழங்குதி நின்னை வாழ்த்தும் என்கண் வாதா என்று வினாவுக. வாதா என்றது வழங்க விளம்பித்தலுக்கு பொறாது கூறியது என்க.

47. குதியா வருங்கால தூதரென்
மேற்பெருங் கோபமன்மி
குதியா வருங்காரமுஞ் செய்வர்க்
கென்செய்வல் கூரருட்ட
குதியா வருங்காண் டலைவிரும்
பாய்கொல் முகுந்தநல்லா
குதியா வருங்காரி தாவெனச்
சூழ்புல்லைக் கோவலனே.

இ-ள்: குதியா-குதித்து; வருங்கால தூதர்-வருகின்ற யமதூதர்; என்மேற் பெருங்கோபமன் மிகுதி ஆவர் - என் மிசைக் கடுஞ்சினம் மிகவும் அதிகமாகக் கொள்வர்; உங்கார முஞ்செய்வர்க்கு - என்னைக் கண்டு உங்காரத் தொனியுடன் உருமுவர், இவர்க்கு; என் செய்வல்-எதிராக என்ன செய்ய வல்லேன்; கூர் அருள் தகுதி யாவருங் காண்டலை விரும்பாய் கொல் - மிக்க அருட்பெருமையை எல்லாருங் கண்டு மகிழ்தலை நீ விழையாயோ? முகுந்த-மோக்ஷந் தருபவனே; நல் ஆகுதியா அரும் கார் இதா எனச் சூழ்புல்லைக் கோவலனே - நல்ல அவிப்புகையா அன்றி அரியமேகமா இஃதெனச் சூழ்கின்ற புல்லாணியிற் கோபாலனே எ-று.

ஆகுதியா இது காரா என்று சொல்லும்படி ஆகுதியும் காரும் கலந்து சூழ்புல்லை என்க. நல்லாகுதியால் கார் உண்டாவது என்பது குறிப்பு. கோபாலன் என்பது கோவலன் என மரீயஇயது. 'விருத்த கோபால' எனக் கோவலனை இளங்கோவடிகள் வழங்குதலான் அறிக. யாவரும் அருட்டகுதி கண்டாலன்றி அஃது நிறம் பெறாது, அதனை விரும்பாய்கொல் என எ-று.

48. கோவலங் காரமெலா நிறைந்தும்
பகைகொண்டு நின்வெங்
கோவலங் காநகர் மாய்ந்தது
நீகற் குடையளிக்கக்

கோவலங் காரினடுங்கா துயர்ந்ததுங்
கூர்ந்த றிந்தேம்
கோவலங் கார்ந்துதென் புல்லைத்
தலைவந்த கொற்றவனே.

இ-ள்: கோ அலங்காரம் எல்லாம் நிறைந்தும் - அரசுக்குரிய அணி அனைத்தும் நிரம்பியும், பகை கொண்டு - பகைமையினைக் கொள்ளலால்; நின் வெங் கோவ லங்கா நகர் மாய்ந்ததும் - நின் வெய்ய கோபத் திற்குரிய இலங்கை நகரம் ஒழிந்ததனையும், நீ கற்குடை அளிக்க - நீ கல்லைச் செய்த குடையான் இரக்ஷிக்க; கோவலம் காரின் நடுங்காது உயர்ந்ததும் - பசுக்களின் வலி மழையால் நடுக்கமுறாது மேம்பட்டதனையும்; கூர்ந்தறிந்தேம் - நுனித்து உணர்ந்தேம்; கோவல் அங்கு ஆர்ந்துதென் புல்லைத் தலை வந்த கொற்றவனே - காரி நாட்டுத் திருக்கோவலூரில் அமர்ந்து, பாண்டிநாட்டுத் தெற்கண் உள்ள திருப்புல்லாணியிடத்து வந்தருளிய விஜயஸ்ரீயை உடையவனே எ-று.

அலங்காரம் - ஈண்டுக் காப்பு அணிகள். நின்னை அடையாததன் மாய்வும் அடைத்ததன் உயர்வும் நுனித் தறிந்தேம் எ று. கோவலையுடைய காரியும் புல்லை யையுடைய பாண்டியனும் நட்பினராதல், 'கன்னிக்கோன் பின் செல்லக் காரிக்கோன் முன்றொடரப், பொன்னிக் கோன் போன புகார்'' எனவரும் அடிகளான் அறிக.

49. வனமா தவர்தவப் பேறாக நின்கவின் மாந்துறயவ்
வனமா தவரனுடன் மேயினை புல்லை மாயவநின்
வனமா தவரொரு கோடிக்கொப் பாமென்பர் மற்றதுசெவ்
வனமா தவவுப மானங் கொலோவெவ் வகையுநிற்கே.

இ-ள்: வனம் மாதவர் தவப்பேறாக - வனத்தின்கண் பெருந்தவசியர் தந் தவத்தின் பயனாக, நின் கவின் மாந்துற - நின் அழகினை விழுங்குமாறு; யவ்வனமாது

அவர் அனுடன் மேயினை - இளம் பெண்ணுடனும் தம்பி யுடனும் வனம் மேவினாய். புல்லை மாயவ - புல்லாணி மாயோனே. நின்வனம் - நின் வனப்பு; ஆதவர் ஒரு கோடிக்கு ஒப்பாம் என்பர் - சூரியர் ஒரு கோடிக்கு சமானம் என்று உரைப்பர். அது - அவ்வொரு கோடி; செவ்வனம் மாதவ உபமானங்கொலோ - இலக்குமி நாயகனே நேர்மையான உவமையாகுமோ, எவ்வகையும் நிற்கே - எவ்விதத்தும் நினக்கே எ-று.

மற்று - அசை. நின்கையது ஒன்றால் மறைப்புண்ட சூரியர் எத்தனையாயினும் ஒவ்வார் என்பது. தவப் பேறாக மாந்தி மாதவர் களித்தது, ''பண்ணி னோக்கும் பாவமிழ் தைப்பசுங் கண்ணி னோக்கின ருள்ளங் களிக் கின்றார்'' எனக் கம்ப நாடர் கூறியது கொண்டுணர்க.

50. கையா தவனை மறைத்தாழி யானிருள் கண்டடித
கையா தவனை சுடுகரி வேந்தெனக் காத்ததித்த
கையா தவனை நினைவார்க் கெதுகுறை காமருசீர்
கையா தவனைப் பணிவீர் தென்புல்லைக் கடித்தலத்தே.

இ-ள்: கை ஆதவனை மறைத்து ஆழியான் இருள் கண்டு-திருக்கரம் சூரியனைச் சக்கரத்தால் மறைத்து இருளை உண்டு பண்ணா நிற்க. அடிதகையாத அனை சுடு கரிவேந்து எனக் காத்தது - திருவடி தடுக்காத நெருப்புச் சுட்ட கரிக்கட்டை அரசு என்று சொல்ல இரக்ஷித்து; இத்தகை யாதவனை-இப்பெருமையையுடைய யதுகுலத் தோன்றலை, நினைவார்க்கு ஏது குறை - சிந்திப்பார்க்கு யாது குறை உண்டு. காமரு சீர் கையாது அவனை - விரும்பத்தக்க புகழினை வெறாது அத்தெறலும் அளியும் உடைய இறைவனை. பணிவீர் - வணங்குவீராக. தென்புல்லைக் கடித்தலத்தே - தெற்கண் உள்ள புல்லாணி என்னும் காப்புடைய திருப்பதியின் கண்ணே எ-று.

அனை-நெருப்பு. நினைப்பவர்க்கு எக்காலத்துங் குறையில்லையென்று மேலிரண்டு இதிகாசங் காட்டியவாறு ஆபத்து வாராமற் காத்தது முன்னது; ஆபத்து வந்தீதனை நிவர்த்தித்தது பின்னது. கரிவேந்தெனக் காத்தது - பரீக்ஷித்து அரசன் கதை. தடுக்காத நெருப்பு - அசுவத்தாமாவின் கணைத்தீ. சுடுகரி - சுட்டகரி. காமருசீர் கையாது என்றது இவ்வினிய சீரைக் கைத்த சிசுபாலன், கஞ்சன் முதலாயோரும். உண்மையான் அவர் போலாகாது என்று குறித்தவாறாம், மேற்காத்த தன்மைக்கேற்க அவன் மூர்த்திகரித்த புல்லையும் காப்புடைத்தென்பது காட்டியவாறு காண்க.

51. தேவகி லேசமும் பெற்றில ளின்பநிற் றேடுவசு
தேவகி லேசமு மற்றாய ரின்பஞ் சிறந்தனர்நற்
றேவகிலேச விளையாட னின்னது தேர்கிலம்பல்
தேவகி லேச மணம்வீசு புல்லைத் திருவரனே.

இ-ள்: தேவகி லேசமும் பெற்றிலள் இன்பம் - தேவகிப் பிராட்டி இன்பத்தைச் சிறிதும் பெற்றிலள். நின்தேடு வசுதேவ கிலேசமும் அற்று - நின்னைத் தேடிப் பெற்ற வசுதேவரின் துன்பமும் அத்தேவகி தன்மைத்து. ஆயர் இன்பம் சிறந்தனர் - (பெற்ற தாயுந் தந்தையும் இங்ஙனம் ஆகவும்) நின்னைப் பெறாத இடையர் ஆனந்தத்தின் மேம்பட்டனர். நல் தேவு அகிலேச - நல்ல தெய்வமும் அகிலத்திற்கும் ஈசனுமானவ; விளையாடல் நின்னது தேர்கிலம் - இவ்வாறு நின்னது விளையாடலைத் தெளிய மாட்டேம்; பல் தே அகில் ஏச மணம் வீசு புல்லைத் திருவரனே - பலதேயத்து அகிலின் மணத்தையும் இகழும்படி தெய்வ மணம் வீசுகின்ற புல்லாணியில் திருமகளுக்குக் கொழுநனே எ-று.

தேஅகில் என்பது, சேவேறி என்பதுபோல வகர உடம்படுமெய் பெற்றது. தே-தேயம் "நந்தன் பெற்றனன் நங்கள்கோன் வசுதேவன் பெற்றிலனே" என்று தேவகியா

ரிரங்கியது பெருமாள் திருமொழியிற் காண்க. லேசம் - சிறிது, வடசொல். வசுதேவ கிலேசம் - சிதைவு. விடையாடல் நின்னது ஆறாவது பின்வந்தது. 'தேற்பற் றுடியிடை மான் மடநோக்கி' என்னும் திருக்கோவையிற் போல. நோக்கியிடை என்பது போல நின்னது விளையாடல் என்க. திருவரன் - திருவிற்கும் உயர்ந் தோன் எனினும் பொருந்தும். ''திருவுக்குஞ் திருவாகிய செல்வா, தெய்வக்குக் காசே'' என வருதல் காண்க.

52. **திருவரங் காமுறத் தந்தாயகலஞ் சினந்துனையெ**
திருவரங் காவி யறப்பொரு தாய்புகழ்த்தேன் பெய்துகந்
திருவரங்காந்திசை செய்யத் துயில்வாய் திசையொளிர்ந்த
திருவரங் கம்புல் லையா யெழுவாயருள் செய்வதற்கே.

இ-ள்: திருவரம் காமுறத் தந்தாய் அகலம் - திருமகள் வரத்தை விரும்ப மார்பை அளித்தாய். சினந்து உனை எதிருவர் அங்கு ஆவி அறப் பொருதாய் - வெகுண்டு உன்னை எதிர்ப்பவராய அசுரர் உயிர் அறப் போர் செய்தனை. புகழ்த்தேன் பெய்து-நின் புகழாகிய தேனைச் சொரிந்து. கந்திருவர் இசை செய்யத் துயில்வாய்- கந்திருவர் கானம் செய்ய உறங்குவை. திசையொளிர்ந்து அதிருவ - திசைகள் ஒளியால் விளக்கம் பெற்று, ஓசை யால் அதிருவன ஆதலான்; ரங்கா புல்லையாய் - அரங்க மாளியும் புல்லையாளியுமானவ. எழுவாய், அருள் செய்வ தற்கே - அருள் செய்வதற்கே துயில் எழுவாய் எ-று

அரவணைத் துயிறல் அரங்கத்துக்கும் புல்லைக்கு மொத்தலால் இயைபு காண்க. இறைமைக் கேற்க அநுக்கிரகமும் நிக்கிரகமுஞ் செய்து வினையின்றித் துயில் வாய் என்று விளித்தவாறாம். புகழ்ந்தேன் அநுக்கிரகமும் நிக்கிரகமும் பற்றிய புகழாகிய தேன். இது சூதரேத்திய துயிலெடை நிலை.

**53. வதமாவி னையப் புரிந்தெச்சம் வேட்பர் மறையிதென்று
வதமாவினை யோகயர்வர் மெய்வாட்டுவர் வானயிரா
வதமாவினை யுகைப்பர் மீள்வர் மீள வராவணந்தெய்
வதமாவினை யமுட னேத்தப் புல்லை வராதவரே.**

இ-ள்: வதம் ஆவி நையப் புரிந்து - உயிர் தேயக் கொலை புரிந்து; எச்சம் வேட்பர் - யாகத்தை வேட்டல் செய்வர். மறை இது என்று - வேதவிதி இஃதெனக் கூறி. வதமா - விரதமாக, வினை யோகு அயாவர் - கர்ம யோகத்தைப் புரிவர்; மெய்வாட்டுவர் - உடம்பை வறுப்பர். வான் அயிராவதமாவினை உகைப்பர் - இவர் ஐராவத யானையை ஏறி நடத்துவர், மீள்வர் - திரும்ப மண்ணில் வருவர்; மீளவராவணம் - மீளத்திரும்பாதபடி; தெய்வதம் - தெய்வத்தை; மாவினையமுடன் - பெருவிநயத்துடன், ஏத்தப் புல்லை வராதவரே - துதிக்கப் புல்லைத் தலத்து வராதவரே எ-று.

மீளவராவணம், தெய்வதம் ஏத்தப் புல்லைவராதவரே வேட்பர் அயர்வர் வாட்டுவர் உகைப்பர் மீள்வர் என்க. விநயம் - பணிந்த மனமொழி மெய்களுடைமை; மறையிதென்று என்பது இடைநிலைத் தீவகம். மறை ஆகுபெயர். வினையோகம் - எச்ச மொழிந்த கருமயோகம். இது தூமகதியில் உய்த்தலால் மீளவருவர். மீளவராநெறி - அர்ச்சிராதி கதி. எச்சத்திற்கும் கருமயோகத்திற்குத் வேண்டிய சாதனங்கள் மிகப் பலவென்று காட்டி இதற்குப் பெருவிநயத்துடன் ஏத்தலேயமையுமென்று தெளிவித்தவாறாம்.

**54. தவறா விதையத் தருள்விழை வார்புல்லைத் தாமமஃதத்
தவறா விதையன்ன தீவினை யாற்பிறந் தைக் கடலெய்
தவறா விதையகப் புன்படவா மென்மெய் சாமிடத்து
தவறா விதையகப் பொழுதைக் கிப்போதுரை தந்தனனே.**

இ-ள்: தவறா இதையத்து, அருள் விழைவார் புல்லைத் தாம - நெறி தவறாத மனத்தின் கண் அருளினை விரும்புவாருடைய புல்லாணியில் ஒளி வடிவாயுள்ளவ.

மிகுத்த வறாவிதை அன்ன தீவினையால் - அதிகமான வறுக்காத வித்தை ஒத்த தீய வினைப்பண்டத்துடன், பிறந்தைக் கடல் எய்த அறா இதை அகம் புன்படவு ஆம்மெய்-பிறவிக் கடலில் எய்தற்கு அறுபடாத பாயாகிய மனத்தையுடைய புல்லிய தெப்பமாகிய உடம்பு. சாமிடத்து உதவல்தா-சாகின்றஇடத்திலே உபகரித்தலைத் தருவாயாக. இதை அப்பொழுதைக்கு இப்போது உரை தந்தனன் - இதனை அப்பொழுதைப் பொருட்டு இப் பொழுதே மொழிந்தேன் எ-று.

தாமம் - ஒளி, இடனுமாம். தீவினை பின்னும் பலவாக விளைதலான் வறாவிதை உவமையாயிற்று. அறா இதை - அறுபடாத பாய். கால்கொண்டு எங்கும் ஓடுதற்குந் துணையாதலின் பாய் மனத்திற்கு உவமை யிற்று பிறந்தை - பிறப்பிடம். பிறந்தைத் கடல் - பிறப் பிடமாகிய ஸம்ஸார ஸாகரம்.

55. **தந்தன மென்மருங்குற் பாவை யார்க்குளந்தாழ்ந்துவைத்**
தந்தன மென்ப தெல்லாமுந் தொலைத்துத் தளர்ந்துமுதிர்
தந்தன மென்றுண மாட்டார்க்குப் புல்லைமன் றாள்புகவி
தந்தன மென்று முயிரளிப் பானெத் தாமெண்ணியே.

இ-ள்: தந்து அன்ன மெல்மருங்குற் பாவையார்க்கு - நூல் ஒத்த மெல்லிய இடையினையுடைய பாவை போல்வார் பொருட்டு. உளம் தாழ்ந்து - மனம் தாழ்வு பட்டு; வைத்தம் தனம் என்பது எல்லாமும் தொலைத்து - சேமித்து வைத்த தமது செல்வமென்று சொல்லப்படுவது எவையும் அழிந்து. தளர்ந்து - உடலும் தளர்வெய்தி; முதிர் தந்து அன்னம் மென்று உண்ணமாட்டார்க்கும் - முதிர்ச்சி அடைந்து சோறும்மென்று அருந்த இயலாதார்க் கும்; புல்லைமன் தாள் புக விதந்தனம்-புல்லாணியிறைவன் திருவடியை அடைய வகுத்தோதினேம்; என்றும் உயிர் அளிப்பான் என - என்றைக்கும் உயிர்களை இரக்ஷிப்

பான் என்று; தாம் எண்ணியே தாம் நினைத்து எ-று.

அளிப்பான் எனத் தாம் எண்ணித் தாள்புக விதந்தனம் என்க. ஒன்றும் இயலாதார்க்கும் எண்ணிச் சரண்புகல் இயலுமென்று கூறப்பட்டது.

56. எண்கூற்றின் வாய்வைத் துரிஞ்சவு
மூறா விருட்படுவிற்
றெண்கூற்றி னாறலைப் பார்மே
விருஞ்சுர மென்றவென்ன
தெண்கூற்றினில்லா தெழுந்தார்
பொருட்பிணிக் கெச்சன்முதல்
எண்கூற்றி னின்றவன் புல்லைப்
பிரான்வெற் பிறையவரே

இ-ள்: எண்கு ஊற்றின் வாய் வைத்து உரிஞ்சவும் - கரடி நீரூற்றின் வாயை வைத்து உரிஞ்சா நிற்கவும்; ஊறா இருட்படுவிற்று - ஊறாத இருளையுடைய கிணறுகளையுடையது; எண் கூற்றின் ஆறலைப்பார் - காலத்தை எண்ணுகின்ற கூற்றம் போன்று வழிவருவாரை அலைப்பார், மேவு இருஞ்சுரம் - மேவிய பெரிய பாலை; என்ற- என்றுரைத்த; என்னது எண்கூற்றின் - என்னுடைய எளிய சொல்லின்கண்; நில்லாதெழுந்தார் பொருட் பிணிக்கு - தங்காதெழுந்தார் செல்வம் என்னும் பிணிப்பிற்கு. எச்சம் முதல் எண் கூற்றின் நின்றவன் - யாகபுருஷன் முதலாக எட்டுத் திறத்தில் நிலைத்தவனாகிய, புல்லைப் பிரான் - திருப்புல்லாணிப் பெருமானுடைய, வெற்பு இறையவரே - மலைக்குத் தலைவர் எ-று.

எண்கு - கரடி. எண்கூறு - 'எச்சனும் இருசுடரும் ஐம்பூதமும்' (பரிபாடல்). படு - கிணறு. எண்கூற்று - எளியசொல், 'எண் பொருள்' எனவரும், எண்கூற்று. உயிர் வாழ்நாளைக் கணக்கிடும் காலன். 'கணக்கிடுவாருட் காலன் யான்' என்பது ஸ்ரீகீதை.

57. **இறையா வருந்தரங் கக்கடற் செல்வத்தி னேற்றணைமீ**
திறையா வருந்தந் திறைஞ்சத் தனிக்கோ லியற்றினரும்
இறையா வருந்த விடீரோ வெனச்சென் றிரந்துவினாய்
இறையா வருந்த விடிகொள்வர் மால்புல்லையேத்துமினே.

இ-ள்: இறையா - இறைக்கப்படாத, அரும் தரங்கக் கடற் செல்வத்தின் - அரிய அலைக் கடல் போன்ற செல்வத்தின் கண்; ஏற்று அணை மீது - சிங்காசனத்தின் மேல்; இறையாவரும் தந்து இறைஞ்ச - திறையை எல்லோருங் கொடுத்து வணங்க; தனிக்கோலியற்றினரும் - தனியாகச் செங்கோல் செல உய்த்தவரும்; இறையா அருந்த இடீரோ என - இறையளவாக உண்டற்கு ஒன்று இடமாட்டீரோ என்று; சென்று இரந்து, வினாய் - தம் அரண்மனை விட்டுப் போய் யாசித்து வினாவி; இறையா வருந்த இடிகொள்வர் - விடையாக வருந்தும்படி இடித் தலைக் கொள்வர், ஆதலான் மால்புல்லை ஏத்துமினே - திருமால் புல்லாணியைத் துதிப்பீர் எ-று

இடீரோ என வினாவி அதற்கு விடையாக இடித் தலைக் கொள்வர், இறையளவு உணவும் கொள்ளார் என்பது குறிப்பு. செல்வம் இம்மையிலே அழிதலான் இம்மைக்கும் மறுமைக்கும் பயனாக ஏத்துதலைச் செய்ம்மின் எ-று.

58. **துமிதந் தமர மெறிகடற் புல்லைத் துறைவனீர்மீ**
துமிதந்த மரவொ ராலிலைத் தொட்டில்கொள் தூயவன்துந்
துமிதந் தமரர் முழங்க வுலாவருஞ் சோதி யெப்போ
துமிதந் தமரடைதற் கெண்ணுத் தெய்வஞ்சு கோததியே.

இ-ள்: துமிதம் தமரம் எறிகடற் புல்லைத் துறைவன்- நீர்த்திவலைகளையும் பேரொலியையும் வெளியில் வீசும் கடலையுடைய புல்லாணித்துறைவன்; நீர்மீது மிதந்து அமர ஒரு ஆலிலைத் தொட்டில் கொள் தூயவன் - கடல் மீது மிதந்து தங்க ஓராலின் இலையைத் தொட்டிலாகக் கொண்ட புநிதன்; துந்துமி தந்து அமரர் முழங்க உலா வருஞ் சோதி - துந்துமி வாத்தியத்தைத் தந்து தேவர் முழங்கும் வண்ணம் திருஉலா எழுந்தருளும்சோதிவடிவன். எப்போதும் இதம் தமர் அடைதற்கு எண்ணும் தெய்வம் - எந்த வேளையும் நன்மையைத் தன்னடைந்தார் அடைதற் பொருட்டுச் சிந்திக்கும் தெய்வம். சுகோததி-இன்பக்கடல் எ-று.

நீர் - கடற்குப் பெயர்; தூயவன் - பிரளயத்தாற் பாவம் எய்தாதவன்; துமிதம் - நீர்த்திவலை.

59. **கோதண்ட ராமண் டலமுற்று**
மாகிச்செங் கோல்புரிவாய்
கோதண்ட ராமலர்த் தாண்மிதித்
தாடுவை கூற்றுவனுக்
கோதண்ட ராமவன் தூதருக் கோவுள்
குலைவலெற்கா
கோதண்ட ராம புல்லாணித் தெய்வச்சிலைக்
கோதில் பொன்னே.

இ-ள்: கோ தண் தரா மண்டலம் முற்றும் ஆகி-பூ மண்டலம் முழுதிற்கும் கோவேந்தனாகி; செங்கோல் புரிவாய் - செங்கோலை நடாத்துவை; கோது அண்டு அரா மலர்த்தாள் மிதித்து ஆடுவை - குற்றம் பொருந்திய காளிங்கன் என்னும் அரவத்தைத் தாளால் மிதித்து ஆடுதலைச் செய்வை; கூற்றுவனுக்கோ - யமனுக் காகவோ; தண்டர் ஆம் அவன் தூதருக்கோ - தண்டதர ராகிய அவன் தூதுவர்க்காகவோ; உள்குலைவல்-உள்ளங் குலைதலைச் செய்வேன்; என் கா-என்னைக் காத்தருள்க; கோதண்ட ராம - கோதண்ட வில்லையுடைய ஸ்ரீராம

பிரானே; புல்லாணித் தெய்வச் சிலைக்கோதில் பொன்னே - திருப்புல்லாணியிற் திவ்யசாபரென்னுந் திருநாமத்துடன் விளங்கும் குற்றமில்லாத பொன்னானவனே எ-று.

புல்லாணி- இடைநிலைத் தீபகம், திருப்புல் வாணியில் கோதண்டராமனும், தெய்வச் சிலையானும் என இருபெரு மூர்த்தமாக எழுந்தருளியிருத்தலை அறிக. திருமங்கையாழ்வாரும், ''வில்லா லிலங்கை மலங்கச் சரந்துரந்த வல்லாளள்'' எனவும், ''தெய்வச்சிலை யான்'' எனவும் பாடியருளுதல் காண்க.

60. கோத மனம் பன்னி சாபங் கழீஇயருள்
கொண்டல் பெருங்
கோத மனம்பல நந்தன நாறிசை
கூர்புல்லைமால்
கோத மனம் பவந் தீர்த்தாள்
பவனடி கூடலரெங்
கோத மனம்பயில் வாரவ
ரேவினைக் கொள்கலமே.

இ-ள்: கோதமன் அம் பன்னி சாபம் - கௌதமனுடைய அழகிய பத்தினியது சாபத்தினை, கழீஇஅருள் கொண்டல் - கழுவியருளிய மேக மொப்பான்; பெருங்கோ-மஹா சக்கரவர்த்தியாயினான்; தமனம் பல நந்தனம் நாறு இசை கூர் புல்லைமால் - மருக்கொழுந்துகள் பல நந்தனவனங்களிலும் மணக்கும் இசைமிக்க புல்லாணிப் பதியிற்றிருமால்; கோது அமல் நம் பவம் தீர்த்து ஆள்பவன் - குற்றம் நெருங்கிய நம் பிறவியைப் போக்கி ஆட்கொள்பவன்; அடிகூடலர் - அவன் திருவடியைச் சேரலர்; எங்கோ தம் மனம் பயில்வார் - எங்கேயோ தம் உள்ளம் பழக இருப்பார், அவரே வினைக் கொள்கலமே - அவரே வினைக்குக் கொள்கலமே ஆவர் எ-று.

கொள்கலம்- கொள்ளும் வங்கம்; ஏகதேசரூபகத்தாற் பிறவிக்கடலில் அலைதல் குறித்ததாம். சாப அழுக்கைக் கழுவுதற்கு அருண்மழை பெய்தலாற் கொண்டல் என்க. பெருங்கோ - சக்கரவர்த்தி ஸ்வரூபமாய் உலகளித்தது கூறியது. அமலல் - நெருங்கல், ''வேயம லகலறை'' என்பது கலி, தமனகம் - மருக்கொழுந்து; தமனம் என்பது வழக்கு. இதுவே தவனமாகவும் வழங்குதலான் இதனுண்மை உணர்க.'' தவநோத்ஸவம்'' எனவழங்குவது காண்க.

61. கலவி யவாவன் முலையாரின் வைத்தவர் கண்ணிடர
கலவிய வாவன் புரைப்பார் தண்புல்லைக் கடவுள்முன்ப
கலவிய வாவன் மருவிருள் கண்டான் கழலுளம்பு
கலவிய வாவன் மதியின் வினவலர் கண்டகரே.

இ-ள் : கலவி அவா வல் முலையாரின் வைத்து - புணர்ச்சிக் குரிய ஆசையைச் சூது கருவிபோன்ற முலைமகளிர்பால் வைத்து; அவர்கண் இடர் அகல - அவரிடம் துயர் நீங்க; வியவா அன்பு உரைப்பார் - வியந்து அன்பு மொழிவார்; தண் புல்லைக் கடவுள் - குளிர்ந்த புல்லாணியில் எழுந்தருளிய தெய்வம்; முன் பகல் அவிய வாவல் மருவு இருள் கண்டான் - பண்டு சூரியன் மறைய வௌவால்கள் பொருந்துதற்குரிய இருட் போழ்தைச் செய்தவன்; கழல் உளம் புகல - அவன் திருவடிகளை மனம்விரும்ப; இயவு ஆவல் மதியின் வினவலர் - வழியை ஆர்வ முடைய புத்தியுடன் அறிந்தார் பாற் கேட்கின்றிலர்; கண்டகரே - இவர் உலகிற்கு முள்ளாக உள்ளவரே எ-று.

கண்டகம் - முள். கண்டகர் என்றதனாற் களையத் தக்கவர் என்பது குறிப்பு. இயவு-வழி. வாவல் - இரவிற் சஞ்சரிக்கும் பறவை. இரவென்று துணிதற்கு இதுவும் ஒரேது. மகளிர்பால்வைத்த உள்ளம் கழல் புகல என்க. புகற்சி - விருப்பம். விரும்பாமைமட்டுமன்று விரும்பற்கு

நெறியும் வினவலர் ஆதலாற் கண்டகர் எ-று. ஆவல் மதியின் வினவினும் பயனுண்டு என்று கொள்க.

62. **கண்டக ராகவம் வாரணப் போரினை காணகலர்வன்**
கண்டக ராக வெந்நாளுமி ரார்பிறர் காதலிமார்க்
கண்டக ராகங் கெழுமார் புல்லாணிக் கடற்குளித்துக்
கண்டக ராக வனையன் பொடுதொழக் கற்றவரே.

இ-ள்: கண் தகர்ஆகவம் - பிறர் கருதும் ஆட்டுக் கிடாய்ப்போர்; வாரணப்போர் - சேவற்போர்; இவை காண்கலர் - இவற்றைக் காண்டலிலர்; வன் கண்டகர் ஆக எந்நாளும் இரார் - வலிய முள் ஒத்தவராக எஞ்ஞான்றும் உளராகார். பிறர் காதலிமார் - பிறர் காதற் குரிய மனையாட்டியரை. கண்டு, அக ராகம் கெழுமார் -பார்த்து மனத்தாசை விளையார்; புல்லாணிக் கடற் குளித்து - திருப்புல்லாணி ரத்நாகரத்திற் குளித்தலைச் செய்து; கண் தக - படைக்கப்பட்ட விழிகட்குத் தகுதியாக, ராகவனைத் தொழக் கற்றவர் - இரகுகுலத் தவதரித்தவனைச் சேவிக்கும் வண்ணம் கல்வி பயின்றவரே எ-று.

கண்ணுதல் - கருதுதல். புல்லாணிக்கடல் - ஆதி சேது தீர்த்தம். ''ஓதிநாமங் குளித்துச்சி தன்னாலொளிர் மாமலர்ப்பாத நாளும் பணிவோம்'' என இப் புல்லாணித் தலத்தில் ஆழ்வார் அருளிச் செய்தலிற் குளித்தல் பகவத் ஸம்பந்தத்தால் வேண்டப்பட்டது, ''நீண்ட தோள் மால் கிடந்த நீள்கடனீ ராடுவான், பூண்ட நாளெல்லாம் புகும்'' என்பதும், இதற்கேற்ப நோக்குக ''இது விலங்கை யீடழியக் கட்டிய சேது... ஊனொடுங்க வெய்தானுகப்பு'' என்பதும் இத் திருப்பதியையே கருதித் திருமழிசையாழ்வார் அருளிச் செய்தது காண்க. தொழக் கற்றவரே என்றது ''கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன், நற்றாள் றொழாஅ ரெனின்'' என்பது

கருதிக் கூறியது'' கற்பா ரிராமபிரா னையல்லால் மற்றும் கற்பரோ ' என்றதனையும் ஈண்டைக்கு நோக்குக.

தொழக் கற்றவர் பிறவுயிர்க்கு ஊறஞ்சுவர் என்றும், வன்நெஞ்சராகா ரென்றும், பிறர்மனை விழை யாரென்றும் கூறியவாறு. கண்தக என்றது, அவனைக் ''காணாத கண்என்ன கண்ணே'' என்பதனை நோக்கியது. மரக்கண் மயிற்பீலிக்கண் ஆகாது ஒளிப்புலம் உடைய கண் ஆதற்குத் தக எனினும் அமையும். 'இராமனைக் காணாதவனும் இராமனாற் காணப்படாதவனும் நிந்திக்கத் தக்கவர். தம் உயிரும் தம்மை வெறுக்கும்' என்பது வான்மீகி முடிவுரை.

63. **கற்றவ ராக வளைத்துப் புரங்கொல் கபாலிதொழக்**
கற்றவ ராகவ துன்பக் கடனின்று காசினிய
கற்றவ ராக வடிவாய புல்லைய கன்னியர்க்கேக்
கற்றவ ராக வலைப்படுவேற் கென்கதி சொல்வையே.

இ-ள்: கல் தவர் ஆக வளைத்து - கல்மலையை வில்லாக வளைவித்து; புரங்கொல் கபாலி - திரிபுரத்தைக் கொன்ற கபாலத்தைக் கையிலுடையவன்; தொழக்கற்றவ - தொழுதற்குக் கற்கப்பட்டவனே. ராகவ - இரகுகுலத் தவனே; துன்பக்கடல் நின்று காசினி அகற்ற - துயர் கடனின்று பூமிதேவியை அகல்விக்க வேண்டி; வராக வடிவாய புல்லைய - பன்றி உருவாய புல்லாணிப் பதியி லுள்ளவனே. கன்னியர்க்கு - இளம் பெண்டிர்க்கு; ஏக்கற்று - மனம் இளைத்து ஏங்கி; அவ ராகவலைப் படுவேற்கு - வீணாசை வலையிற் படுவேனுக்கு. என் கதி சொல்வையே - யாது கதி என்று சொல்லுவாய் எ-று.

ராமதாரக மந்திரம் ஓதுபவன் ஆதலாற்றொழக்கற்ற தன்மையுணர்க. கபாலம் - பிரமகபாலம். அவராகம் - வீணாசை, ஏக்கறுதல் - இளைத்து இடைதல் ''கடைக் கணேக்கற'' என்பது சிந்தாமணி.

64. கதிக்கல மந்தக் கரணத்து
னையெண்ணிக் காணவெஞ்ச
கதிக்கல மந்த களிற்றிற்
புலத்திற் கவிழ்வநன்ம
கதிக்கல மந்த முனியிசைக்கும்
புல்லைக் காகுத்தநின்
கதிக்கல மந்தம் விளையமற்
காளாய்க் கழிவமென்னே.

இ-ள் : கதிக்கலம் அந்தக் கரணத்து உனை எண்ணிக் காண - மனம் முதலிய அந்தக்கரணங்களில் உன்னை நினைந்து காண்டற்கு விரைகின்றிலேம். வெம் சகதிக்கு அலமந்த களிற்றின் - வெய்ய சேற்றிற்கு வருந்திய யானைபோல, புலத்திற் கவிழ்வம் - சுவை முதலிய புலங்களில் வீழ்ந்து கிடப்போம். நல் மகதிக்கலம் அந்த முனி இசைக்கும் புல்லைக் காகுத்த - நல்ல மகதியாழை அந் நாரதமுனிவன் இசை செய்யும் புல்லாணிக்கண் துயில் கொண்ட ககுத்தன் வழிவந்தவ; நின் கதிக்கு அலம் - நின்னது பரகதிக்கு யாமல்லேம். அந்தம் விளை யமற்கு - இறுதியை விளைக்கின்ற யமற்கு; ஆளாய்க் கழிவம் - யமனுக்கு அடிமையாய்க் கெடுவேம் என்னே - இஃது யாது எ-று.

கதித்தல் விரைதல்; எண்ணிக் காண - தியானித்து பிரத்யக்ஷீகரிக்க வெம்சகதி எனப்பட்டது, பொல்லா நிலம் என்றற்கு, ''அசும்பும். சகதியும் பொல்லாநிலமே'' என்பது திவாகரம். அலமருதல் - சுழன்று வருந்தல்; புலம்- ஐம்புலம். அலம் - அல்லேம், மகதி-நாரத முனிவன் யாழ். கலம் - யாழ். மகதியாழினால் அறியப்படுதலின் அந்த என்பது பண்டறி சுட்டு. காகுத்தன் - தர்ப்பசயனராமன், நின்கதி என்றலால் அதோகதி யாகாது பரகதியாயிற்று. எண்ணிக் காண - அகத்தெண்ணி அகத்தே காண எ-று.

65. என்றலைக் காவிரிஞ்சன் பொறித்தான்
புல்லையாய் நினெண்ணா
தென்றலைக் காவிரிபோல்
யாறொழுகற்கு மின்மதிமீன்
என்றலைக் காவிரி வானியங்
கற்குநீ யேவைக்குமே
தென்றலைக் காவிரி யாப்புள்
விலங்கு மெண்ணிற்றிலையே.

இ-ள் : என் தலைக்கா விரிஞ்சன் பொறித்தான் புல்லையாய் நின எண்ணாது - புலர்ணித்தெய்வமே நின்னைஎண்ணாதபடி என்னுடைய தலைக்கு மட்டுமா பிரமன் எழுதினான். என் - யார்து காரணம். தலைக்காவிரி போல் யாறு ஒழுகற்கும் - தலைமைபெற்ற காவிரி போல யாறுகள் நீரொழுகற்கும்; இன்மதிமீன் என்று - இனிய மதியும் நக்ஷத்திரங்களும் சூரியனும்; அலைக்கா விரி வான் இயங்கற்கும் - அலைக்கப்படாது விரிந்த வானத்திலே செல்லுதற்கும். ஏவைக்கும் - மற்றைச் செயற்கும்; நீ ஏது என்றலை - நீ காரணம் என்பதை; கா இரியாப் புள் விலங்கும் - சோலைகளை விட்டு நீங்காத பறவைகளும் விலங்குகளும், எண்ணிற்று இலையே - எண்ணினது இல்லையே எ-று.

எண்ணிற்றில்லை என் என்று முடிக்க. இங்ஙனம் நீ காரணம் என்று எண்ணாமல் புள்ளும் விலங்கும் என்னோடு படைப்பதென் எ-று இவ்வித சிருஷ்டிக்குக் காரணம் என் என்றும் அமையும். யான் விலங்கு புள்ளோடு ஒப்பேன் என்பது குறிப்பு. பல்லுயிரும் நிலைத் தற்குரிய நீர் ஒளி முதலியவற்றிற்கும் மற்றைவற்றிற்குமே நீர் ஏது என்று காட்டியவாறு. கா இரியாப் புள் விலங்கு என்றது புள்ளும் பயன் துய்க்குங் காவும் உன் படைப் பென்று தோற்றுவித்தது; புள் மேலிருந்து பயன் துய்ப் பன; விலங்கு கீழ்நின்று துய்ப்பன.

66. **இலைக்கா வலர்க்காக் கனிக்காத்**
தருப்பயனீந் தென்ன நற்க
யிலைக்கா வலர்க்கது நல்கும்
விண்வேண்டி னஃதீயுந்தன்கோ
யிலைக்கா வலர்க்குயர் வீடுந்
தரும்யா ரிறைஞ்சிடினும
யிலைக்கா வலதுவே றில்லாத
புல்லை யிருந்தெய்வமே.

இ-ள் : இலைக்கா அலர்க்கா கனிக்கா - இலையின் பொருட்டாகவும் பூவின் பொருட்டாகவும் கனியின் பொருட்டாகவும், தருப்பயனீந்தென்ன - ஒரு மரமே அவரவர் வேண்டிய பயனைத்தந்தாற்போல; கயிலைக்கு ஆவலர்க்கு - கயிலைமலையை அடை தற்பொருட்டு அன்பு செய்வார்க்கும்; அது நல்கும் - அதனை கொடுப்பவன்; விண்வேண்டின் - துறக்கம் விரும்பின்; அஃது ஈயும் - அதனை ஈவன்; தன் கோயிலைக் காவலர்க்கு - தன் திருக்கோயிலை என்றும் வேண்டாது காத்தலை யுடையார்க்கு: உயர் வீடும் தரும் - உயர்ந்த மோக்ஷத்தையும் தருவான்; யார் இறைஞ்சிடினும் - எவர் எவர் வணங்கினாலும், மயிலைக்கா அலதுவேறு இல்லாத புல்லை இருந்தெய்வமே - இருவாட்சி படர்ந்த சோலையல்லது வேறுவெற்றிடனில்லாத புல்லாணிப் பெருங்கடவுள் எ-று.

இறை யார் இறைஞ்சினும் மரம் ஈவது போல் நல்கும் ஈயும் தரும் என்க. மயிலை-இருவாட்சி. மயிலைக்கா-மயிலைக் கொடியை யுடைய மரச் சோலை. இருவாட்சி யின் சிறப்பு நோக்கி மயிலைக்கா எனப்பட்டது. இருமை-பெருமை.

67. **இருந்தைய மாவாசை யின்மரந்**
தீப் பரி னிதுபொருள்
இருந்தைய மாவா சொரிய
வெணாரன் பிலரிவர்தாம்

இருந்தைய மாவாசை யிற்கட
றோய்வர் நின்னின்னருளுக்
இருந்தைய மாவாச வண்புல்லை
யாய்சேய்த் திருப்பவரே.

இ-ள் : இருந்தை அம்மா ஆசையின் - அம்மா,கரி ஆசையினால்; மரம் தீப்பர் - மரங்களைச் சுடுவர். இனிது பொருள் இருந்து ஐயம் ஆவா சொரிய எண்ணார் - இனிதாகச் செல்வம் இருந்துவைத்துப் பிச்சையை ஐயோ பொழிய நினையார், அன்பு இலர் - அன்பு என்பது இல்லையாவர்; இவர்தாம் - இப்படிப்பட்டவர்தாம், இரும் தை அமாவாசையில் கடல் தோய்வர் - பெரிய தை அமாவாசை நாளில் கடல் நீரிற் குளிப்பர். நின் இன் அருளுக்கு - உனது இனிய திருவருளுக்கு; இருந்தைய- இருந்தை யூரமர்ந்த முதல்வனே; மா வாச வண் புல்லையாய் - திருமகள் வசிக்கும் இடமாகிய வண்மையை உடைய புல்லாணியிலுள்ள தெய்வமே; சேய்த்து இருப் பவர் - தூரத்தே இருப்பராவர். எ-று.

ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் வரையும் அன்பிலர் கடற்குளிப்பர். இவர் நின் இன் அருளுக்குச் சேய்த்து இருப்பவர் என்க. இருந்தை - முதலது கரி; பின்னது திரு இருந்தையூர். இது கூடலழகர் திருக்கோயில் கொண்ட தலத்திற்குப் பரிபாடல் கூறும் பெயர். இதனை - இத்தலத்தில் தர்ப்பாதன மழகியார் ஒப்ப வீற்றிருந்த திருக்கோல மாதலும் நோக்குக. இருந்த ஐ ஊர், இருந்தையூர் என்றாயது என்பதும் பொருந்தும். இருந்தகடவுள் ஊர். எ-று. ஐயூர் என்பதும் அக்கால வழக்கேயாம். ஐயூர் முடவனார் என்பது காண்க. இருந்தையும் புல்லையும் பாண்டியர் தொழுங்கோயிலாதல் தெரிக.

68. **பவனா சனமிசைக் கண்படை**
கொண்டுநற் பாற்கடல்வாழ்
பவனாசனந்தங் கழூஉம் புல்லையான்
புல்லன் பண்ணியதர்ப்

பவனா சனமழ காவமர்ந்
தோனிப் பரமனல்லாற்
பவனா சனஞ்செயுந் தெய்வமற்
றில்லெனப் பாடுமினே.

இ-ள்: பவன அசனம் மிசை - காற்றை உண்ணும் பாம்பின் மீது, கண்படைகொண்டு - உறங்குதலைக் கொண்டு; நற்பாற்கடல்வாழ்பவன் - நல்ல திருப்பாற் கடலில் வாழ்பவன்; ஆசு அனந்தம் கழூஉம் புல்லையான் -அளவில்லாதன வாகிய குற்றங்களைக் கழுவும் திருப் புல்லாணியில் உள்ளவன். புல்லன் பண்ணிய தர்ப்ப வன ஆசனம் அழகா அமர்ந்தோன் - புல்ல மகாரிஷி செய்த தருப்பையா லாகிய கர்ட்டு அணையில் அழகாக வீற்றிருந் தவன். இப் பரமன் அல்லால் - இம் மேலோன் அல்லாமல்; பவன் நாசனம் செய்யும் தெய்வம் - பிறவியை நாசம் செய்தற்குரிய தெய்வதம்; மற்றில்லை - வேறில்லை; எனப் பாடுமினே - என்று பாட்டாற் றுதியுங்கள் எ-று.

பவம் - பவன் போலி. வனாசனம் - காட்டணை, நாட்டிலுள்ளார் இடுவது அன்று தர்ப்பைப் புல்லணை யாதலான். நாட்டார் ரத்நாசன மிடுவார். புல்லன் - இத்தலத்தை வழிபட்ட முனிவன். புல்லன்குடி, புல்லந்தை என்பன பல இம்முனி பேர்கொண்டன இந்நாட்டிலுண்டு. புல்லங்காடு என்பதும் இவன் இருந்த வனம் என்னும் பொருட்டு, புல்லாரணியமும் அதுவே. தர்ப்பாஸன மழகியார் என்பது இத் தலத்தெய்வத் திருநாமம்.

69\. பாடகத் தாயின தொல்வினைப் பற்றறுப்பா யெங்கள் கூப்
பாடகத் தாயினரு ளாதிராய் நிற்கிப் பார்மகளென்
பாடகத் தாயின சேவடி யாய்தொண்டைப் பானதிபாய்
பாடகத் தாயி னறீர் புல்லையாய் பெரும்பண்ணவனே.

இ-ள்: பாடகத்து ஆயின தொல்வினைப் பற்று அறுப்பாய் - மகளிரின் காலிற் பாடக அணி போல

விடாததாயின பழ வினையின் பிடிப்பை அறுப்பாயாக. எங்கள் கூப்பாடு அகத்து ஆயின் அருளாது இராய் - எந்தம் கூக்குரலை நின் உள்ளே ஆரா்யின் அருளாமல் வெறிது இருக்கமாட்டாய். நிற்கு இப் பார்மகள் என்பாள் தக - உனக்கு இப் பூமி தேவியெனப் பெயர் சிறந்தாள் தக்கவளாக; தாயின சேவடியாய் - தாவியளந்த் செய்ய தாளனே, தொண்டைப் பால் நதி பாய் பாடகத்தாய் - தொண்டை நாட்டுப் பாலாறு பாயும் திருப்பாடகத் திலுள்ளவனே. இனல் தீர் புல்லையாய் - இன்னல் நீக்கும் புல்லாணியை யுடையவனே, பெரும்பண்ணவனே - பெரிய தெய்வமே எ-று.

சேவடியாய் பாடகத்தாய் புல்லையாய் பண்ணவனே பற்றறுப்பாய் ஆயின் அருளாதிராய் என்க. பாடகம் தொல்வினைக் குவமையாதல், 'பாடகம் போலச் சூழ்ந்த பழவினை' என்னும் சிந்தாமணியினும் கண்டது, அதற்கு நச்சினார்க்கினிய ரெழுதிய அரிய உரை ஆராய்ந்து கொள்க. பூமிதேவிபிறர்க்குத் தக்கவளல்லள். நிற்குத்தகத் தாயினை எ-று.

உண்டு உமிழ்ந்து தேர்ந்து மணந்து அளந்து பிறந்து புலி தனதே என்ன நின்றான் என்பர் பெரியார், தொண்டை - தொண்டைமானாடு; பால்நதி - பாலாறு. பாடகத்தும் இத்தலம் போல வீற்றிருந்த திருக்கோல மாதல் காண்க.

70. பண்ணாரி யன்பி னிசைக் கெதிர்
மாங்குயில் பண்மிழற்றப்
பண்ணாரி யன்மறை தேர்வார்க்
கெதிர்கிளி பாடவகம்
பண்ணா ரியன்று வலஞ்செய்
புல்லாணிப் பதித்தளிநாப்
பண்ணாரி யன்வழி பாடுகந்
தானெம் பராபரனே.

இ-ள்: பள்நாரி அல்பின் இசைக்கு எதிர் - பள்ளக் குடிப் பெண்டுடைய காமப் பாட்டிற்கு எதிராக; மாங்குயில் பண் மிழற்ற - மாமரத்துக் குயில்கள் பண் ஒலிககவும். பண் ஆர் இயல் மறை தேர்வார்க்கு எதிர் - இசை நிறைந்த இயலுடன் கூடிய வேதத்தைத் தேர்ந்து ஓதுவார்க்கு எதிரே. கிளி பாட - கிளிகள் பாடவும்; அகம் பண்ணார் இயன்று வலஞ்செய் புல்லாணிப் பதித்தளி நாப்பண் - பாவம் செய்யாதார் நடந்து வலம்வருதலைச்செய்யும் புல்லாணித் தலத்துத் திருக் கோயில் நடுவுள்; ஆரியன் வழிபாடு உகந்தான் - வைகாநஸப் பார்ப்பான் பூசையை விரும்பி உறைபவன்; எம் பாராபரன் - எங்கள் பராத்பரன் எ-று.

மிழற்றப் பாட வழிபாடுகந்தான்; மிழற்றப் பாட வலஞ்செய் எனினு மமையும். பள் - பட்குடி, அகம் - பாவம், தளி - கோயில், நாப்பண் - நடுவுள்; ஆரியன் - பூச்சியன், இக் கோயில் அர்ச்சகன் வைகாநஸாகம தீக்ஷைபெற்றவன்.

71. பராவருந் தாம வைகுண்டத் திருப்பிரிப் பாரினரும்
பராவருந் தாமரைத் தாடொழிற் றேவர் பணிதிவ்யசா
பராவருந் தாம லுயிரளிப் பான்புல்லை பற்றினிரிம்
பராவருந் தாமகிழுங் கோகுலத்தும் படர்ந்துளிரே.

இ-ள் : பராவு அருந்தாம வைகுண்டத்து இருப்பிர் - புகழ்ந்து சொல்லுதற்கு அரிய ஒளி மயமான வைகுண்டம் என்னும் அழியா வீட்டிலிருப்பீர், இப் பாரினர் உம்பராவர் உம் தாமரைத்தாள் தொழின் - இப் பூமியிலுள்ளவர் தேவராவர் உம்முடைய தாமரையடி களைத் தொழுதால். தேவர் பணி திவ்யசாபரா - சுரர் வணங்கும் தெய்வச் சிலைப்பிரானாராக; வருந்தாமல் உயிர் அளிப்பான் புல்லை பற்றினிர் - உயிர் வருந்தாமல் இரக்ஷிக்கவேண்டிப் புல்லாணித் தலத்தைப் பற்றிக் கொண்டீர். இம்பர் ஆ வருந்தா மகிழுங் கோகுலத்தும்

படர்ந்துளீர் - இவ்வுலகிலே பசுக்கள் மேய்ந்து மகிழ் தலைச்செய்யும் கோகுலப் பிரதேசத்தும் சென்றுள்ளீர் எ-று

புகற்கரிய வைகுண்டத் திருப்பீர், புகற்கெளியராய்த் தென்னாட்டு புல்லை பற்றினீர்; வடநாட்டுக் கோகுலம் படர்ந்துள்ளீர்; உம் தாமரைத் தாளைத் தொழின் இப் பாரினர் உம்பராவர் என்க. வைகுண்டத்திருப்பீர் உயிரளிக்கப் புல்லையினும், பசுக்களை அளிக்கக் கோகுலத் தினும் எளியராய் வந்துள்ளார் என்பது குறிப்பு. வைகுண்டத்துப்பரவா சுதேவமூர்த்தி புல்லையில் அர்ச்சா மூர்த்தி கோகுலத்தில் அவதார மூர்த்தி என்க.

72. படவரவத் தணையா னன்னை போலவந்த பாவியின்க
படவர வத்தனை யாயு முன்னப்பால் பருகினன்செம்
படவ ரவத்த முறாதேத்து புல்லைப்ப கவனகப்
படவரவத் தழைப்பீர் கரிபோ லன்பு பாயநின்றே.

இ-ள்: படஅரவத்து அணையான் - படங்களை யுடைய பாம்பின் பாயலையுடையான்; அன்னைபோல் வந்த பாவியின் கபட வரவு - தாய்போல வந்த பாவியாகிய பேய்ச்சியின் வஞ்சவரவினை; அத்தனை ஆயும் உன்ன - அவ்வளவு ஆய்க்குடியும் நினைந்து தெரியும்படி; பால பருகினன் - முலைப்பாலைக் குடித்தனன். செம்படவர் அவத்தம் உறாது ஏத்து புல்லைப் பகவன் - செம்மையான படவினை யுடைய பரதவர் கேடு அடையாத வண்ணம் துதிக்கும் புல்லாணி யில் ஷட்குணபூரணன்; அகப்பட அரவத்து அழைப்பீர் - இவன் நும்பால் அகப்பட வேண்டி பேரொலியுடன் கூப்பிடுவீராக. கரிபோல் - கஜேந்திரன் ஒப்ப; அன்பு பாய நின்றே - பத்தி பாய்ந் தொழுகும் வண்ணம் நிலைத்தே - எ-று.

கரிபோல் அன்பு பாய நின்று பகவன் அகப்பட அரவத்தழைப்பீர் என்க. செம்படவர் தாமும் தம் படவும் கெடாமைக்கு அந்நிலத்து வீற்றிருக்கும் ஆதிசெகந்நாதனை, தம் நிலத்தெய்வ மாகிய வருணனும் ஏத்தும் பகவனை ஏத்துவர் என்க. அரவத்தணையானாதலின் நச்சுப்பால் பருகினன் என இயைபு காண்க. கடவரவினைத் தெரிபவனும் செம்படவரும் ஏந்த எளியவனுமாதலால் நீவிரும் உள்ளவாறு அன்பு பாய நின்று கரிபோலழைப்பீர்; அழைத்தால் இவன் அகப்படுவன் என்பது குறிப்பு. ஆய் - ஆய்ச்சாதி; அத்தனை ஆயும் அவ்வளவு தாயாரும் எனினும் பொருந்தும்.

73. பாய மகம்பரந் தூரப் பதின்மர்சொல் பாட்டுகந்தோன்
பாயம கம்பர வற்கெனை யாண்டவன் பத்தியின்று
பாய மகம்பர முய்க்குமென் பார்க்கிலன் பைம்பொலக்குப்
பாய மகம்ப ரணித்தேத்தும் புல்லைப் பவித்திரனே.

இ-ள்: பாயும் அகம் பரந்து ஊர - விருப்பம் மனத்திற் பரவி மேல் வழியும்படி; பதின்மர் சொல் பாட்டு உகந்தோன் - பத்தாழ்வார் மொழிந்த திருப்பாட்டிற்கு மகிழ்ந்தவன். பா யமகம் பரவற்கு எனை ஆண்டவன் - பாடலாகிய யமகத்தொடைச் செய்யுளாற் றுதிக்கும் வண்ணம் என்னை ஆட்கொண்டவன்; பத்தியின்று உபாயம் மகம் பரம் உய்க்கும் என்பார்க்கு இலன்-பத்திமை இல்லாது தாம்செய்யும் வேள்விகளே உபாயம் என்னும் மேனிலையிற் செலுத்தும் என்றும் சொல்வார்க்கு இல்லாதவன். பைம்பொலக் குப்பாயம் - பசிய பொற் கவசத்தை; அகம்பர் அணிந்து ஏத்தும் புல்லைப் பவித்திரனே - உட்பணி செய்வார் சாத்திப் பரவா நிற்கும் புல்லாணியிலுள்ள புநித மூர்த்தி எ-று.

உகந்தோன் ஆண்டவன் பவித்திரன் உய்க்கும் என்பார்க்கு இலன் என்க. பாயம் - விருப்பம், 'நளிபடு சிலம்பபிற் பாயம்பாடி' என்பது குறிஞ்சிப்பாட்டு; பாசம்

என்பதன் மரூஉ; அன்புமாம். 'என்கட் பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதிக்கே' என்ப, உபாயும் - காரணம், அகம்பர் - உட்பணி புரிவார்; புறம்பர் என்பதற்கு மறுதலை. இவ்வூர்த் தர்ப்பா தனுமழகியார் பொற்கவச மணிந்தவர் என்க.

74. பவள மலைக்குட் படர்கழிக் கானலிற் பான்மதியொப்
பவள மலைக்கு நிகருப்பி னார்புல்லைப் பாற்றிருவென்
பவள மலைக் கினிப்பா யமர்ந்தோனடி பாடினர்க்கின்
பவள மலைக்கப் படாதளிப் பான்செகம் பாலிப்பனே.

இ-ள்: பவளம் அலைக்குட் படர் கழிக்கானலில்- பவளகொடிகள் கடற்றிரைக்குள்ளே படர்கின்ற கழிக் கரைப் பக்கத்தில். பால்மதி ஒப்ப-பானிற மதிக்கு ஒப்பாக; அளம் மலைக்கு நிகர் உப்பின் ஆர் புல்லைப்பால் - அள வயல்கள் மலைக்கு ஒத்த உப்புக் குவியலால் நிறைந்த புல்லாணியிடத்து; திரு என்பவள் அமலைக்கு இனிப்பாய் அமர்ந்தோன் - திருவெனச் சிறந்தவளாகிய தூயவளுக்கு இனிமையாய் வீற்றிருந்தவன்; அடி பாடினார்க்கு இன்ப வளம் - திருவடியைப் பாடியவர்க்கு ஆநந்தப் பெருக்கை. அலைக்கப் படாது அளிப்பான் - அழிக்கப்படாமற் றருபவன். செகம் பாலிப்பன் - உலகமுழுதும் இரக்ஷிப்ப வன் என்க.

பான்மதி நிறத்திற்கும் மலை அளவிற்கும் உவமை, உடலுக்கு ஊணினிமையும் அணியும் தரு கடற்புல்லை என்பது குறிப்பு, ''மலர்ப்பாவைக் கன்பா'' என்றலால் இனிப்பாய் அமர்தல் காண்க. 'வினைவளம்' என்னுந் திருக்கோவையிற் போல இன்பவளம் இன்பப்பெருக்கா யிற்று. செகம் பாலிப்பன் - இத்தலத்து இறைவற்குச் செகந்நாதன் என்பது பேர் என்று கருதுக. உப்பளம் இவ்வூரிலுள்ளமை குறித்தது; உப்பு இன்றியமையாதது என்பது ''உப்பின்று புற்கை யுண்கமா'' என வருதலா னும் ''வேளைவெந்தை உப்பின்று'' என வருதாலானும் அறிக.

75. பானலங் காரமென்றால் வாய்க்குறை
யென்பர் பண்ணவன்கோ
பானலங் காரணமென்பீர்க்
குமகுறை பார்மினென்பல்
பானலங் கார மலர்புல்லை
மாதவன் பாயருளுய்ப்
பானலங் காரம் புனையீர்
சொலீர்நினைப் பானிலிரே.

இ-ள்: பால் நலம் காரம் என்றால் வாய்க்குறை என்பர் - பாலின் நல்ல தன்மையைக் கார்ப்பு என்று உரைத்தால் உரைப்பவர் வாய்க்குற்றமென்று உலகோர் சொல்வர். (அதுபோல) பண்ணவன் கோபானலங் காரணம் என்பீர்க்கு - கடவுளுடைய வெகுளித்தழல் நுந்துயர்க்குக் காரணமென்றுரைக்கு நுங்கட்கு, உம குறை பார்மின் என்பல் - உம்முடைய குற்றத்தை பார்ப்பீர் என்று சொல்வேன் பானல் அங்கு ஆர மலர் புல்லை மாதவன் - நெய்தற் பூக்கள் அவ்விடத்து நிறைய மலர் கின்ற புல்லாணியின் திருமால்; பாய் அருள் உய்ப்பான் - என்றும் பாய்கின்ற அருளை நும்பாற் செலுத்துதற்கு; அலங்கு ஆரம் புனையீர் - அசைகின்ற மாலையைத் தொடுக்க மாட்டீர். சொலீர்-வாயான் உரைக்கமாட்டீர்; நினைப்பான் இலிர் - நினைத்தற்கும் இல்லையாயினர் எ-று.

திரிகரணத்தாலும் வழிபடாத நுமக்கு வழிபடாமை மட்டுமன்று; குறைகளும் உள்ளன; ஆதலான் அருள் உய்த்திலன் எ-று. அங்கு-பானல் மலர்தற்குரிய அவ்விடங் களில் எ-று பானல் - குவளை.

76. பானத் தமரர் பருகற் கமுது படைத்தவசோ
பானத் தமரச் சமயம் பலகாண் பகவமுத்தீன்
பானத் தமரம் பையினிடை யூர்புல்லைப் பண்ணவநின்
பானத் தமரபிளி தோங்குஞ் சேது பதிகளுக்கே.

இ-ள்: பானத்து அமரர் பருகற்கு - குடிப்பதாகத் தேவர் அருந்துதற்கு; அமுது படைத்தவ - அமுதத்தை யுண்டாக்கியவனே; சோபானத்து அமரச்சமயம் பலகாண் பகவ - படிகளாகத் தங்கும்படி சமயங்கள் பலவற்றையும் செய்த ஷட்குணமூர்த்தியே. முத்து ஈன் பால் நத்தம் - முத்துக்களை ஈனுகின்ற பால்போல் வெள்ளிய சங்கங்கள்; அரம்பையினிடை ஊர் புல்லைப் பண்ணவ - வாழைமரங் களினிடையே ஊர்கின்ற புல்லாணித் தெய்வமே; நின்பால் நத்த மரபு இனிதோங்கும் சேதுபதிகளுக்கே - சேதுகாவ லர்க்கு; நின்கண் நத்துதலுண்டாக அவர் மரபு இனிது வளரும் எ-று.

நின்கண் நத்த சேதுபதிகளுக்கு மரபு இனிதோங்கும் என்க நத்தம் அரம்பையினிடை யூர்தலைக் கூறியது, நெய்தலும் மருதமும் அணித்தாதல் குறித்து. சேதுபதிகள்- ஸ்ரீராம பிரான் செய்தருளிய திருவணைக்காவலுடை யோர். இவ் வேந்தர் இக் கோயிற் பணி பல செய்து விழாவும் பூசையும் இனிது நடத்துவோர். இவர் இந் நிலக் காவலும் உடையர். நத்துதல் - அன்பு செய்தல்.

77. **கட்கா தலைக்கா திடர்ப்பொய்**
விள்ளாது பெண்காமமொடு
கட்கா தலைப்புரி யாதளிப்
பாய்புல்லைக் காகுத்தது
கட்கா தலைத்தவிர்க் காயெனிற்
செல்வல்பைங் காய்தின்றம
கட்கா தலைச் செய்த
நன்னன் புகுநர கத்திடையே.

இ-ள்: கட்காது அலைக்காது - களவு செய்யாது கொல்லாது; இடர்ப்பொய் விள்ளாது - பிறர்க்கிடர் செய்தலையுடைய பொய்யினைச்சொல்லாது; பெண் காம மொடு கள் காதலைப் புரியாது-பெண் விழைதலுடன் கள் விருப்பத்தைச் செய்யாது. அளிப்பாய் - இரக்ஷிப்பாயாக.

புல்லைக் காகுத்த-புல்லாணியிலுள்ளகாகுத்தன் குலத்துதித் தவனே. துகட்கு ஆதலைத் தவிர்க்காய் எனின் - மேற் கூறிய ஐந்து குற்றங்களுக்கும் ஆளாதலைத் தடுக்காய் என்றால், செவ்வல் - போவேன். பைங்காய் தின்ற மகள் காதலைச் செய்த நன்னன் - பசிய தீங்காயினைத் தின்ற பெண்ணிற்குக் கொலையைச் செய்த நன்னன் என்னும் கொடியோன், புகு நரகத்திடையே-புக்க நரகின்கண்ணே எ-று.

களவு கொலை பொய் காமம் கள் இவ்வைந்தும் புரியாது அளிப்பாய் என்க. நீ இத் துகட்கு ஆதலைத் தவிர்க்காய் எனின், நன்னன் புக்க நரகிடைச் செல்வல் என்க. நன்னன் ஏழிற் குன்றத் தரசன். இவன் அருமையின் வளர்த்த மரத்தின் தீங்காய் ஆற்றில் விழ, அப்புனல் தந்ததை எடுத்துப் புசித்த குற்றத்திற்குப் பதினெண் களிறும் அவள் நிறையுள்ள பொன்செய் பாவையும் கொள்ளாது பெண்கொலை புரிந்தான் என்ப. இதனை, 'புனறரு தீங்காய் தின்றதன் றப்பற், கொன்பதிற்றிரட்டிக் களிற்றோ டவணிறை, பொன் செய்பாவை கொடுப்பவுங் கொள்ளான், பெண் கொலைபுரிந்த நன்னன் போல, வரையா நிரயத்துச் செலீயரோ' என வருங் குறுந் தொகையான் அறிக.

காதல் - காதுதல், கொல்லுதல்.

78. கத்திய மாதங்க முன்வந்த
புல்லைக் கருணையனா
கத்திய மாதங்க மெய்தா
தொருபான் கவிஞர்புகல்
கத்திய மாதங்க மாப்போற்ற
வேற்றான் கழலன்றிக்கார்
கத்திய மாதங்க மோபுணை
நும்பவக் கார்க்கடற்கே.

இ-ள்: கத்திய மாதங்கம் முன்வந்த புல்லைக் கருணையன் கூக்குரலிட்ட யானைமுன் எழுந்தருளிய புல்லாணிக் கணுள்ள அருண்மூர்த்தி. ஆகத்தியம் ஆதங்கம் எய்தாது-அகத்தியன் வளர்த்த தமிழ் தளர்ச்சியடையாது; ஒருபான் கவிஞர் புகல் கத்தியம்-ஒருபத்துப்புலவர் புகன்ற செய்யுளை மாதங்கமாப் போற்ற-சிறப்புடைய பொன் போல் உலகம் கொண்டு போற்றும்படி, ஏற்றான்-ஏற்றுக் கொணடவன்; கழல் அன்றி - திருவடிகளல்லாமல். கார் கத்திய மாது அங்கமோ - இல்வாழ்க்கைக்குரிய பெண்ணின் உடம்போ. புணைநும் பவக்கார்க் கடற்கே-நுமது பிறவியாகிய கரிய கடற்குத் தெப்பமாவது எ-று.

கழலன்றி நும் பவக்கடற்குப் புணை மாதங்கமோ என்க. ஆகத்தியம் - அகஸ்த்ய ஸம்பந்தமுடையது; அகத்தியனால் இலக்கணஞ் செய்யப்பட்டதாதலின் ஆகத்தியம் தமிழாயிற்று; இது வடநூலார் தமிழிற்கு வழங்கும் பெயர். ஆதங்கம் - தளர்ச்சி. தமிழ் தளராது பதின்மர் புகல் கதநியம் ஏற்றான் எனக. தெய்வம் ஏற்காத நிலையிற் றளரும் என்க.

ஒருபான் கவிஞர் - பத்தாழ்வாராகிய திவ்யகவிகள். கத்தியம் - செய்யுள்; பத்தியத்தின் மறுதலை. தெய்வம் ஏற்றலால் உலகு பொன்போலப் போற்றுவது என்பது குறிப்பு. கார் ஹஸ்த்யம் - க்ருஹஸ்த நிலை; கார்கத்தியம் எனச் சிதைந்தது, நீர் கைப்பிடித்த இல்லாள் உடலும் புணையாகாது அவன் கழலைக் கைப்பிடிமின் என்று குறித்தவாறு. இல்வாழ்க்கைத் துணைவியின் அங்கமே புணையாகா; தென்றலால் பிறமாதரங்கமாகாமை கூற வேண்டாவாயின.

79. கடப்பா ரமரும் புயவே டொழும்பூங் கழலினன்மக்
கடப்பா ரமரும் புலாணிப்பதிப் பகவன் பெருஞ்ச
கடப்பா ரமரும் புலப்புற லூர்ந்தெனக் காய்ந்தெளியர்க்
கடப்பா ரமரும் புரிவாரைத் தள்ளுங் கடுநரகே.

இ-ள் : கடம்பு ஆரம் மரும் புயவேள் - கடம்ப மலராலாகிய மாலையைப் பொருந்தும் தோளினை யுடைய முருகக்கடவுள்; தொழும் பூங்கழலினன் - தொழு கின்ற பூத்தொழில் செய்த கழலணிந்த திருவடியன். மக்கள் தப்பார் அமரும் புல்லாணிப்பதி பகவன் - ஆறறி வுடையராய் நெறிதப்புதலில்லாதவர் விரும்பியுறைகின்ற புல்லாணித்தலத்திலுள்ள ஷட்குணமூர்த்தி, பெருஞ் சகடப்பாரம் அரும்பு உலப்புற ஊர்ந்தென - பெரிய சகடத்தின் பொறை பூ அரும்புகளைச் சிதைவுற மேற் சென்றாற்போல. காய்ந்து எளியர் - சினந்து எளியாரை. கடப்பார் - மிதுத்து போவாராய்; அமரும் புரிவாரை - போருஞ்செய்வாரை, தள்ளும் கடுநரகே - கடிய நரகிலே தள்ளுவான். எ-று.

கடம்பு ஆரம் - கடப்பாரம்; மரும்- மருவும் என்பதன் விகாரம். 'காமரு நல்லெழில்' என்னுங் கலித்தொகையுள் காமம் மருவு என்பது காமருவென வந்ததெனக் கொண்டு நச்சினார்க்கினியர் கூறியதனானுணர்க. வலியார் எளியாரைத் தேய்த்துக் கடப்பது பெருஞ்சகடப்பாரம் பூ அரும்பைச் சிதைய ஊர்வதாகும் என்று காட்டியதாம். 'மக்க டாமே யாறறி வுயிரே' என்பது தொல்காப்பியம், புலாணி. புல்லாணி—'மருமலர் பிறந்தகோதை மருவி வளரும் புலாணி வளரரசு கண்டுளோரை அடையவே' என்பது பழம்பாடல்.

80. **கடுக்கன லாயுதங் கொல்லாது**
பிள்ளையைக் காத்தனையோர்
கடுக்கன லாலணியாய் வினைத்தேள்
கொட்டக் கன்றியெம்முள்
கடுக்கன லாயறி வாய்புல்லை
யாயிது கண்டருள்ச
கடுக்கன லார்பஞ்சி போற்கெட
நீட்டிய கான்மருந்தே.

இ-ள் : கடு கனல் ஆயுதம் கொல்லாது - விடமும் நெருப்பும் ஆயுதங்களும் கொல்லாமல்; பிள்ளையைக் காத்தனை - பிரகலாதன்னென்னும் குழவியை இரக்ஷித்தாய். ஓர் கடுக்கன் அலால் அணியாய் - ஒற்றைக் குண்டலமல்லாமல் அணிந்துகொள்ளாய்; வினைத்தேள் கொட்டக் கன்றி எம் உள் கடுக்கல் - வினையாகிய தேள் கொட்டலால் கன்றுதல் அடைந்து எம் உள்ளே வேதனை உறுதல்; நல்லாய் அறிவாய் - நல்லோயே தெரிவாய். புல்லையாய் - புல்லாணியிலுள்ளவனே - இது கண்டு அருள் - இந்த வேதனையைப் பார்த்துத் தந்தருள்வையாக. சகடு உக்கு அனலார் பஞ்சிபோற்கெட நீட்டிய கான்மருந்தே - சகடாசுரன் சிதைந்து தீப்பட்டபஞ்சு போலக் கெடும் வண்ணம் நீள்வித்த திருவடியாகிய மருந்தினையே எ-று.

புல்லையாய் அணியாய் காத்தனை நல்லாய் உள் கடுக்கல் அறிவாய் கான் மருந்தே அருள் என்க. கான் மருந்து - காட்டுமருந்து என்பது சாடு. மருந்தருளுதற்கேற்றவன் என்று கடுக்கனலாயுதம் கொல்லாது பிள்ளையைக் காத்தனை என்பதாம். பலராமன் ஒரு குழையொருவன் என்பது அறிந்தது. கடுக்கல் - கடுப்புறுதல். 'தேட்கடுப்பு' என்ப. உள்ளே கடுக்கலை மருத்துவன் அறிவன். சகடாசுரன் கொல்ல வந்தபோது நினக்குமே நின் காலே மருந்தாயிற்று என்று குறிப்பித்தவாறு, கடுக்கன்-குண்டல வகையுள் ஒன்று. ''கடுக்கக் குண்டலம்'' என்பது கூத்தன் கவிச்சக்கரவர்த்தி வழங்கியது. பெண்டிரணியுங் குழையைக் கடுக்கன் என்பது இந் நாட்டு மறவர் வழக்கமாம்.

81. **கானம ருந்தின தூடணன் வீடச்செய் காகுத்தனும்**
கான மருந்தி னருந்தக் குழலிசை கண்ணனுமாய்க்
கான மருந்தின மேத்தப் பவக்கரை கண்டுய்க்க மீ
கானமருந் தினவாற் றொழும் புல்லைக் கடற்புலத்தே.

இ-ள் : கான் அமர் உந்தின தூடணன் வீடச் செய் காகுத்தனும்-காட்டிலே போரெழச்செய்த தூஷணனை உயிர் போகச் செய்த ககுத்தகுலத்தவனும்; கானம் மருந்தின் அருந்தக்குழல் இசை கண்ணனும் ஆய்-இசையை அமிழ்தம் போலப் பருகும் வண்ணம் வேய்ங்குழலை இசைத்த கண்ணபிரானும் ஆகி; கால் நமரும் தினம் ஏத்த-திருவடிகளை நம்மவரும் நாளுந் துதிக்குமாறு (அங்ஙனம் துதித்தவர்க்கு) பவக்கரை கண்டு உய்க்க - பிறவிக் கடற்குக் கரைகண்டு கொண்டு செலுத்தற்கு; மீகான் அமரும் - மரக்கலம் ஒட்ட வல்ல தலைவன் விரும்பி யுறைகின்றான். தினவால் தொழும் புல்லைக் கடற் புலத்தே - திருப்புல்லாணியாகிய கடனிலத்தே தொழ வேண்டுமென்று தினவினால் தொழுவீராக எ-று.

காகுத்தனாய்ச் செய்தது வன்மைக்கும் கண்ணனாய் இசைத்தது மென்மைக்கும் காட்டிற்று அடைந்தார்க்கின் பளித்து விரோதிபரிகாரஞ் செய்யவல்லவனாய் புல்லைக் கடற்புலத்து பவக்கரைகண்டு உய்க்க மீகான் அமரும்; தினவாற் றொழும் என்க. மீகான் - வங்கம் ஓட்டுபவன். நமரும் என்புழி உம்மை இழிவுகுறித்தது. மீகான் தன் தொழிற்கேற்கக் கடற் புலத்து அமரும் என்று கூறியது காண்க.

82. புலவா தவனிவ னென்றுசொல்
 வீர்க்குப் புகல்வலென்னைப்
புலவா தவனி மணாளன்
 பிதாவெனப் போய்த்தொழும்வி
புலவாத வனிடை மேவி
 யெலாமும் புகுந்தொளித்தான்
புலவாதவ நிரையாய் மேயும்
 புல்லை பொலிந்துளனே.

இ-ள்: புலம் வாது அவன் இவன் என்று சொல்வீர்க்கு-அக்கடவுள் இவ்வுயிர் என்று ஞானவாதம் புரிவீர்க்கு,

புகல்வல் - சொல்வேன். என்னை புலவாது அவனி மணாளன் பிதா எனப் போய்த்தொழும் - பூமி தேவி நாயகன் உலகிற்குத் தந்தை என்று துணிந்து தொழுமின் என்னைவெறாது விபுல ஆதவனிடை மேவி - விசாலமாயுள்ள சூரியன் நடுவுள் விரும்பி அமர்ந்து; எல்லாமும் புகுந்துஒளித்தான் - எல்லாப் பொருள்களிலும் புக்கு மறைந்துள்ளவன். புல ஆ தவ நிரையாய் மேயும் புல்லை- புலங்களில் உள்ள பசுக்கள் மிகவும் கூட்டமாக நின்று மேயும் புல்லாணிக்கண்ணே; பொலிந்துளனே சோதியாகி விளங்கியுள்ளான்.

''ஒளிந்தான் புல்லையிற்பொலிந்துளன்; அவன் இவன் என்று புலவாது சொல்வீர்க்குப் புகல்வேன்; என்னைப் புலவாது புல்லைபோய் அவனிமணாளன் பிதா என்று தொழும் எ-று.

83. துளவம் பலர் தொடுத்துச் சூட்டப்
பல்பதி தோற்றியும்கந்
துளவம்பல மரமெய்தச்
செய்வரொத் துளர்க்கிலன்வா
துளவம் பலர்தொழு வான்றொழுந்
தேவாய்த் துலங்கிவிண்பொ
துளவம் பலர்பொழிற் புல்லைத்
துறைவாழ் சுகக்கடலே.

இ-ள்: துளவம் பலர் தொடுத்துச்சூட்ட-திருத்தழாயைப் பல்லோர் தொடைசெய்து சூட்டும்படி; பல்பதி தோற்றியும்- பல திருப்பதிகளிற் றோற்றுதலைச்செய்தும்; கந்துள் அவம்பல மரமெய்தச் செய்வார் - பயமரம் கேடடையக் கரியை உண்டு பண்ணுவாரை; ஒத்துளர்க்கு இலன் - ஒத்துள்ளவர்க்கு இல்லாதவனாவன். வாதுள வம்பலர் தொழுவான் தொழும் தேவாய்த் துலங்கி - வாதுளம் என்னும் ஆகமத்தின் வழிச் செல்வார் தொழுகின்ற சிவபிரான் தொழும் தெய்மாகி விளங்கி; விண் பொதுள-

ஆகாயம் நெருங்க வம்பு அலர்பொழில் புல்லைத்துறை வாழ் - மணம் மலர்கின்ற சோலையினையுடைய புல்லாணித்துறையின் வாழ்கின்ற, சுகக்கடலே - ஆனந்த ஸாகர மாவான் எ-று.

கந்துள்-கரி. பலமரம் அவம்எய்தக் கந்துள் செய்வார் என்க. இவரொத்துத் தீவினை புரிவார்க்கிலன். எ-று.

வாதுளம் - சிவாகம வகையுள் ஒன்று. வம்பலர் - வழிச்செல்வார் 'வம்பலர் பல்கி. சிலப்பதிகாரம் வேட்டு வரி. புல்லைத்துறை உவரித்துறை யாகவும் அதன் கட்டொழ அமர்ந்தது சுகோததியேயா யாயிற்று என்க.

84. சுகந்தரு வர்க்குள் ளுவார்க்குள
மேய துழாயர்க்குவிஞ்
சுகந்தரு வர்க் குட் பதியாகும்
புல்லைச் சுலபர்க்கொரா
சுகந்தருவர்க் கமோ ரேழிற்குங்
கோத்ததுணை வர்க்குமெய்ச்
சுகந்தரு வர்க்குத் தொம்ழும்பா
கிலம்பவங் தோய்ந்தனமே.

இ-ள்: சுகம் தருவர்க்கு - இன்பத்தை அளிப்பவர்க்கு; உள்ளுவார்க்கு உள்ளம் மேயதுழாயர்க்கு - நினைப்பவர் பொருட்டு அருள்ளத்திலே விரும்பியமர்ந்த திருத்துழாயி னர்க்கு, விஞ்சு கந்தருவர்க்குட் பதியாகும் புல்லைச் சுலபர்க்கு - மிக்கு உயர்ந்த கந்தருவகணத்திற்குள் அரசனாகிய சித்ரரதனாகும் புல்லாணியிற்றொழ எளிய ராயினர்க்கு; ஒரு அசுகம் தரு வர்க்கம் ஒரு ஏழிற்கும் கோத்த துணைவர்க்கு - ஓரம்பினை மரக்கூட்டம் ஓரேழினுக்கும் கோத்து விட்ட ஸஹாயருக்கு; மெய்ச் சுகந்தர் உவர்க்கு - திருமேனியில் நமணம் கமழுவாராய் அப்பாலுள்ளவர்க்கு; தொழும்பு ஆகிலம்-அடிமையாகிலம். பவம் தோய்ந்தனமே - பிறவியிலே அழுந்தினம் எ-று.

உள்ளுவார்க்கு என்பது இடைநிலைத்தீபகம். உள்ளுவார்க்குச் சுகந்தருவார்க்கு எனவும் இயைக்க. 'கந்தருவர்க்குட் சித்ரரதன்' என்பது ஸ்ரீகீதை. கந்தருவர் பதியாகியும் புல்லையிற்றொழ எளிய ராயினார் என்க. துணைவர் - ஸுக்ரீவஸகாயர் என்பது குறிப்பு. மரமேழிற்கும் ஒரு கணை கோத்தது அவன்பொருட்டாதல் தெரிக, மெய்ச்சுகந்தர் — "ஸர்வஹந்தஸ்வரஸ:" என்பது வேதம். உவர் என்றது அவர் இவர் என்று சொல்ல முடியாது அப்பாலுள்ளார் எ-று ஆசுகம் - அம்பு.

85. தனத்தா துரங்கலந் தீட்ட முயன்றதனாலிலர்சந்
தனத் தாதுரங் கமழப் பூசியும் மணந்தாங்கிலரீ
தனத்தாது ஏங்க மணவாள புல்லைத்தலத்த மன்ம
தனத்தா துரங்கமு மாவாயென் னார்வெறி தாயினரே.

இ-ள்: தனத்து ஆதுரக் கலந்து ஈட்ட முயன்றதனால் இலர் - செல்வத்தில் ஆசை விரைந்துற்றுச் சம்பாதிக்க வினைமுயன்றதனால் உள்ளவராகாது இல்லாதவராயினார். சந்தனத் தாது உரம் கமழப் பூசியும் மணந்தாங்கிலர் - சந்தனத்தின் பொடி மார்பு மணக்கும் பொருட்டுப் பூசிய இடத்தும் (மெய்க்கியல்பாகிய நாற்றமல்லது) நறுமணம் தாங்கினாரில்லை; ஈதல் நத்தாது - பிறர்க்கு ஒன்று அளித்தலை விரும்பாது; ரங்கமணவாள - ஸ்ரீரங்கத்தில் அழகிய மணவாளனே; புல்லைத் தலத்த - திருப்புல்லாணித் திருப்பதியையுடையவனே; மன்மதன் அத்தா - மன்மதனுக்குத் தந்தையே; துரங்கமும் ஆவாய் - கற்கியும் இனி ஆவானே; என்னார் - என்று வாயானுஞ் சொல்லமாட்டார்; வெறிது ஆயினர். ஒன்றுமில்லாதபடி உண்டாயினர் எ-று.

செல்வமும் யாக்கையும் இப்படியன என்று காட்டிச் செல்வத்திற்குக் கிடைத்த அளவே ஈதலும், யாக்கைக்கு உள்ளபொழுதே கடவுளைச் சொல்லுதலும் பயனென்று அறிவுறுத்தி அங்ஙனமில்லார் வெறிதாயினர் எ-று.

இறைவன் பொருட்டுச் சிறிது முயன்றாலும் உளராவர். தம் மெய்கமழப் பூசியதனை அவனுக்குப் பூசின் மணந்தாங்குவர் என்று உணர்த்துவதுமாம்.

86. தாயாக வந்தனை பேயென்
றுயிருண் டன னடைந்தார்
தாயாக வந்தனைச் சாரதி
யாக்கிவென் றானெணிச்ச
தாயாக வந்தனை செய்வார்க்
கினிப்பவன் றண்புல்லை யேத்
தாயா கவந்தனைத் தீர்த்தா
னருளிற் றவழ் நெஞ்சமே.

இ-ள்: தாயாக வத்தனை பேய் என்று உயிர் உண் டனன் - பேயே நீ தாயாக வந்தனையெனத் துணிந்து அவள் உயிரை உணப் பருகினன்; அடைந்தார் தாய ஆகவம்-தன்னை அடைந்தவரது தாயப் போரை; தனைச் சாரதி ஆக்கி வென்றான் - தன்னைத் தேரோட்டுவனாகச் செய்து கொண்டு வென்றவன். எண்ணிச் சதா யாகவந் தனை செய்வார்க்கு இனிப்பவன்-நினைந்து எப்போதும் வேள்வியால் நமற்காரஞ் செய்பவர்க்குத் தித்திப்பவன் தண் புல்லை ஏத்தாயா - குளிந்த புல்லாணியைத் துதிக்க மாட்டாயா? கவந்தனைத் தீர்த்தான் அருளிற் றவழ் நெஞ்சே-மனமே கவந்தன் என்பவனைச் சாபந்தீர்த்தவன் அருளிற் றவழ்தற் பொருட்டு எ-று.

நெஞ்சே தீர்த்தானருளிற் றவழ்தற் பொருட்டு அவன் புல்லை யேத்தாயா என்று வினாவிக்கொள்க. தாயாகவம்- தாயவழக்குப் போர்.

87. தவழக்கற் றான்மருதிடை யாய்ச்சி தனித்துநெய்பெய்
தவழக்கற் றாகப் பருகினனினூர்முற்றுந் தன்னுடன்போ
தவழக்கற் றாங்கழற் கானடந்தான் புல்லைகண்டருளெய்
தவழக்கற் றாய்நெஞ்ச மேயினி யார்துணைசாம்பொழுதே

இ-ள் : தவழக்கற்றான் வன் மருதிடை - வலியமருது துகளின் நடுவே தவழ்ந்துசெல்லத் தெரிந்துகொண்டவன். ஆய்ச்சி தனித்து நெய்பெய்த அழக்கு அற்றாகப் பருகினன்- இடைச்சி தனிமையாக மறைத்து நெய்யைப் பெய்து வைத்துள்ள சிறுபடி வைத்தபடியே இருக்க நெய்யைக் குடித்தனன்; ஊர்முற்றுந் தன் உடன்போத அழ-ஊரெல் லாம் தன்னோடு கூட வருதற்பொருட்டு அழா நிற்க; கல் தாங்கு அழற்கான் நடந்தான் - மலைதாங்கிய தீக்காட்டிலே நடந்தான். புல்லைக் கண்டு அருள் எய்த வழக்கு அற்றாய் - இவன் புல்லாணியைத் தரிசித்துத் திருவருளெய்தற்கு வழக்கு அற்றவனாயினை. நெஞ்சமே இனியார் துணை சம்பொழுதே - மனமே இனிச் சாகும் தருணத்திலே ஏவர் துணையாவார் எ-று.

கற்றான் என்றது அம் மருது அசுரர் ஆதல் தெரிந் தான் என்பது குறித்தது. ஓராய்ச்சி இவன் கண்டு உண்ணாது தனித்து மறைத்துத் தன்னிடனுள்ள அற்ப மான அழக்கு நெய்யை வைத்துப் போயினளாக, இவன் வைத்த அழக்கு வைத்த இடத்தே வைத்தபடியே இருக்க வும் நெயயை உண்டான். அழக்கு அப்படியே இருத்தலால் அதில் நெய்யுள்ளதென்று நம்பியே யிருந்து பின் எடுத்துப் பார்க்க அமயம் வாய்த்துழி நெய்யின்மைகண்டு இது கண்ணன் களவாம் என்று நினைத்தாள் என்க; இது கண்ணன் விளையாட்டுள் ஒன்று. அழக்கு - ஆழாக்கு என்பது இக்கால வழக்கு; வழக்கு அற்றாய் - புல்லைக்கு நடத்தலை அற்றாய் எனினும் பொருந்தும், 'ஆள்வழக் கறுத்த கண்ணான்' என்பது சிந்தாமணி.

88. சாந்தரு ணத்தினிற் கார்துணை
புல்லைமன்றண் புயத்திற்
சாந்தருணத் திலங்கக் காப்பிட
நினைந்தாயிலை பொச்

சாந்தரு ணத்திலை நன்னெறிச்
செல்கிலை தம்முளுப
சாந்த ருணர்த்தியுங் கேட்கிலை
நெஞ்சே தருக்குவையே.

இ-ள்: சாம்தருணத்து நிற்கு ஆர் துணை - சாகும் சமயத்தில் நினக்குச் சகாயம் ஆவார் யார், புல்லை மன் தண் புயத்தில் - புல்லாணிக் கிறைவன் குளிர்ந்த புயங்களில், சாந்து அருணித்து இலங்கக் காப்பிட நினைந்தாய் இல்லை - சந்தனம் செந்நிறத்து விளங்கக் காப்பிடுதற்கு மனத்தாலும் நினைந்திலை, பொச்சாந்து - மறந்து போய்; அருள் நத்திலை-திருவருளை விரும்பினை இல்லை. நன்னெறிச் செல்கிலை - நல்வழியின் நடக்கிலை; தம் உள் உபசாந்தர் உணர்த்தியும் கேட்கிலை - தம் உள்ளே மனம் உபசமனம் அடைந்தடங்கினர் உணரக் கூறியும் கேட்கின்றிலை, நெஞ்சே-மனமே; தருக்குவையே- கருவித்தலைச் செய்வாயே எ-று.

நெஞ்சே காப்பிட நினைந்திலை நத்திலை செல்கிலை கேட்கிலை தருக்குவை உனக்கு ஆர் துணை என்க. சாந்து - சந்தனம். அருணத்து இலங்க - செவ்விதாக விளங்க, செஞ்சாந்து என்பது குறிப்பு. சந்தனக் காப்பு என்பது வழக்கு. அருள்மொழி கார் மேனி சிவந்த வண்ணத்ததாக விளங்க எனினும் பொருந்தும், வான்மீகி பகவான் யுத்தகாண்டத்தில் (ஸர்க்கம் 21) 'இளஞாயிறு போலொளிவிடும் சந்தனத்தால் முன்னே நிறைந்து விளங்கின புயங்களையுடையன் ஸ்ரீராமன்' என வருணித் தல் காண்க.

89. **குவையா வருத்தம் வளர்த்ததென்**
னெஞ்சேபிறர்க் கோவித்துப்புக்
குவையா வருத்தம் விளைப்பா
யலைப்பைபல் குற்றத்தின்மி

குவையா வருத்தம ரென்பா
யிவற்றாற் கொடிதிருட்கே
குவையா வருத்த மகிழ்புல்லை
மாலருட்கோவிலையே.

இ-ள்: குவையா அருத்தம் வளர்த்து என் - குவியலாகச் செல்வத்தைப் பெருக்கி என்ன பயன்; நெஞ்சே - மனமே; பிறர்க் கோவித்துப் புக்கு வையா வருத்தம் விளைப்பாய் - பிறரை வெகுண்டுபோய் வைது துக்கத்தை விளையச் செய்வாய்; அலைப்பை - கொலை செய்வை; பல்குற்றத்தின் மிகுவை-பல பிழைகளிலே அதிகனாவை. யாவர் உத்தமர் என்பாய் - யாவர் தாம் உயர்ந்த ஒழுக்கினர் என்று கூறுவை; இவற்றால் கொடிது இருட்கு ஏகுவை - இத் தவற்றால் கொடியதாகிய நரகிற்குச் செல்வாய். ஆ அருத்த மகிழ்புல்லை மால் - பசுக்களை ஊட்டுதலான் உள்ள மகிழ்கின்ற புல்லாணித் திருமாலினுடைய, அருட்கோ இல்லையே - திருவருட்கோ இல்லையாயினாய் எ-று.

நெஞ்சே விளைப்பாய் அலைப்பை மிகுவை, என்பாய் அருட்கோ இலை இருட்கேகுவை. இங்ஙனமாகிய நீ அருத்தம் வளர்த்தென் என்க. செல்வம் பெற்றுச் செய்வன இவை என்றும் இவற்றால் நரகேகுவை என்றும் கூறி, அஃது அருள்பெறுதற்கு விரோதி என்றுங் காட்டி வளர்த்து என பயன் என்று வினாவி யறிவுறுத்தியதாம். 'சினமில்லாச் செல்வத்தை சேர்க்க' எனவரும் அறநூற் பகுதிகளாற் செல்வம் செய்வன அறியலாகும்.

90. கோவாலை யத்தியென் றாலது
வாமென்று கூறியுநற்
கோவாலை யத்தி பற்றல் விளை
யாட்டெனக் கூடியும்வெங்

கோவாலையத்தி னெரிந்துங்
குளிர்காற் குளிர்ந்துங்கெடு
கோவாலையத் திருவாழ் புல்லை
மால்புகழ் கோவியந்தே.

இ-ள் : கோஆலை அத்தி என்றால் - அரசனாயுள்ள வன் ஆலமரத்தினை அத்தி மரமென்றுரைத்தால்; அதுவாம் என்று கூறியும்-அவ்வத்தியாகு மென்று அவன் சொற் றதே சொல்லியும்; நற்கோவாலை அத்தி பற்றல் விளை யாட்டெனக் கூடியும்-நல்ல பசுவின் வாலை யானை பிடித் துக் கொள்ளுதல் விளையாடல் என்று அவனொடு சேர்ந் தும்; வெங்கோவ ஆலையத்தின் எரிந்தும்-அவன் கொடிய கோபமுற்றிருக்கும் வீட்டில் வெதும்பியும்; குளிர்காற் குளிர்ந்தும்-அவன் குளிர்ந்தபோது குளிந்தும்; கெடுங்கோ - இவ்வாறு கெடுவேனோ; வாலை அத்திருவாழ்புல்லை மால் புகழ்கோ வியந்தே-இளையளாகிய பிரசித்து பெற்ற திருமகள் வாழ்கின்ற புல்லாணிப் பொருமாளை வியந்து புகழ்வேனோ எ-று.

இறைவனை வியந்து புகழக்கொடுத்த வாய் கொண்டு அரசன் கூறுவன கூறி எரிந்தும் குளிர்ந்தும் கெடுவேனோ அன்றி அவனைத்தான் புகழ்வேனோ அறிகிலேன் எ-று கோப ஆலயம் கோபாலையம் - அரசர் அரண்மனையிற் கோபவீடு உண்மை வான்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில் கைகேசி கோபவீடு புக்கிருந்தனள் எனக் கூறுதலான் அறிக. அவன் கோபத்தாற் றள்ளுமிட மாகிய சிறை முதலியனவுமாம். பாலா என்பது வாலை என வரும்.

91. **வியப்பாவையா நின்னரு ளேத்தி**
லேனென் விதிப்பை யெற்கோ
வியப்பாவை யாப்பெண்டிரைப்
போற்றினேன் காப்புயனென்றுகா

வியப்பாவை யார்மிசை
யும்புகழ்வேனெரி விண்வளிபு
வியப்பாவை யாமப் பறைசூழ்
புல்லாணி விமானத்தனே.

இ-ள் : வியப்பா ஐயா நின் அருள் ஏத்திலேன்-ஐயனே நின்திருவருளை வியப்புடையதாக வைத்துத்துதித்திலேன்; என்விதிப்பை எற்கு - அப்படிப்பட்ட எனக்கு யாது விதிக்கிற்பையோ அறிகிலேன்; ஓவியப் பாவையாப் பெண்டிரைப் போற்றினேன் - சித்திரப் பதுமையாகப் பெண்பாலரைப் போற்றிக்கொள்வேன்; காப்புயன் என்று - கற்பகம் போலும் புயத்தன் என்று; காவியப்பாவை - தொடர்நிலைப் பனுவலுள்ள பாட்டை; யார் மிசையும் - தகாதார்எவர் மேலும்; புழ்வேன் - புகழ்ந்துரைப்பேன். எரி விண் வளி புவி அப்பு ஆவை - தீயும் ஆகாயமும் காற்றும் பிருதுவியும் புனலும் ஆவாய்; யாமப்பறை சூழ் புல்லாணி விமானத்தனே - யாமந் தோறும் வருதற்குரிய பறை சுற்றிவரும் புல்லாணியில் விமானத்தி லிருப்பவனே எ-று.

புல்லாணி விமானம் - ஸ்வஸ்திக விமானம்; யாமப் பறை சூழ்தல் - பாரிவருதல் 'பாரியு மடங்கிய தடங்கியது பாடல்' என்பர் கம்பர், படைத்த வாய்கொண்டு நின் அருள் வியப்ப ஏத்திலேன், பெண்டிரைப் போற்றினேன், அவர்க்கு வேண்டும், பொருள்பெற பாவை யார் மிசையும் புகழ்வேன் எற்கு என் விதிப்பை என்க. உள்ள நரகு விதித்தல் போதாது என்று தோன்றலால் என் விதிப்பை என்றதாம்.

92. மானத்த னைவா யரவணை மாயன் சுவத்திகவி
மானத் தனைவரும் போற்றவண் புல்லை யமர்ந்தவன்ச
மானத் தனையென்று மில்லாத் திருமண வாளனருள்
மானத் தனைத்தா னளிக்குவ் கொலோவுடன்
[மன்னுயிரே.

இ-ள் : மால் நத்தன் ஐவாய் அரவு அணை மாயன் - திருமால் சங்கேந்தினவன் ஐந்துவாயையுடைய பாம்பை அணையாகவுடைய மாயோன். சுவத்திக விமானத்து - சுவத்திகம் எனப்பட்ட விமானத்தின் கண்ணே; அனைவரும் போற்ற-எல்லோரும் வழிபட; வண்புல்லை அமர்ந்தவன் - வண்மையையுடைய புல்லாணியில் வீற்றிருந்தவன்; சமானத்தனை-ஒப்பானை; என்றுமில்லாத் திருமணவாளன் - எஞ்ஞான்றும் இல்லையான திருமகள் கணவன். அருள் மான - இவன் அருள்போல; தனைத்தான் அளிக்குங் கொலோ - தன்னைத்தானே இரக்ஷித்து கொள்ளுமோ; உடன் மன் உயிரே - சரீரத்தில் மன்னும் உயிர் எ-று.

இவன் அருளைப்போல உடல் மன்னிய உயிர் தன்னைத்தான் அளிக்குங் கொல்லோ என்க. உடலின் மன்னுதற்கும், அவன் அருள் வேண்டும் என்பது குறிப்பு; சமானத்தனை இல்லாமை திருமணவாளனாதல் கொண்டறிக என்று தேற்றியவாறு. மன்னுயிர் இவ்வுலகத்திலும் பெருவீட்டிலும் அவனருள போலத் தன்னைத்தானளிக்குக் கொல் என்க. ஈரிடத்தும் அளிப்பது அவனருளே என்பது கருத்து.

93. மன்றா னியங்கா திசைமாந்த
வேய்ங்குழல் வாய்வைப்பன்பொன்
மன்றா னியங்காத் தடியெடுத்
தாட மகிழ்பரந்தா
மன்றா னியங்கா டெலாம்வினை
புல்லை வரனருட்க
மன்றா னியங்கா ணுவர்பெரு
வீட்டினில் வாழ்பவரே.

இ-ள் : மன்று ஆன் இயங்காது - அனிரைகள் தத்தம் மன்றுகளுக்குச் செல்லாது நின்று; இசை மாந்த - பண்ணோசையே பருக; வேய்ங்குழல் வாய் வைப்பன் - புல்லாங்குழல் திருவாயில் வைப்பவனாவன். பொன்

மன்றான் இயங்காத்து அடிஎடுத்து ஆட - பொன்னம் பலத்தை உடையவன் இசையைக் காத்துக்கொண்டு அதற்கியையத் தன் அடியைத் தூக்கி ஆடாநிற்க; மகிழ் - திருக்கண் சாத்தி மகிழ்கின்ற; பரந்தாமன் - பரஞ்சுடரா யுள்ளவன்; தானியம் காடு எல்லாம் விளையும் புல்லை வரன் - கூல வகைகள் காடு முழுதும் விளைகின்ற புல்லாணியிலுள்ள தலைவன்; அருட்கு அமன்று ஆனியம் காணுவர் - இவன் திருவருளுக்கு நெருங்கி நித்திய பூசையைத் தரிசிப்பார்; பெரு வீட்டினில் - செயற்கரிய மோக்ஷத்தில்; வாழ்பவரே - வாழ்ந்திருப்பவராவர்.

தான் இசையுடையன் என்றும், சிவபிரான் இசை யாட்டத்திற்கு மகிழ்பவன் என்றும் கொள்க. மன்று - நிரை இளைப்பாறும் இடம். 'மன்று நிறையு நிரை யென்கோ' என்ப. மன்று பின்னது அம்பலம். இயம் காத்து - இசைக்கு விரோதியாது காலங்காத்து; அமலல் - நெருங்கல், ஆனியம் - தினசரி, நித்திய நிகழ்ச்சி; ஆனியம் தாம் செய்யும் நித்திய கன்மம் எனினும் அமையும்.

94. **பவராக மாய விடாது பிணிக்கப்புன் பாழிருள் சேர்**
பவராக மாய விருப்பீர் பரவுமின் பாருளுவப்
பவராக மாயவர் புல்லைப் பிரானார் பராற்பரவை
பவராக மாயம னாற்பிரிப் பார்திருப் பாதங்களே.

இ-ள்: பவராகம் - பிறவிக்குக் காரணமாகிய ஆசை; ஆய விடாது பிணிக்க - உம்மை ஆராயவிடாது கட்டு தலால்; புன் பாழ் இருள் சேர் பவராக மாய இருப்பீர் - புல்லிய பாழ்த்த நரகிற் பொருந்துவாராக மாய்தற்கு இருக்கின்ற நீர், பரவுமின் - துதி யுங்கோள்; பார் உள் உவப்ப வராகம் ஆயவர் - பார்மகள் உள்ளம் மகிழ ஆதிவாராக மூர்த்தி ஆயினவர். புல்லைப் பிரானார் - புல்லாணியிலுள்ள பெருமானார். பராத்பர வைபவர் - உயர்ந்ததற்கு உயர்ந்துள்ள எல்லாம் உண்டு பண்ணி னவர். ஆகம் மா யமனாற் பிரிப்பார் - உடம்பினை கரிய

காலனாற் பிரிப்பவர்; திருப்பாதங்களே - இவருடைய திருவடிகளையே எ-று.

மாயவிருப்பீர் பாதங்களே பரவுமின் என்க. யமனால் ஆகம் பிரிப்பார். அதனால் மாயவிருப்பீர் பரவுமின் என்க. வராக மாயவர் என்பது சௌலப்யம். பாராற்பர வைபவர் - பரத்வம். இதனை ''அருமையில் எளிய அழகு'' என்பர் பிறர். உடலை உயிரோடு பிரமனாகிய அதிகாரி புருடனாற் சேர்ப்பது போல யமனால் உயிரோடு சேராது உடலைப் பிரிப்பர் என்க. இங்ஙனம் ஸ்ருஷ்டி விநாசங் களை அதிகாரி புருடராற் செய்பவர் இவ்வுலகைக் காப்பது மட்டில் தம் தொழிலாகக் கொண்டார். ஆதலின் பாருள் உவப்ப வராக மாயவர் என்க.

95. **தங்கத்தனைய சுடர்மேனி மாயனைத் தண்புல்லையிற்**
றங்கத்தனை வைத்து வீடும்புரக்கும் சகபதியைத்
தங்கத்தனைப் பரவார் காமதீபந் தனில்விழும்ப
தங்கத் தனைசுட மாய்வ ரந்தோபல சன்மங்களே.

இ-ள் : தங்கத்து அனைய சுடர்மேனி மாயனை - பொன் ஒளியை ஒத்த சுடர் விடுகின்ற திருமேனியை யுடைய மாயோனை; தண்புல்லையில் தங்கத் தனை வைத்து - குளிர்ந்த புல்லாணியிலே நிலைபெறத் தன் திருவுரு வைத்து; வீடும் புரக்கும் - இவ்வுலகுடன் மோக்ஷ லோகத்தையும் காக்கின்ற; சகபதியை - செகந்நாதனை; தம் கத்தனை - தமக்குத் தலைவனை. பரவார் - துதிக்க மாட்டார், காமதீபங் தனில்விழும் பதங்கத்து - காமம் ஆகிய விளக்கில் விழுகின்ற விட்டிலை ஒத்து; அனை சுட மாய்வர் - நெருப்புச் சுடுதலால் இறந்தொழிவரே யாவர், அந்தோ பல சன்மங்களே - ஐயோ, பல பிறவி யிலுமே எ-று.

பரவார் பல சன்மங்களே மாய்வர் அந்தோ என்க. ''நிறைத்த சோதி வெள்ளஞ் சூழ்ந்த நீண்ட பொன் மேனியொடும்'' என்பர் நம்மாழ்வார். உலகிலும்

வீட்டிலும் ஒக்கக் காவலே யுடையன் இறைவன் என்க. செகந்நாதன் என்பது தெய்வச்சிலையார் திருநாமம்.

96. மங்கள வாச்சிய வோசையறாப்
புல்லை மால்பிறர்நா
மங்க ளவாச்சிய மென்றிருப்
பார்சொலு மாயவன்கா
மங்கள வாய்ச்சியர் பாற்செய்த
வன்பனை வாழ்த்திற்சுடர்
மங்கள வாச்சியம் பெய்திரி
போலொளி மல்குவிரே.

இ-ள் : மங்கள வாச்சிய ஓசை அறாப் புல்லை மால் - மங்கள வாத்தியங்களின் ஒலி நீங்காத புல்லாணியிலுள்ள பெரியோன்; பிறர் நாமங்கள் அவாச்சியம் என்று இருப்பார் - அந்நியர் பெயர்கள் வாயாற்சொல்லத் தக்கன இல்லை என்று ஒரு துணிபுற்றிருப்பவர்; சொல்லும் மாயவன் - செபிக்கும் மாயோன்; காமம் களவு ஆய்ச்சியர் பாற் செய்த அன்பனை - காமத்தையும் களவினையும் ஆக்களையுடைய பெண்டிர்பால் அன்பினாற் செய்தவனை; வாழ்த்தின் - வாயால் வாழ்த்துவீராயின்; சுடர் மங்கு அளவு ஆச்சியம் பெய் திரிபோல் - தீச்சுடர் மங்கும் அளவிலே நெய்பெய்த திரியைப்போல; ஒளி மல்குவிர் - தேசு பெருகுவீர் எ-று.

பிறர் நாமங்கள் அவாச்சியம் என்றிருப்பார் - பரமேகாந்திகள். பிறர்க்கு விலக்குண்ட காமங் களவுகளை அவர் அன்பிற்காகச் செய்து விளையாடினான் என்க. ஆச்சி - ஆ உடையவள். இனி ஆய்ச்சி என்பது இக்காலத்து ஆச்சி என வழங்குவது. அஃதாயினும் இழுக்காது. ஆச்சியம் - நெய்.

97. குவித்த கரம்பர வும்வாய்
கருதுளங் கூர்ந்தியல்வெ
குவித்தக ரம்பதிகங் கண்பெயத்
தொழுங் கோனல்லொழுக்

குவித்தக ரம்பழுக்கும் புல்லை
யான்றளி கொண்டுதிறக்
குவித்த கரம்பனக ராளி
யெங்கள் குலதெய்வமே.

இ-ள்: குவித்த கரம் - குவித்த கையும்; பரவும் வாய் - துதிக்கும் வாயும்; கருதுஉளம் - சிந்திக்கும் உள்ளமும்; கூர்ந்து இயல் வெகுவித்தகர் - மிக்கு ஒழுகுகின்ற பல விதச் சதுரப்பாடுடையார்; அம்பு அதிகம் கண்பெய - அதிகமான நீரை விழிகள் பொழியாநிற்க; தொழும் கோன் - தொழுகின்ற இறைவன்; நல் ஒழுக்கு வித்து அகரம் பழுக்கும் புல்லையான் - நல் ஒழுக்கமாகிய வித்து பார்ப்பார் திருவிருப்பிலே பயன்கனியும் புல்லாணிப் பதியினன்; தளிகொண்டு திறக்குவித்த கரம்பன்நக ராளி - கோயில் கொண்டு வாயில் திறக்கும்படி செய்த திருக்கரம் பனூரை ஆள்பவன். எங்கள் குலதெய்வமே - எங்களுக்குக் குலதெய்வம் எ-று.

முதலிற் கரணத்திரயமும் ஒருப்படியாதல் கூறிற்று: வித்தகம் - சதுரப்பாடு. உள்ளம் உரை செயல் மூன்றும் ஒற்றுமைப்படுதல் வித்தகர்க்காம், என்பது குறிப்பு. அம்பு அதிகம் கண் பெய என்றது ஆனந்தபாஷ்பம் ஒழுகுதலை. அகரம்-பார்ப்பனர் திருவிருப்பு. 'நத்தம் திருவிருப்பு என்பது முற்காலந்தொட்ட வழக்கு. கோயில் கொண்டு கதவடைத்துள்ள திருப்பதிகளின் வேறாகக் கதவே இல்லாதபடிசெய்து எல்லார்க்கும் வாயில் திறப்பித்த திவ்ய தலம் திருகரம்பனூர் என்பது அறிக. இச் சிறப்பானன்றே இஃது உத்தமனூர் எனப்பட்டது இது பிருகுமஹா முனி மூவரில் விண்டுவே உத்தமன் எனக் கண்டு வழிபட்ட தலம். அடையாத வாயிலுடைய சிறப்பால் இச்சரணாகதி விளைநிலத்தோடு சேர்த்துக் கூறப்பட்டது. பழுக்கும் - எல்லா நன்மைக்ளும் கனியும் எ-று. 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' என்பது திருக்குறள்.

ஒழுக்கு-ஒழுக்கம் ''அறினொன்றோ வான்ற வொழுக்கு'' என்ப.

98. குலவாய ரான்கன் றெனப்புகு வாய்கோ குலனின்முன்னா
குலவாய ராவலைத் தீராது கானே குவைபெண்களல்
குலவா யராகந் தலைக்கேறி வீணாள் குலையவெந்நு
குலவா யராவிற் கெடுவேனைக் காபுல்லைக்குட்பரனே.

இ-ள்: குல ஆயர் ஆன் கன்று எனப் புகுவாய்-ஆயர் குலத்தவருடைய பசுக்களாகவும் கன்றுகளாகவும் புகுபவனாவை; கோகுலனில் - கோகுலத்திலே; முன் ஆகுல ஆயர் ஆவலைத் தீராது கான் ஏகுவை - பண்டு துக்கம் உள்ள தாய்மாருடைய ஆசையைத் தீராமற் காடு புகுவாயாவை. பெண்கள் அல்குல் அவாய் அராகம் தலைக்சேறி பெண் பாலாருடைய நிதம்பத்தை வேட்டு அதனால் ஆசை தலைக்கொண்டு மீச்சேறலால், வீண் நாள் குலைய-வீணே நாள் குலைந்து கழிய. வெம் நகுலவாய் அராவிற் கெடுவேனை - கொடிய கீரியின் வாய்ப்பட்ட பாம்பு போல அழிகின்ற என்னை; கா - காப்பாயாக; புல்லைக் குட்பரனே - புல்லாணிக்குள் எழுந்தருளிய பரமனே எ-று.

பிரமன் நிரைகளை ஒளித்தபோது கண்ணன் நிரையாகி அவரவ ரில்லந்தொறும் புக்கனன் என்னும் திருக்கதையை ஸ்ரீ பாகவதத்திற் காண்க. ஆகுலம் - வருத்தம், ஆயர் - பின்னது தாய்மார். ஆவல் - முடிசூடிப் பார்க்க வேண்டுமென்னும் பேராசை. சம்பந்தமில்லாத இடையர்க்கு விலங்கும் ஆவை. சம்பந்தமுடைய தாயர்க்கு வேண்டுவது செய்யாது பிரிந்து காடு போவாய், உன் செய்கை உணர்வரிது என்க. யான் பாம்பனைய தீயனேனும் என்னைக் கெடுக்கவல்ல பெண்டிர் பாம்பைக் கெடுக்க வல்ல நகுலம் அனையர் என்க.

99. குட்ட வியாதி பல தீரர
சாகுவன் முனம் பொ
குட்ட வியாதியினை வேந்துணா
துண்குவன் றண்புல்லைக்
குட்ட வியா திலகும் பரன்கொப்
பூழ்க்குள விழுமொக்
குட்ட வியா திருந்துண்டாமண்
ணோடு ககோளமுமே.

இ-ள்: குட்ட வியாதி பல தீர் அரசு ஆகுவன் - குட்டம் முதலிய பல நோய்களைத் தீர்க்கும் திருவரசு ஆவான். முன்னம் பொகுட்டு அவியாதியினை - பண்டு மலையில் தேவருண்டி முதலாகிய தின் பண்டங்களை; வேந்து உண்ணாது உண்குவன்- இந்திரன் உண்ணாதபடி தானே உண்பான் தண்புல்லைக்குள் தவியாது இலகும் பரன் - குளிர்ந்த புல்லாணிப் பதிக்குள் சுடாது ஒளிவிளங் கும் பரமன்; கொப்பூழ்க்குள் அவிழும் மொக்குட்டு - திருநாபியிலுள்ள மலர்தற்கு உரிய முகிழிடத்ததாய்; அவியாது இருந்து உண்டாம் - கெடாதபடி பிரளயத்தி லிருந்து பின் உண்டாகும்; மண்ணோடு ககோளமுமே - பூவட்டத்துடன் வானவட்டமும் எ-று.

இத்தலத்திலே தெய்வம் திருவரசாகி இருப்பதென்ப தும் அதனைத் தரிசிப்பார்க்கு நோய் அடையாதென் பதும்,

பெருவயிறு கண்டமாலை யுதரவலி யண்டவாயு
பிரமிய கிரந்திசூலை தலைநோயும்
இருமலொடு தந்தவாயு குருடு செவிடுஞ் சொலூமை
இவைமுதல தொந்தரோக வினையாவும்
ஒருநொடியி லஞ்சியோடும் வறுமையொடு சஞ்சிதாதி
யுபரியினடைந்த பாவ மவைதாமும்
மருமலர் பிறந்த கோதை மருவி வளரும் புலாணி
வளரரக கண்டுளோரை யணுகாவே.

என்பதனால் அறிக. பொகுட்டு - மலை; அவி-தேருணவு; தவியாது இலகுதல் - உஷ்ணஞ் செய்யாது விளங்குதல்; நெருப்பின் விளக்கத்தின் வேறென்று குறித்தது. கொப்பூழ் - நாபி; மொக்குட்டு - மொச்குளிடத்தது; வேந்து - இந்திரன். 'வேந்தன் மேய தீம்புன லுலகமும்' என்பது தொல்காப்பியம் 'மரங்களுள்ளே அசுவத்தம் யான்' என்பது ஸ்ரீகீதை. அங்ஙனமாதல் இத்திருப்பதியிலே உள்ளது என்க. தவியாமை மட்டுமன்று தட்பமும் உண்டு என்பதற்குத் தண்புல்லை எனப்பட்டது.

100. **கோளத் தனையு நிலைகுலை**
யாதொளி கூர்ந்திவர்க
கோளத் தனைபெரு வீடுடை
யானைக் குறைவறுமீக்
கோளத் தனைவீட ணற்கெளி
யானைக் குணந்துதியுங்
கோளத் தனைச்சொல மிக்கானை
வந்து குளிர்புல்லையே.

இ-ள்: கோள் அத்தனையும்- அத்தனை கிரகங்களும்; நிலைகுலையாது - தத்தம் நிலையினின்று மாறாது; ஒளி கூர்ந்து - சுடர்மிக்கு, இவர் ககோளத்தனை - ஏறிச் செல்கின்ற வான் வட்டத்தையுடையவனை; பெருவீடு உடையானை - யாருஞ் செய்தற்கரிய மோக்ஷத்தினைத் தனதாகவுடையவனை; குறைவு அறும்மீக்கோள் அத்தனை - எசகுறைவுமில்லாத பெருமிதத்தையுடைய ஸர்வலோக பிதாவை; வீடணற்கு எளியானை - ஸ்ரீவிபீஷண ஆழ்வானுக்குப் புகற்கு எளியவனாகியுள்ளவனை; அத் தனைச் சொல் மிக்கானை - அகாரம் தன்னை மொழியும்படி எல்லாரினும் மிக்குள்ளவனை; குளிர்புல்லையே வந்து - உடலும் உயிரும் வெக்கை தீரக் குளிர்தற்குக் காரணமான திருப்புல்லாணியில் வந்து; குணம் துதியுங்கோள் - குணங்களால் எடுத்துப் பரவுமின் எ-று.

ககோளம் - வானவட்டம், துதியுங்கள் என்பது பலரைக் கூவியுரைப்புழித் துதியுங்கோள் என வழங்கும். ''அக்கரங்களில் அகார மாவேன்'' என்பது ஸ்ரீகீதை. துதியுங்கோள் என்றது 'கொள்வீர் கொடியேனுயிரைக் கொணர்வீர்' (1376) என்னுஞ் சிந்தாமணியுரையுள் நச்சினார்க்கினியர் கொணர்வீர் என்பதற்குக் 'கொண்டு வாருங்கோள் எனவுரை கூறியது போலப் பலரைச் சேரவைத் தேவற்கண் வந்தது.

புல்லையந்தாதி யமகக் லித்துறை
நூறும் நிறைவேறியது
தெய்வச்சிலையார் திருவடிகளே சரணம்!
கருணாகரன் திருவடிகளே சரணம்!

ஆங்கிரீஸ ஹு தை [illegible] (1933)

பாடல் முதற்குறிப்பு அகராதி

(எண் : பாடல் எண்)

அருவருக்கத் தகும் 9
ஆளானஞ் சாயகன் 10
இருந்தைய மாவாசை 67
இலைக்கா வலர்க் 66
இறையா வருந்தரங் 57
எண்கூற்றின் வாய்வைத் 56
எய்யாத் தடித்தின்னல் 13
எற்கணையா காப்பு -4
என்பா பரணம் 3
என்றலைக் காவிரிஞ்சன் 65
ஏனைய வரனைத் 12
ஐயாலங் கானகஞ் 33
ஒண்புல்ல னிட்ட காப்பு-2
கட்காதலைக் காதிடர் 79
கடப்பார மரும்புய 77
கடுக்கன லாயுதங் 80
கண்டக ராகவம் 62
கண்ணனை யாதவனை 30
கத்திய மாதங்கமுன் 78
கதிக்கல மந்தக் 64
கரவந்த நன்கனி 22
கருணா கரவான் 29
கலவி யவாவன் 61
கற்றவ ராக 63
காரார் கடற் காப்பு-5
கான மருந்தின 81
கிலமா வருந்திக் 44
குட்ட வியாதிபல 99
குதியா வருங்கால 47
குலவாய ரான்கன் 98
குலையா வருத்தம் 89
குவித்தகரம் பரவும் 97
கேதநத்தஞ் 31
கையாதவனை 50
கோதண்ட ராமன் 59
கோதமனம் பன்னி 60
கோவலங்காரமெலா 48
கோவாலை யத்தியென் 90
கோளத்தனையு நிலை 100
சாந்தருணத் தினிற் 88
சுகந்தருவர்க்கு 84
சுரத மிக்காய 4
தகையா மலகன் 20
தங்கத் தனைய சுடர் 95
தந்தன மென்மருங்குற் 55
தரமோதரமிக்க 16
தராவிரும் பாத 25
தருப்பாத நஙனைந்திடு 24

தலங்காத்தலை 15
தலையாலங் கானம் 26
தவழக் கற்றான் 87
தவறா விதையத் 54
தனத்தா துரங்கலந் 85
தனையறு மானத் 28
தாதனிச் சம்பவ 21
தாயாக வந்தனை 86
திருவறங் காமுறத் 52
துமிதந் தமர 58
துளவம் பலர் 83
தேவகி லேசமும் 51
நமற்கார வுய்த்த 27
படவரத் தணையா 72
படிக்கா மனைத்தும் 23
பண்ணாரி யன்பி 70
பதக்கா வலரை 42
பதியா தியங்க 7
பதையா வருந்து 18
பரசமபக் கரு 5
பரமதியாக 8
பரவையி னாகலவக 17
பரிசைய மன்ற 6
பவராக மாய 94
பவள மலைக்குட் 74
புவனா சனமிசைக் 68
பனவ னுமாபதி 41
பாடகத் தாயின 69
பாடிய மானவை 43
மாய மகம்பரந் 73
பானத் தமரர் 76
பானலங்காரமென் 75
பிணிக்கா வலைக்கும் 19
புரியா வையினுஞ் 2
புல்லா ரணியன் 32
புல்லையம் பாக்கத்தான் 1
புலவாதவனிவ 82
புளிப்புற்றிவா காப்பு-1
மக்க ளருந்ததி 45
மங்கள வாச்சிய 96
மத்தாக மந்தரம் 34
மதியிற் குறையலனா காப்பு-3
மாஞ்சத்த மாமலை 36
மன்றா னியங்கா 93
மாகந்த மாதனமா 40
மாய மநந்தம் 37
மானத்தனை வாயர 92
முதலைக் கடலைப் 11
வதமாவி நைய 53
வலத்த வராக 38
வனமா தவர்தவப் 49
வாத மருந்திய 35
வரதா சனகி 46
வியப்பா வையா 91
வையம் பனைய 14
வீவயா கரணர் 39

மகாவித்துவான் படைப்புகள்

பதிப்பு நூல்கள் (15)

அ) சங்க நூல்கள் (4)

அகநானூறு	1901, 1931
குறுந்தொகைவிளக்கம்	1946
பெரும்பாணாற்றுப்படை	1949
பட்டினப்பாலை	1951

(ஆ) பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் (4)

இனியவை நாற்பது	— பழையவுரையுடன்
ஐந்திணை ஐம்பது	— ,,
திணைமாலை நூற்றைம்பது	— ,,
நான் மணிக்கடிகை	— ,,

(இ) இலக்கண நூல்கள் (3)

நேமிநாதம்—மூலமும் உரையும்	1903
பன்னிரு பாட்டியல்	
தொல்காப்பியம் : செய்யுளியல் நச்சினார்க்கினியருரை	1917

(ஈ) பிற நூல்கள் (4)

கனா நூல்
திருநூற்றந்தாதி
புலவராற்றுப்படை
முத்தொள்ளயிரச் செய்யுட்கள்

ஆசிரியர் இயற்றிய நூல்கள்

கவிதை நூல்கள்

பாரிகாதை	1937
புலியெழுபது	1927
தொழிற் சிறப்பு	1932

திருவடிமாலை 1933
இராசராச சேதுபதி ஒரு துறைக்கோவை 1984
ஆத்தி சூடி உரை 1985
திருவேங்கட மாயோன் மாலை 1996
திருப்புல்லாணி யமக வந்தாதி 1996
நன்றியில் திரு

உரைநடை நூல்கள்

சேது நாடும் தமிழும் 1924
வஞ்சிமாநகர் 1932
அண்ட கோள மெய்ப்பொருள் 1934
நல்லிசைப் புலமை மெல்லியலார்கள் 1932
தமிழ் வரலாறு 1941
தித்தன் 1949
கோசர் 1951
செந்தமிழ்க் கட்டுரைகள் 1987
இனிய இலக்கியங்கள் 1992
கவிச்சக்கரவர்த்தி கம்பர் 1994
செந்தமிழ் இன்பம் 1994
தமிழகக் குறுநில மன்னர் 1995

(இ) மொழிபெயர்ப்பு

அபிஜ்ஞான சாகுந்தலம் 1938

(ஈ) அச்சிடப் பெறாத நூல்கள்

இரகுவம்சம்
ஸீதாகலியாணம்
பகவத்கீதைத் தாழிசை
பாரதநீதி
பல்லட சதகம்
காவல் தலைமை
கடவுள் மாலை